கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(23.04.2017 - 23 சித்திரை 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 158, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



எமது நாட்டின் புனிதரான புனித யோசேவ்வாஸின் பிறந்த நாள் 21.04.2017 அவரிடம் எமது நாட்டுக்காக மன்றாடுவோம்



பக்கம் 04 இறை இரக்கப் பெருவிழா



பக்கம் 06 இயேசுவும் பேதுருவும்



பக்கம் XIX வழிதுணையாய் வந்தவர்

# இரங்கல் செய்தி



மீத்தொட்டமுள்ள மக்களுக்கு அண்மையில் இடம்பெற்ற கொடூரமான சம்பவத்தை குறித்து எனது ஆழ்ந்த இரங்கல் அனுதாபத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உறவுகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் கூறுவது யாதெனில் பாதிக்கப்பட்ட இக்குடும்பங்களுக்கும், அவர்கள் இழந்த சொத்துக்களுக்கும் உங்களால் இயன்ற உதவிகளை புரியவும், உங்கள் செபத்தில் அவர்களை நிறைவு கூறுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

குப்பை கூலங்களை அகற்றுவதன் மூலம் இப்பிரச்சினைக்கு ஒரு இடர்பாடான சூழ்நிலையை கையாளும் ஒரு சிறந்த முயற்சியை தீர்மானிக்குமாறு அரசாங்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வதோடு ஏனைய இடங்களிலும் இவ்வாறான துயரமான சம்பவங்கள் மக்களை பாதிக்காத வண்ணம் இடம் பெறாமல் இருக்க சிறந்த தீர்வை காணுமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் , அதிமேதகு கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**

# உயிர்த்த இயேசு நாம் வாழும் காலத்தில் அமைதியை அளிப்பாராக!



## உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறன்று திருத்தந்தை வழங்கிய உயிர்ப்புப் பெருவிழா சிறப்புச் செய்தி

**அன்பு சகோதர, சகோதரிகளே, உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!**

”இயேசு உயிர்த்துவிட்டார் அவர் உரைத்ததுபோலவே உயிர்த்துவிட்டார்” என்று சீடர்கள் கூறிய அற்புதச் செய்தியை, திருஅவை, இன்று, உலகெங்கும் எதிரொலிக்கிறது. அடிமைத்தனத்திலிருந்து எபிரேய மக்கள் விடுதலை பெற்றதைக் கொண்டாடும் பாஸ்கா திருவிழா, இந்நாளில் நிறைவைப் பெறுகிறது. தன்னுடைய உயிர்ப்பினால், கிறிஸ்து, நம்மை, பாவத்திலிருந்தும், சாவிலிருந்தும் விடுவித்து, நித்திய வாழ்வின் வழியைத் திறந்துள்ளார். பாவங்கள் ஆதிக்கம் செலுத்தும்போது, நாம் வழிதவறிச் செல்கிறோம். ஆனால், நல்லாயனான இறைவன், நம்மைத் தேடி வருகிறார். நம்மை விடுவிப்பதற்காக, சிலுவை மரணம் வரை தன்னையேத் தாழ்த்துகிறார்.

15

# “ஒரு சிறந்த குருவை இனங்காண்பது அவருடைய மந்தைகளின் சாட்சிய வாழ்விலிருந்தே”



**திருத்தைலம் ஆசீர்வதிக்கும் திருப்பலியில் கர்தினால் ஆண்டகை**

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் தலைமையில் கடந்த மாதம் 10ஆம் திகதி பொரள்ளை சகல புனித வாளர் ஆலயத்தில் திருத்தைலம் அபிஷேகம் செய்யும் திருச்சடங்கு இடம் பெற்றது. பேராயர் அவர்களோடு இணைந்து ஏனைய ஆயர்களும், மறைமாவட்ட குருக்கள், துறவிகள், இறைமக்களும் இணைந்து சிறப்பித்தனர். இத்திருப்பலியின்போது எமது பேராயர் அவர்கள் ஆற்றிய மறையுரையானது...

“ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது, ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்” எசாயா 61:1).....

15




# பாத்திமா அன்னை காட்சி கொடுத்த அருளாளர்களான பிரான்சிஸ், ஜெசிந்தா இருவரும் புனிதர்களாக அறிவிப்பு!!!

– திருத்தந்தை –

15

## கொழும்பு உயர் மறைமாவட்டத்திலிருந்து

# இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு 15 குருக்கள் திருநிலைப் படுத்தப்படுகின்றார்கள் 29.04.2017



இத்திருநிலைப்படுத்தும் திருப்பலி 29.04.2017 அன்று சனிக்கிழமை கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறுகிறது.

**ஆண்டவரே, வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர் (திபா 16)**

# புனித யோசேவ்வாஸ் ஆண்டில் இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு உயர் மறைமாவட்டத்திலிருந்து 15 புதிய குருக்கள்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் குருத்துவ பணியினை தொடர்ந்தாற்றும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும், 15 புதிய தியாக்கோன் அருட்சகோதரர்களை குருக்களாக திருநிலைப்படுத்தும் திருப்பலியானது கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 2017, சித்திரை மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெற உள்ளது.

இவ்வருட்சகோதரர்கள் கடந்த வருடம் மார்கழி மாதம் 10ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் கரங்களினால் ராகமை, தேவத்தை இலங்கை அன்னை பெசிலிக்காவில் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். இத்தியாக்கோன் அருட்சகோதரர்கள் குறித்து தகவல்கள் ஞான ஒளி பத்திரிகைக்காக....



### அருட்சகோதரர். பீ.ஏ.டீ. ஜனக்க ஜயமால்

பிறப்பு : 1988 புரட்டாதி 11ஆம் திகதி
பெற்றோர் : திரு. பொன்வீர ஆராச்சிகே தொன் சிரில் அன்டனி, திருமதி. தம்மன ஆராச்சிகே தொன் லியனகே பிரிஜட்
பங்கு : பட்டகம, கப்புவாகார, குணமளிக்கும் ஆண்டவரின் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, கப்புவாகார குணமளிக்கும் ஆண்டவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். மாரியன் கிரிஷான் பீரிஸ்

பிறப்பு : 1978 ஐப்பசி 10ஆம் திகதி
பெற்றோர் : திரு. குரு குலசூரிய மேரியஸ் லோரன் பீரிஸ் திருமதி. மரியா விக்டோரியா ப்லாஜ்
பங்கு : மாரவிலை பங்கில், புனித காணிக்கை அன்னை ஆலயம்.

**இவர் தனது முதலாவது திருப்பலியை மாரவில புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். டபிள்யு. திலுஷ சாமர பெரேரா

பிறப்பு : 1988 ஐப்பசி 13ஆம் திகதி
பெற்றோர் : திரு. வதவலகே விஸேதாச பெரேரா, திருமதி. தொன் சுஜாதா காந்தி
பங்கு : சீதுவ, அமல உற்பவ அன்னை ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு, சீதுவ, அமல உற்பவ அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.**



### அருட்சகோதரர். ஜோசப் சுராஜ் பர்னாந்து

பிறப்பு : 1980 பங்குனி 28ஆம் திகதி
பெற்றோர் : அமரர். அந்தனி அமல்ராஜ் பர்னாந்து, திருமதி. மரிய சுதர்ஷனி மிரெண்டா
பங்கு : நீர்கொழும்பு கடற்கரை தெரு, ஏத்துகால புனித சில்வஸ்டர் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 7.15 மணிக்கு, ஏத்துகால, புனித சில்வெஸ்டர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். ஜெ.எம்.டீ புத்திக தனஞ்சய ஜயமான்ன

பிறப்பு : 1988 மார்கழி 15ஆம் திகதி
பெற்றோர் : திரு. ஜயமான்ன மோஹோட்டிய தொன் ஜோர்ஜ் என்தனி ஜயமான்ன, திருமதி, மேரி பெக்ஷீடா
பங்கு : போபிட்டிய, புனித நிக்கலஸ் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு, போபிட்டிய, புனித நிக்கலஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். ப.ஆ கிருஷ்னக்க டிலான் பெரேரா

பிறப்பு : 1981 மார்கழி 13ஆம் திகதி
பெற்றோர் : திரு. பனாகொட ஆராச்சிகே பெசில் பெரேரா. திருமதி. கிறிஸ்டா வேவிட்ட
பங்கு : தளுகம, புனித பிரான்சிஸ் சாலஸ் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 7ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, தளுகமை, புனித பிரான்சிஸ் சாலஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். டபிள்யு. இம்மானுவேல் ஜிப்சன் பர்னாந்து

பிறப்பு : 1989 பங்குனி 20ஆம் திகதி
பெற்றோர் : திரு. வர்ணகுலசூரிய டாசன் பர்னாந்து, திருமதி. ரோஸ் மல்லிக்கா
பங்கு : நீர்கொழும்பு, கடற்கரைதெரு, புனித செபஸ்தியார் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, கடற்கரைத்தெரு, புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.**



### அருட்சகோதரர். எல். டீ. சஞ்சீவ அப்புஹாமி

பிறப்பு : 1983 மார்கழி 16ஆம் திகதி
பெற்றோர் : திரு லியனகே தொன் விக்டர் சுனில் அப்புஹாமி திருமதி. ராஜபக்ஷ கங்கானமலாகே அனட் ராஜபக்ஷ
பங்கு : நீர்கொழும்பு, கொச்சிக்கடை, பள்ளன்சேனை பரிசுத்த ஆவியாரின் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 7.30 மணிக்கு, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, பரிசுத்த ஆவி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். எஸ். ரீ. நிமேஸ் கிரிஷாந்த சில்வா

பிறப்பு : 1989 பங்குனி 29ஆம் திகதி
பெற்றோர் : அமரர். சின்னத்தொம்மைலாகே லெனாட் நிமால் சாந்த சில்வா, திருமதி. காந்தி மானேல் பெரேரா
பங்கு : கடலான, புனித அந்தோனியார் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, கடலான, புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். பீ. அசங்க மாலன் மெண்டிஸ்

பிறப்பு : 1987 கார்த்திகை 06ஆம் திகதி
பெற்றோர் : திரு. பாலபுவடுகே வென்சன் லியோ மெண்டிஸ் திருமதி. ரஞ்சனி ஸ்ரீயானி பர்னாந்து
பங்கு : கடலான, புனித அந்தோனியார் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, மொரட்டுவை, கடலான புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். எஸ். என். அனுர பிரதீப் டயஸ்

பிறப்பு : 1989 ஆடி 03ஆம் திகதி
பெற்றோர் : திரு. சுபசிங்க நிஸ்சங்க பேபியன் டயஸ், திருமதி. வர்ணகுல சூரிய டொன் மாகரட் டயஸ்
பங்கு : நிட்டம்புவ, ரன்பொங்குனுகம, புனித கன்னிமரியாள் இராஜேஸ்வரி ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, ரன்பொக்குனுகம, புனித கன்னிமரியாள் இராஜேஸ்வரி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். டீ. ரஜித்த லியனகே

பிறப்பு : 1988 ஆவணி 25ஆம் திகதி
பெற்றோர் : திரு. தொன் ரிச்சட் லியனகே. திருமதி. நிம்மி ஜெரால்டின் லியனகே
பங்கு : நாயகக்கந்தை, புனித மரியாள் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, நாயக்ககந்த, புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். அன்தனி நிஷான் பூபாலராயன்

பிறப்பு : 1989 ஆடி, 4ஆம் திகதி
பெற்றோர் : திரு. அன்தனி ஜுட் ஜாய்ஸ் அலெக்சாண்டர், திருமதி. இமாலி குமுதுனி பேர்னடேட்
பங்கு : வத்தளை, புனித அன்னம்மாள் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 7.45 மணிக்கு, வத்தளை, புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். டபிள்யு. சுராஜ் கயஷான் பீரிஸ்

பிறப்பு : 1988 புரட்டாதி 08ஆம் திகதி
பெற்றோர் : திரு வர்ணகுலசூரிய நிஹால் காமினி பீரிஸ், திருமதி. சாமா குமுதுனி
பங்கு : கெப்புன்கொட, புனித அந்தோனியார் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 7.30 மணிக்கு, கெப்புன்கொட, புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். பீ.ஏ.டீ. விக்கும் அன்டன் குமார

பிறப்பு : 1989 ஆடி, 19ஆம் திகதி
பெற்றோர் : திரு. புளுக்குட்டி ஆராச்சிகே தொன் விலி குயின்டஸ், திருமதி. தொன் மேரியன் சந்திரானி
பங்கு : பமுனுகம, புனித சூசையப்பர் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, பமுனுகம, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.**

தகவல்கள் மற்றும் படங்கள்:
சுனில் பர்னாந்து, றொஷான் பிரதீப்

**இப்புதிய அருட் தந்தையர்களை வாழ்த்தி வரவேற்பதோடு அவர்களின் பணிவாழ்வு இயேசுவின் வாழ்வாக மாறிட வாழ்த்துகின்றோம்.**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
23, சித்திரை 2017 ஞாயிற்றுக்கிழமை.

**குருத்துவ பணி வாழ்வில் இணையவிருக்கும் அனைத்து திருத்தொண்டர்களும் அன்பு ஒன்றை மூலதனமாகக் கொண்டு துன்புறும் மனிதரில் இயேசுவைக் கண்டு பணி புரிந்திட ஞான ஒளி சார்பாக உங்கள் அனைவரையும்**

**வாழ்த்தி நிற்கின்றேன்.**

இயேசு தன் உயிர் ஈந்து எம் உயிர் காத்தவர். இயேசுவுக்கு மனிதன் தந்த தீர்ப்பு மரணம். ஆனால் கடவுள் திருத்தி எழுதிய தீர்ப்போ உயிர்ப்பு. உயிர்ப்பு என்பது என்றோ ஒருநாள் நடந்து முடிந்த நிகழ்வொன்றல்ல. மாறாக இன்றும் உயிர்ப்பானது நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றது. நாம் பாவத்திற்கு இறந்து புது வாழ்வு பெறும்பொருட்டு இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார். இயேசு உயிர்த்தார் என்பது ஒரு செய்தியே. ஆனால் அவரோடு நாமும் உயிர்த்தால் அது எமக்கு மாபெரும் அனுபவம். அந்த மாபெரும் அனுபவம் நம் வாழ்வு பொருள் சார்ந்த ஈர்ப்பு, மனம் சார்ந்த ஆசைகள் இவைகளுக்கு அடிமையாகாத வாழ்வாக இருக்கும் போதுதான் உயிர்ப்பின் அனுபவத்தை பெறமுடியும். எமது வாழ்வானது துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், கவலைகள் கண்ணீர் இவைகளால் பதப்படும் போதுதான் அனுபவங்கள் கிடைக்கின்றன. இவ்வனுபவத்தை தொடக்க கால சீடர்கள் பெற்றார்கள். எனவேதான் அவர்களது வாழ்வு சாட்சிய வாழ்வுக்கு அடித்தளமானது. இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா கொண்டாட்டம் எமது வாழ்வில் தொடரும் ஒரு நிகழ்வாக இருக்க வேண்டும். இந்த உயிர்ப்பு விழா எனக்கு புத்துயிர் தரவில்லை என்றால் எமது விசுவாசம் வீணானதே.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் சித்திரை திங்கள் 29ம் நாள் பதினைந்து திருத்தொண்டர்கள் புதிய குருக்களாக திருப்பொழிவு செய்யப்படவிருக்கின்றார்கள். குரு என்பவர் யார்? குருத்துவ அழைப்பும் நிலையும் எத்தகையது? அதன் வாழ்வும் பணியும் எத்தகையது? இயேசு இறுதி இராவுணவின்போது குருத்துவத்தை ஏற்படுத்தி, இதை என நினைவாகச் செய்யுங்கள் என்று கூறி, சீடர்களின் கால்களைக் கழுவி, நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள் என்ற அன்புக் கட்டளையையும் கொடுத்தார். கழுவவும் கழுவப்படவும் தகுதியுடையவர்களாக குருக்கள் இருந்திட வேண்டும். பணி வாழ்வின் உச்சக்கட்டம் இங்கே வெளிப்படுகிறது. பணி வாழ்வில் இணையவிருக்கும் அனைத்து திருத்தொண்டர்களும் அன்பு ஒன்றை மூலதனமாகக் கொண்டு துன்புறும் மனிதரில் இயேசுவைக் கண்டு பணி புரிந்திட ஞான ஒளி சார்பாக உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அடுத்து வைகாசி திங்கள் முதலாம் நாள் தொழிலாளர்களுக்குரிய சிறப்பு நாள். உழைப்பின்றி உயர்வில்லை. தொழிலாளர்களின் பாதுகாவலர் தூய சூசையப்பர். உழைப்பே இறைவழிபாடு. உழைப்பே செபம் என்று வாழ்ந்தவர்தான் தூய சூசையப்பர். உழைப்பில் ஆனந்தம் கண்டவர். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தார். உழைப்பின் கொடுமையை உணர்ந்தவர்களுக்குத்தான் உழைப்பவர்களுக்கு ஆறுதலாக இருக்க முடியும். அதனால்தான் இறைமகன் இயேசு "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருபவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்-பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்"(11:28-29) என்றார். பாரமான சிலுவையை சுமக்கும் வலிமையை இயேசு பெற்றுக்கொண்டது தூய சூசையப்பரின் பட்டறையில் இருந்தும் இறைத்தந்தையின் ஆசியில் இருந்தே என்றும் கூறலாம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# இயேசுவின் உயிர்ப்பு

**மனிதத்தின் முழுமையான இயேசுவின் உயிர்ப்பு என்றென்றும் நிலைகொண்டுள்ள எமக்கு உயிர்த்தருகின்ற மகத்துவம்.**

**கிறிஸ்தவ வாழ்வின் மணிமகுடம்**



"உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்" என்று உரைத்த இறைமகனின் உயிர்ப்பு எமக்கும், அவருக்கும் இடையிலான ஒரு உறவினைக் காட்டுகின்றது. கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தில் பங்கு கொண்டு, அவரின் துயரை துடைக்க ஒரு சிறுதுளியேனும் எம்மால் இயன்ற நற்காரியங்களை செய்து இன்று அவருடைய மாபெரும் உயிர்ப்பு விழாவினை கொண்டாடி, அவர் அருளிய வாக்கிற்கு இலக்கணமாக எம் கிறிஸ்தவ வாழ்வின் மணி முடியாக, அன்பின் சிகரமாக இந்த உயிர்ப்பினை எமது வாழ்வாக்கிக் கொண்டுள்ளோம். கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் நாம் கொண்டிருக்கும் விசுவாசம் பொருள்ளற்றதாகிவிடும். மாறாக கிறிஸ்து உயிர்த்தார் எம் கிறிஸ்தவ வாழ்விற்கு ஒரு புது அர்த்தம் கொடுத்தார்.

பலரின் கல்லறைகளின் கதைகளை நாம் கேட்டுள்ளோம் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்ற ஹிட்லரின் கல்லறை மூடியே இருக்கின்றது. வெற்றி கண்ட நெப்போலியனின் கல்லறையும் மூடியே இருக்கின்றது. உலகை வெல்ல வேண்டும் என்று எண்ணிய அலெக்சாண்டரின் கல்லறையும் மூடியே கிடக்கின்றது. ஆனால் அன்பால் உலகை வென்ற நம் ஆண்டவர் இயேசுவின் கல்லறை மட்டுமே இன்றளவும் திறந்தே காணப்படுகின்றது. அதில் எல்லோரும் உயிர்ப்பின் மேன்மையை உணர்ந்துள்ளனர். நம் கிறிஸ்தவ விசுவாசமும் தழைத்தோங்கியுள்ளது.


இந்த உயிர்ப்பு என்பது உலகை விஞ்சிய கடவுளின் செயல், மகன் தாமே சுதந்திரமாக தன்னை கையளித்து மீண்டும் உயிர் பெறுகின்றார். மீண்டும் புத்துயிர் கொடுத்து, கிறிஸ்தவ மரணத்திற்கு புதிய அடித்தளம் கொடுக்கின்றார். சாவிற்கு அர்த்தம் கொடுத்த இயேசுவின் அன்பின் விதைகளை விதைப்போம். அவர் விட்டுச் சென்ற விழுமியங்களை பின் தொடர்வோம். நாமும் விதையாவோம். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது என்ற இயேசுவின் போதனையை ஏற்று நாமும் விழுவோம்.... விழுந்தே விடாமல் உயிர்த்து எழுவோம். காரணம் அவரது உயிர்ப்பு ஒரு மகிமையான விடயம் அது முழு மனித சுதந்திரத்துடன் மனிதனை அவரது இயல்பில் உருவான விடயம். மனிதத்தின் முழுமையான இயேசுவின் உயிர்ப்பு என்றென்றும் நிலைகொண்டுள்ள எமக்கு உயிர்த்தருகின்ற மகத்துவம்.

எனவே முடிவில்லா வாழ்வு உண்டு என்பது எமக்குரைத்த இறைமகனின் உயிர்ப்பு, கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அது அழிகப்படுவதில்லை என்ற மறையுண்மைக்கு சான்று பகர்கின்றது. எனவே கடவுளை தினம் தேடி உயிர்ப்பை நமக்கு வாழ்வாக கொடுத்த நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து எம் அனைவரோடும் என்று உடனிருப்பாராக. இயேசுவின் உயிர்ப்பை அனுபவமாக்குவோம். அவரின் உயிர்ப்பிற்கு சாட்சிகளாவோம்.

**ஆக்கம்**
**அருட்சகோ. டிலோய்ஸ்டன் பெர்னான்டோ**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இறை இரக்க பெருவிழா



**‘உங்கள் வானகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்’** இயேசு தனது கொடிய சிலுவை மரண வேளையிலும் **‘தந்தையே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்’** என்று கூறினார்.

மனிதத்தின் இத்தகைய உன்னத நிலைக்கு வருவதற்கு நாம் ஒவ்வொருவரும் எமக்குள் இருக்கும் போலிகள், விக்கிரகங்களான வீண் கவலைகள், நோவுகள், தவிப்புக்கள், வெறுப்புக்கள், பழிவாங்கல்கள், பாலியல் பிடிப்புக்கள், குடிப் பழக்கங்கள் என்பவற்றை அழிக்க வேண்டும்.

இவ்வாறு அழித்தால்தான் ஆண்டவர் இயேசு தனது சிலுவை மரண நேரத்தில் செய்ததுபோல், தந்தைக்கு எமது உள்ளார்ந்த பதிலை (Inner response) கொடுக்க முடியும், இயேசுவின் உள்ளார்ந்த பதிலை சிலுவையில் அவர் கூறிய ஏழு வாக்கியங்களில் காணலாம்.

**‘தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை’ (லூக் 23:34)**

எவ்வளவுக்கு எவ்வளவு நாம் எமது உள்ளார்ந்த பதிலைக் கொடுக்கிறோமோ அவ்வளவுக்குத்தான் இறைத்தந்தை எம்மில் செயலாற்றுகின்றார். இறைவனுக்கு இந்த உள்ளார்ந்த பதிலைக் கொடுப்பது எளிதல்ல, இது ஒரு பெரும் போராட்டம். மீண்டும் மீண்டும் நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற நிலைக்கு வரவேண்டும் இதற்கு எமக்கு இறை இரக்கம் அவசியம்.

இன்றைய முதல் வாசகம், “அனைவரும் சாலமோன் மண்டபத்தில் ஒரு மனத்தவராய் கூடிவந்தனர்” என்று கூறுகின்றது. முதல் கிறிஸ்தவர்கள் ஒரு மனத்தவராய் ஒன்றுகூடி ஆண்டவரைப் புகழ்ந்ததுதான் முதல் புதுமை. “மனம் ஒப்பினால்தான் மார்க்கம் பிறக்கும்” கிறிஸ்துவின் மார்க்கம் இவ்வாறு பிறந்தது.

இத்தகைய மனம் ஒப்பிய கிறிஸ்தவர்கள் மத்தியிலே இராயப்பர் தனிப்பெரும் தலைவராகச் செயற்படுகின்றார். இன்றைய பிரச்சினையும் இதுதான். எமது உண்மையான தலைவர்கள் யார் என்பதை மக்கள் இனங்காண வேண்டும். என்ன அளவுகோலை வைத்து இன்று மக்கள் நம் தலைவர்களை இனங்காண முற்படுகிறார்கள்?

அதேவேளை தலைவர்களும் தமது மக்களை இனங்கண்டு கொள்ள வேண்டும். தலைவர் இனங்காண வேண்டிய தமது மக்கள் யார்? ஏழைகள், நோயாளிகள், பசித்திருப்போர், தாகமாயிருப்போர், அந்நியராயிருப்போர். ஆடையின்றி இருப்போர் சிறையில் வாடுவோர் (மத் 25:35-36).

அன்று அப்போஸ்தலர்களும் ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அலைந்து திரியும் அல்லது நடமாடும் இறைவாக்கினர்களாகவே செயல்பட்டனர். யூத மறைஞானிகளைப் போன்று இயேசு மூன்று மணிநேர உச்ச செப அனுபவத்தின் பின் மக்கள் முன் தோன்றுகின்றார். அதேபோன்றுதான் இப்பொழுது இராயப்பரும் செயற்படுகின்றார். இது மக்கள் அனைவருக்கும் தெரியும். இதானல்தான் பேதுரு நடந்து செல்லும்போது அவரது நிழல் சிலர் மேலாவது படும்படி நோயாளிகளைப் படுக்கையோடு கொண்டு வந்தனர். இது இறைவனோடு பிளவுபடாத உள்ளத்துடன் உறவுகொண்டதனால் வெளிப்படும் வல்லமை!!!

மக்களின் தழும்புகள் காயங்கள் பற்றிச் சொல்லியே பிரச்சாரம் செய்து தங்கள் பதவிகளில் தங்களைத் தக்கவைத்துக் கொண்டிருப்போர் பலர். உண்மையில் திருச்சபையின் தழும்புகள் எவை? உலகத்தின் அநீதிகளினால் ஏற்படுத்தப்பட்ட தழும்புகள். இறை இரக்கத்தின் ஆண்டவரும் தனக்கு ஏற்பட்ட தழும்புகளைக் காட்டுகின்றார்.

இயேசுவின் இந்தக் காயங்கள்தான் துன்புறும் மனுக்குலத்தின் துன்பங்கள், காயங்களை மனுவுரு எடுக்கச் செய்யும். சர்வதிகாரி ஹிலட்லர் தன் வாழ்விலேயே உள்ளத்தால் பாதிக்கப்பட்ட காயப்பட்ட ஒருவர். அன்றைய ஜேர்மனி மக்களும் இத்தகைய உள்ளார்ந்த காயங்களுடன் வாழ்ந்ததை உணர்ந்து அந்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்தினார். தனது அழிவு நெருங்கியதும் தான் அதிகாரம் செலுத்திய ஜேர்மன் மக்களும் அழிந்துவிட வேண்டுமென்ற எண்ணத்தை செயல்படுத்தினார். தன்னுடைய அழிவில் தன்னால் அடக்கி ஆளப்பட்ட மக்களின் அழிவும் இருக்க வேண்டும் என்ற அந்த சர்வாதிகாரியைப் போலன்றி, தமது காயங்களாலும் மரணத்தினாலும் மானிடத்தின் காயங்கள் குணப்படுத்தப்பட்டு மனிதர்கள் வாழ்வு பெறவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்தான் இறைமகன் இயேசு. இயேசு மனுக்குலத்தின் துன்பங்கள், துரயங்கள், காயங்கள், அனைத்தையும் தன்மேல் சுமந்து கொண்டார். பாவமற்றவராய் மனுவுருவாகிய இறைமகன் இயேசு ஒருவரால் தான் மனுக்குலத்தின்மீது உண்மையான பரிவு, இரக்கம் கொள்ள முடியும்.

இறைமகன் இயேசு மனித உரு தரித்தபோது முக்காலங்களையும் சேர்ந்த மானிடத்தின் காயங்களை தமது சொந்தக் காயங்களாக ஏற்றுக்கொண்டார். ஆக, நிகழ்காலத்தில் மானிடரின் காயங்கள் அனைத்தும் இறைமகன் இயேசுவின் காயங்களுடன் ஒன்றித்துள்ளன என்பதும், நிகழ்கால மானிடரான நமது காயங்கள் இறைமகன் இயேசுவின் அவதாரத்தில் ஒன்றித்துள்ளன என்பதும் நமது விசுவாசத்தின் அடித்தளமாக அமைகின்றன.

இயேசு துன்புறும் மனுக்குலத்தின் துன்ப துயரங்களை தன்னிலே புதுப்பிக்கும் பொழுது மட்டும்தான் உண்மையான இறை இரக்கம் ஏற்பட முடியும். யார் உண்மையில் இன்று மக்களின் துன்பங்களைத் தமது சொந்தத் துன்பங்களாக தம்மேல் சுமந்து கொள்கிறார்கள் என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும். எங்கள் துன்பங்கள், சுமைகளை யார் சுமப்பார்கள் என்று பார்த்துக் கொண்டிருப்பதை விட நாம் எவ்வளவுக்கு எமது பொறுப்பில் உள்ளவர்களுடைய துன்பங்கள், சுமைகளை நல்ல தந்தையாக, நல்ல தாயாக, நல்ல ஆசிரியராக, நல்ல பணியாளராக சுமக்கின்றோம் என்று சிந்திப்போம்.

இறை இரக்கப் பக்திக்கு முக்கியமானவராக விளங்கும் தூய பவுஸ்தீனாவின் குறிப்பேட்டில் இரக்கத்தின் முக்கியத்துவம் பற்றி ஆண்டவர் இயேசு பின்வருமாறு கூறுகின்றார். இறை இரக்கம் என்பது வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படும் கொண்டாட்டம் அல்ல. மாறாக, எமது வாழ்வு முழுவதும் இதயத்தில் இரக்கம் உள்ளவர்களாக, ஈரம் உள்ளவர்களாக என்றும் வாழ வேண்டிய வாழ்வு. அன்பு மகளே! என் மூலமாக மக்கள் என் இரக்கத்தை உணரவேண்டும் என்பதை ஆசிக்கின்றேன். என்னுடைய இரக்கத்திலே நம்பிக்கை வைப்பதன் மூலமாக நீ ஒரு தனித்துவமானவள் என்பதை இனங்கண்டு கொள்ள வேண்டும். என்மீது நீ கொண்டுள்ள அன்பினால் நீ இரக்க செயல்களில் ஈடுபட வேண்டும் என்று நான் உன்னிடம் வலிந்து கேட்கின்றேன். உனக்கு அடுத்திருக்கும் சகோதர, சகோதரிகள் மட்டில் எங்கும் என்றும் நீ இரக்க செயல்களைக் காட்ட வேண்டும். நீ இவற்றிலிருந்து பின்வாங்கவோ இவற்றை செய்யாது சாட்டுப்போக்குச் சொல்லவோ கூடாது.

**இறை இரக்கதின் நவநாள் செய்வது நல்லது. அது நம்மை நமது இதயத்தில் இரக்கம் உள்ளவர்களாக, ஈரமுள்ளவர்களாக வாழச் செய்ய வேண்டும், வளரச் செய்ய வேண்டும்.**

ஆக்கம் : அருட்பணி ரேஜிஸ் ராஜநாயகம்

## இறை இரக்கம் பெருக



இறைவன் மனுக்குலத்தின்பால்
இரக்கம் வைத்து
இன்னலுற்று பாவம் வென்று
சாவின்று உயிர்த்தெழுந்த
சம்பவம்
ஞாயிறோடு சகலமும்
முடியவில்லை

அவர் மீண்டும் வருவார்
அவர் தம் இரக்கத்தால்
நிறைப்பாரெனும்

நம்பிக்கை ஊற்றெடுக்க,
இன்னுமதிகமாய் அவர்
இரக்கத்தை யாசிக்க
இன்னொரு ஞாயிறாய்
தொடர்ந்து வரும் உன்னத ஞாயிறே
இறை இரக்கத்தின் ஞாயிறு

வாழ்வின் ஞாயிறுகளையே
ஏன் வாழ்வின் நாட்களையே
இறைவனின் இரக்கமில்லாமல்
நாம் எட்டித் தொட முடியாது

இயற்கையும், பசுமையும்
இயைந்த உலகில்
இறை இரக்கம் ஒளிக்கீற்றாய்
உருவெடுத்து
இரண்டறக் நமக்குள் கலந்த
பாவ இருளைக் களைந்திடுவோம்
பரமனின் பாதையில் செவ்வனே நடக்க
இறை இரக்க ஞாயிறில்
உறுதியேற்போம்.



12

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

## இறப்பவர்கள் மனிதாபிமானத்தோடு இறக்க கிடைத்தது புது இல்லம்.

சாருபாலா ஓர் எடுத்துக்காட்டு மட்டும்தான். அவளைப்போல 120 பெண்களும், 90 ஆண்களும் இப்போது இவ்விடுதியில் இடம் பெற்றிருக்கின்றனர். இங்கே சேர்க்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் கடந்துவிட்டது. இவர்கள் வெவ்வேறு இடங்களினின்று வந்தவர்கள். வங்காளம், நேப்பாளம், சீனா, தென் இந்தியா, பர்மா ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள். இங்கே ஜாதி, மதவேறுபாடு பார்க்கப்படுவதில்லை. இந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும், கிறிஸ்தவர்களும் இங்கே இடம் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இவர்கள் பேசும் மொழியும் வேறுபட்டவையே. வங்காள மொழி பேசுவோரையும், இந்தி மராத்தி, பஞ்சாபி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசுவோரையும் ஆங்கிலம் மட்டும் பேசும் ஆங்கிலோ இந்தியர்களையும் நாம் இங்கே பார்க்கின்றோம்.

இவர்கள் அத்தனை பேரிடமும் அன்னை எப்படிப் பேசி சமாளிக்கிறார் என்று தெரியாமல் மனம் குழம்பி நிற்கிறோம். இம்மொழிகளைத் தெரிந்த சகோதரிகளைத் தான் அன்னை இங்கே அனுப்பியிருக்கிறார். நோயாளிகளிடம் அன்னை வங்காள மொழியிலும், ஆங்கிலத்திலும், இந்துஸ்தானியிலும் ஆறுதல் வார்த்தைகளைக் கூறுகின்றார். “பகவான் அச்சன்” அதாவது “கடவுள் ஒருவர் இருக்கிறார்” என்பார். பேசமுடியாதவர்களைத் தட்டிக் கொடுக்கிறார். எலும்பும் தோலுமாகப் படுத்திருக்கும் வயோதிபர்களுடைய உச்சிமோந்து தமது அன்பைக் காட்டுகிறார்.

இறந்துபோனவர்களுடைய பெயர் பதிவு செய்ய பதிவேடு ஒன்று அங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. குஷ்வந்த சிங் என்னும் பிரபல எழுத்தாளர் நிர்மல் ஹிருதய் விடுதிக்கு ஒரு முறை சென்றிருந்தார். அங்கே படுத்திருந்த நோயாளிகளைப் பார்த்துவிட்டு இறுதியில் இறந்து போனவர்களின் பதிவேட்டைப் பார்வையிட்டார். அதில் எழுதப்பெற்றிருந்த கடைசிப் பெயர் “சாந்திதேவி, மதம் இந்து, நேரம் காலை 11.30, நாள் 1973 மார்கழி 20” இவ்விடுதியில் இறந்தவர்களுள் சாந்திதேவி 3522வது ஆள்.

அதற்குப் பின்னும் எத்தனையோ பேர் இறந்திருப்பர். நிர்மல் ஹிருதய் விடுதியில் சேர்க்கப்பட்டவர்களுள் பெரும்பான்மையோர் இறந்தாலும் அவர்கள் அமைதியாக இறக்கின்றார்கள். அவர்கள் விலங்குகளைப் போல் தெருவோரங்களில் ஆதரவின்றி இறப்பதைத் தெரேசா விரும்பவில்லை. அவர்களும் மனிதப் பிறவிகள் தானே? மனிதாபிமானத்தோடு இறக்க வேண்டும் என்பதே அன்னையின் கொள்கை.

அன்னை தெரேசாவின் சபை அங்கீகாரம் பெற்றது 1950இல் தான். இரண்டே ஆண்டுகளில் சபையினரின் எண்ணிக்கை 28ஆக உயர்ந்தது. அத்தனை பேரையும் உள்ளடக்கி வைக்க மிக்கேல் கோமசின் வீட்டுமாடி அறை இடம் தரவில்லை. ஆகவே தங்களுக்கென ஒரு தனி வீடு கிடைக்குமா எனத் தேடத் தொடங்கினார் தெசேரா. இச்சமயம் அமெரிக்க நாட்டு கர்தினால் ஸ்பெல்மன் அவர்கள் அன்னை தெரேசா செய்து வரும் பணிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க கல்கத்தாவுக்கே வந்துவிட்டார்கள். மிக்கேல் கோமசின் வீட்டைத் தேடிப்பிடித்து மூன்றாவது மாடிவரை ஏறி வந்திருக்கிறார்கள். தெரேசாவும் அவளுடைய சகோதரிகளும் தங்கியிருந்த இடத்தைப் பார்த்துவிட்டு அன்னையிடம்

**“நீங்கள் எல்லோரும் தங்கும் இடம் எது?”** எனக் கேட்டார்கள்.

**“இந்த அறையில் தான் நாங்கள் தங்குகிறோம்”** என்றார் தெரேசா.

**“உங்களுடைய உணவு அறை?”** என மீண்டும் வினவினார்கள் கர்தினால் ஸ்பெல்மன்.

**“அதுவும் இதே அறைதான்”** எனப் பதில் வந்தது. சிறிது நேரம் அந்த அறையைப் பார்த்த பின்னர்,

**“உங்கள் இளம் துறவியர் படிக்கும் அறை?”** தெரேசாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

**“அதுவும் இந்த அறைதான்”** என்றார் சிரித்துக் கொண்டே.

**“நீங்கள் படுத்து உறங்கும் அறை?”**

**“அதுவும் இந்த அறையில் தான்”** கர்தினால் ஆச்சரியம் மேலிட்டவராய்,

**“உங்களது கோவில் எங்கே?”**

தெரேசா அந்த அறையின் கடைசிப் பகுதியில் போடப்பட்டிருந்த திரையை விலக்கிவிட்டு,




**“இதுதான் எங்கள் பசிலிக்கா (பேராலயம்)”** என்றார். அங்கே பலிப்பீடத்தைத் தவிர பெஞ்சுகளோ, நாற்காலிகளோ, கிடையா. தனி இருக்கைகளும் கிடையா. தரையில் பாய்கள் மட்டும் விரிக்கப்பட்டிருந்தன.

கர்தினால் ஸ்பெல்மன் தெரேசாவின் எளிமையையும், ஏழ்மையையும் கண்டுப் பிரமித்துப் போனார். அன்று அங்கே திருப்பலி நிறைவேற்றி விட்டுத் திரும்பினார். 1952ல் கொரியாவில் நடந்த போரில் கலந்து கொண்ட அமெரிக்கப் போர் வீரர்களைப் பார்த்துவிட்டு தாயகம் சென்று கொண்டிருந்த கர்தினால் கல்கத்தாவை அடைந்ததும் அன்னையைப் பார்க்க வந்தது அவர்களது பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் வருகையினால் வந்த விளைவு என்னவென்றால் அவர்கள் கல்கத்தா பேராயரிடம் அன்னை தெரேசாவுக்கு நல்லதோர் உறைவிடம் வேண்டுமெனப் பரிந்துரைத்துச் சென்றதுதான். இடவசதிக் குறைவினால் தங்குமிடமும், படிப்பகமும், உணவறையும், படுக்கை அறையும், கோவிலும் ஒரே இடமாகக் கொண்டிருந்த சகோதரிகளுக்கு வேறு இடம் தேவை தானே? இதற்கிடையில் அன்னை ஒரு வாக்குறுதி எடுத்திருந்தார். அதாவது தங்களுக்கெனச் சொந்தமாக ஓர் இல்லம் கிடைப்பதற்கு 85,000 “மிகவும் இரக்கமுள்ள தாயே” என்னும் மன்றாட்டைச் சொல்வதாக. என்னே அன்னை கொண்டிருந்த நம்பிக்கை!

மிக்கேல் கோமசைப் பொறுத்தவரை அவர் அன்னை தெரேசாவுக்கும் சகோதரிகட்கும் எவ்வகை உதவியும் செய்யத் தயாராக இருந்தார். அன்னைக்கு உதவி புரிவதை ஒரு பெரும்பேறாகக் கருதினாரே தவிர அதை ஒரு சுமையாகவோ, தொல்லையாகவோ அவர் கருதவில்லை. மிக்கேல் கோமசும் அவருடைய துணைவியாரும் தாங்கள் செய்த உதவிகளுக்கு எவ்வித கைம்மாறோ, வீட்டு வாடகையோ எதிர்பார்க்கவில்லை. **“நாங்கள் அன்னைக்குக் கொடுக்கவில்லை. மாறாக, நாங்கள் தான் அன்னையிடமிருந்து பெற்றுக் கொண்டோம்”** என்றார்கள் பணிவாக. இப்படிப்பட்ட தொண்டுள்ளம் கொண்ட மனிதர்கள் எத்தனை பேர்!

கர்தினால் ஸ்பெல்மன் விஜயம் செய்த அன்றே கல்கத்தாப் பேராயர் அன்னை தெரேசா-வுக்கும் சகோதரிகளுக்கும் ஏற்ற ஓர் இல்லம் அகப்படுமா எனப் பல இடங்களிலும் தேடியிருக்கிறார். வான் எக்செம் சுவாமிகளிடமும் ஜுலியன் ஹென்றி அடிகளிடமும் இதைப்பற்றி கலந்தாலோசனை நடத்தியிருக்கிறார். அவர்களும் பல இடங்களில் தேடிப் பார்த்திருக்கின்றனர்.

வான் எக்செம் அடிகளார் முஸ்லீம்கள் பலரைத் தன் நண்பர்களாகக் கொண்டிருந்தார் என்பதை ஏற்கனவே நாம் பார்த்திருக்கின்றோம். அவருடைய முஸ்லீம் நண்பர்களுள் ஒருவர் ஜனாப் இஸ்லாம் என்பவர் முன்னாள் நீதிபதியாக இருந்த இவர் தமக்கென்று லோயர் சர்க்குலர் சாலையில் வீடு ஒன்று கட்டியிருந்தார். தாம் ஓய்வு பெற்றபின் தங்குவதற்கென்று கட்டியிருந்த வீடு அது. அண்மையில் வங்காளத்தில் நடந்த இனக்கலவரங்களைப் பார்த்த அவர் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் தம் இருப்பிடத்தை மாற்ற முடிவெடுத்திருந்தார். எனவே லோயர் சர்க்குலர் சாலையில் அவர் கட்டிய இல்லம் பயன்படாமல்தானே கிடக்கும்? இதை அறிந்த வான் எக்செம் அடிகளார் தமது விருப்பத்தை ஜனாப் இஸ்லாமிடம் கூறினார். அவர் ஒரு கணம் யோசித்தார். மறுகணம் சுவாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு பக்கத்திலுள்ள மௌலானா அலி மசூதிக்குச் சென்றுப் பிரார்த்தனை செய்தார். சுவாமிகளிடம் திரும்பிவந்து, “அந்த வீட்டை நான் இறைவனிடமிருந்து பெற்றிருந்தேன். அதைத் திரும்பவும் இறைவனுக்கே கொடுத்துவிடத் தயாராக உள்ளேன்” என்றார்.

இச்செய்தியை அடிகளார் பேராயரிடம் கூற பேராயரும் அவ்வீட்டை வாங்க ஏற்பாடு செய்தார். கல்கத்தா மறை மாநிலத்தின் முதன்மைக் குரு எரிக் பார்பர் அடிகளார் அதை ரூ. 1,20,000 கொடுத்து வாங்கிக் கொண்டார். மூன்று மாடி கொண்ட புத்தம் புதிய வீடு அது. வீட்டைச் சுற்றி அழகானதொரு தோட்டம். இதுவே அன்னை தெரேசாவுக்கும் சகோதரிகளுக்கும் கிடைத்த புது இல்லம்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# இயேசுவும் பேதுருவும்*



நம்பிக்கை தளர்கின்ற போது வாழ்க்கை அர்த்தமற்றுப் போகிறது. இயேசுவின் மீது பேதுரு வைத்திருந்த நம்பிக்கை தளர்ச்சியடைகிறது. தன் பழைய தொழிலான மீன் பிடிக்கும் தொழிலுக்குத் திரும்பி விடுகின்றார் தன் தோழர்களோடு.

உடல், உள்ளம், ஆன்மா இந்த மூன்றின் கலவைதான் மனிதன். இவற்றில் எந்த ஒன்று பாதிப்புக்கு ஆளானாலும் முழு மனிதனும் பாதிப்புக்கு உள்ளாகின்றான். பயம், பகை, தாழ்வுமனம், குற்றப்பழியுணர்வு, கவலை இவை மனிதனை இயல்பில் பாதிக்கின்றது. நலம் இழக்கச் செய்கிறது. ஆளுமைச் சீர்குலைவுக்குக் காரணமாகிறது. புனித பேதுருவும் இதற்கு விதிவிலக்கல்ல. இயேசுவை மும்முறை மறுதலித்ததின் பின் இவற்றை எல்லாம் பேதுருவும் அனுபவித்தார். இயேசுவுக்குத் தெரியும் பேதுருவின் இந்த மறுதலிப்பு பகையினால் வந்ததல்ல. அன்பின் மிகுதியினால், பயத்தினால் வந்த மறுதலிப்பு. பேதுரு என்னை அன்பு செய்கிறார், நேசிக்கிறார் என்று இயேசுவுக்குத் தெரியும். ஆனால் அந்த நேரம் வெளிப்படையான அறிக்கையாக வேண்டும் என்று விரும்புகிறார்.

இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு பேதுரு தளர்ச்சியடைந்தவராக திரும்பவும் தனது பழைய தொழிலான மீன்பிடிக்கும் தொழிலுக்குப் போகின்றார்.ஆனால் இயேசு பேதுருவை விடவில்லை. அவருக்கு மிகப் பெரிய பொறுப்பைக் கொடுக்கின்றார். அந்த பொறுப்பை அவர் நிறைவு செய்வார் என்ற நம்பிக்கையை இயேசு கொண்டிருந்தார்.

### உயிர்த்த இயேசு பேதுருவை சந்திக்கிறார்.

கலிலேயா கடற்கரையிலே மீன்பிடித் தொழிலில் இருந்த பேதுருவை முதன் முதலில் இயேசு அழைக்கிறார். எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவை பின்தொடர்ந்தார் பேதுரு. "கலிலேயாவில் தீ மூட்டியிருப்பதை ............. கண்டார்கள்" (யோவா 18:25) சீமோன் பேதுரு அங்கு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார். அப்போது "அறியேன்" என்று மும்முறை மறுதலித்த பேதுருவை இயேசு இரண்டாம் முறையாக அழைக்கின்றார். அழைத்த இயேசு பேதுருவிடம் "என்னை அன்பு செய்கிறாயா? என்று மும்முறை கேட்கிறார். உயிர்த்த இயேசுவின் இந்த கேள்வி தான் தலைவனை மறுதலித்த மன உளைச்சலில் துடித்துக் கொண்டிருந்த பேதுருவை மனமாறச் செய்தது. தன்னுடைய மனநோயில் இருந்து குணம்பெறச் செய்தது.

### பேதுருவின் பணி (பொறுப்பு)

***"ஆடுகளைப் பேணி வளர்"***

பொறுப்பை ஏற்ற பேதுரு மனவலிமை பெறுகிறார். அந்த மனவலிமையினால் "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை விட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்" என மன உறுதி எடுத்து இயேசுவின் பெயரை, இயேசுவின் உயிர்ப்பை உலகெங்கும் சென்று சான்று பகர்கின்றார். பேதுருவின் மரணமே கடவுளை மகிமைப்படுத்தியது.

◄◄ ►►

# எமக்குத் தலைமைத்துவம் கிடைப்பது எப்படி? அது இல்லாமல் போவது எப்படி?





## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

135

இறைவன் தேர்ந்தெடுக்கும் தலைமைத்துவம் மக்களுக்கு ஆயனாக இருக்க வேண்டும். மக்களுக்குப் போசாக்குக் கொடுக்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இறைவனது குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும். அதாவது இறைவனது குரலுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதேபோன்று சாட்சி பகர வேண்டும். அப்போது எமக்கு அதிகாரம், வல்லமை கிடைக்கின்றது.

இறைவன் சவுலைத் தலைவராகத் தெரிவு செய்தார். சாமுவேல் மூலம் சவுலுக்கு இறைவன் குற்றத்தை உணர்த்தினார். அப்போது சவுல் ஆடுகள், மாடுகள் மூலம் பலி செலுத்தி தனது குற்றத்துக்குப் பரிகாரம் செய்ய முற்பட்டார். அப்போது சாமுவேல் கூறியது.

**"ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரிபலிகள், பிற பலிகள் செலுத்துவதா? அவரது குரலுக்குக் கீழ்ப்படிவதா? கீழ்ப்படிதல் பலியை விடச் சிறந்தது. கீழ்ப்படிதல் ஆட்டுக் கிடாய்களின் கொழுப்பை விட மேலானது. கலகம் சூனியத்திற்கு நிகரான பாவம். முரட்டுத்தனம் சிலை வழிபாட்டுக்கு ஒப்பான குற்றம். நீர் ஆண்டவரின் வார்த்தைகளைப் புறக்கணித்தீர். அவரும் உம்மை அரச பதவியினின்றுநீக்கி விட்டார்". (1 சாமுவேல் 15:22-23)**

சவுல் அரசராக இருந்து வல்லமையைச் சுவைக்கும்போது, அனுபவிக்கும்போது அந்த வல்லமை யாரிடமிருந்து கிடைத்தது என்பதை மறந்தார். இறைவனுக்குக் கீழ்ப்படியவில்லை. பலி பூசை ஒப்புக்கொடுக்க ஆயத்தமானார். ஆனால் பலி பூசையை விட கீழ்ப்படிவே முக்கியமானது. கீழ்ப்படிவு இல்லாததால் அரச நிலை இல்லாது போனது. தலைமைத்துவம் இல்லாது போவது மட்டுமல்ல செல்லாக்காசாக மாறினார். நான் இல்லாது ஒன்றுமே நடக்காது என நாம் நினைக்கக் கூடாது. இறைவன் வேறு ஒருவரைத் தெரிவு செய்வார்.

1சாமுவேல் 16வது அதிகாரத்தில் தீர்க்க தரிசிகளும் தலைமைத்துவமே என்று கூறப்படுகிறது. அவர்களும் இறைவனுக்குச் செவிசாய்த்து கீழ்ப்படிய வேண்டும். இல்லையேல் அத் தலைமைத்துவமும் இல்லாது போய்விடும்.

தீர்க்கதரிசி இறைவனுக்குச் செவி சாய்க்க வேண்டும் செபிக்க வேண்டும். இங்கே சாமுவேல் எலியாவைப் பார்த்தவுடனே இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவனாகத்தான் இருக்கும் என்று பிழையாக எண்ணினார். "அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே. ஏனெனில் நான் அவனைப் புறக்கணித்து விட்டேன். மனிதர் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர். ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார் என்றார்". (1சாமு 16:6-7)

தீர்க்கதரிசி கூட பிழையாக எண்ணக் கூடும். பொதுவாக மற்றவரது உள்ளத்தைப் பார்க்கும் திறமை எமக்குத் தேவை. இது ஒரு கொடையாகும். இக்கொடை இல்லாதவர்களின் குடும்பங்களில் பல பிரச்சினைகள் வருவதைக் காணலாம். இக் கொடையும் தலைமைத்துவத்துக்குத் தேவை. இறைவன் பேதுருவின் தோற்றத்தைப் பார்க்கவில்லை. பேதுருவின் அகத்தைப் பார்த்தே தலைவராகத் தெரிவு செய்தார்.

பொதுவாக வேதாகமத்தில் ஏழு என்பது முழுமையைக் குறிக்கும். இங்கு முழுமையற்ற எட்டாவது பிள்ளையாகிய தாவீதைத் தெரிவுசெய்தார். ஏனைய சகோதரர்களின் முன் தலைமைத்துவத்தைக் கொடுத்தார். யோசேப்பும் இவ்வாறு சகோதரர்களின் முன் அரசனாக இருந்ததைக் காண்கிறோம்.

ஆகவே மந்தைகளைப் போசாக்குக் கொடுத்துப் பார்த்துக் கொள்ளும, சேவை செய்யும், இறைவனது குரலைக் கேட்டுக் கீழ்ப்படியும், சாட்சி பகரும், மற்றவரது உள்ளத்தைப் பார்க்கும் தலைமைத்துவமாக மாறுவோம். இல்லையேல் ஒருநாள் செல்லாக்காசாக மாறிவிடுவோம்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு

## WLX - பேதுரு -

### பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு (23.04.2017) இறை இரக்கத்தின் பெருவிழா

**வாசக விளக்கம்:** பாஸ்கா காலத்தின் 2வது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்கு கொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! இறை உறவுகளே! எமது இயேசு சமாதானத்தின் தூதுவர், அமைதியின் அண்ணல் அவர் அமைதியைக் கொணரவே இவ்வுலகிற்கு வந்தவர். அவர் அருளும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல அது நிலையான நிறைவான அமைதி. இன்றைய இறைவார்த்தைப் பகுதிகளில் ஆண்டவர் இயேசுவினுடைய உயிர்ப்பை தங்களது வாழ்விலே அனுபவித்து அதை வாழுகின்ற புதிய கிறிஸ்தவ சமுதாயத்தைப் பார்க்கின்றோம். அத்துடன் உயிர்த்த ஆண்டவரை கல்லறையில் தேடாமல் தங்களுக்குள்ளே தங்களோடு இருந்தவர்களுக்குள்ளே தேடுகின்றனர்.செபிப்பதிலும், அப்பம் பகிர்ந்து உண்ணுவதிலும் ஒற்றுமையோடு செயல்பட்டனர். நற்செய்தியில் ஏனைய திருத்தூ தர்கள் பெற்றுக்கொண்ட இயேசுவின் உயிர்ப்பின் அனுபவத்தை புனித தோமையாரும் பெற்றுக்கொள்ள விளைவதையும் தோமையாருடைய வாழ்வு விசுவாசத்தினால் ஆழப்படுத்தப்பட்டதையும் பார்க்கின்றோம். உயிர்த்த இயேசு கொடுக்கும் தூய ஆவியை நாமும் பெற்றிருக்கிறோம். இவ்வாறு தூ ய ஆவியைப் பெற்றுக்கொண்ட நாமும் அமைதியின் தூதர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக

**முதல் வாசகம் : தி.ப 2:42-47**
நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். எல்லா உடமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.

**பதிலுரைப் பாடல்:** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 1:3-9**
இறந்த இயேசு கிறிஸ்துவை கடவுள் உயிர்த்தெழ செய்து நமக்குப் புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கின்றோம்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தோமா என்னைக் கண்டதால் நம்பினாய் காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 20 : 19-31**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசு இவ்வுலகிற்கு கொண்டுவந்த அமைதி என்னும் கொடையை முழு உலகமும் பெற்று மகிழ வேண்டும் என்ற நோக்குடன் உழைக்கும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இச்சவால் நிறைந்த பணியை தொடர்ந்தாற்றிடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் உயிர்ப்பால் புதுப்படைப்பாக மாறிய நாமும் கிறிஸ்து எமக்கு தந்த அமைதியின் தூதர்களாக வாழவும் திருத்தூதர்களைப் போன்று சான்று பகரும் வாழ்வை நடத்தவும் பகை, குரோதம், பகிர்விலும் நிலைத்து வாழத்தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

ஒவ்வொரு மனிதனும் எப்போதும் முழு உள்ளத்தோடும் மனதோடும் மன்னிக்கிறானோ அப்பொழுது தான் அவனது உள்ளத்தில் அமைதி வரும். இதை உணர்ந்தவர்களாக உண்மையை உலகறியச் செய்யவும், நீதியை நிலைநாட்டவும் தீமைகளை சுட்டிக்காட்டி கண்டிக்கவும் வேண்டிய மனநிலையுடன் வாழ்ந்து உண்மை அமைதியைக் காண வரமருள வேண்டுமென்று....

### பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு (30.04.2017)

**வாசகவிளக்கம்:** பாஸ்கா காலத்தின் மூன்றாவது வாரத்தில் கால் பதிக்க வந்திருக்கும் இறை அன்பர்களே! ஒரு திருப்பலியானது எமக்கு எப்பொழுதும் எம்மாவுஸ் அனுபவத்தை வெளிப்படுத்துகின்றது. திருப்பலியின் முக்கிய பகுதிகள் ஒன்று இறைவார்த்தை வழிபாடு மற்றது நற்கருணை வழிபாடு இயேசுவின் இறப்பிற்கு பிற்பாடு சீடர்கள் மகிழ்ச்சியை இழந்தவர்களாக பய உணர்வோடு, நம்பிக்கையற்றவர்களாக காணப்பட்டனர். ஆயினும் இயேசுவின் பிரசன்னமும் அவர்களுக்கு கிடைத்த நேரடி அனுபவமும் அவர்களது வாழ்வை மாற்றி அமைக்கின்றது. இன்றைய நற்செய்தியில் இயேசு அப்பத்தை பிட்டு சீடர்களுக்கு கொடுக்கிறபோது அவர்கள் கடவுளைக் கண்டு கொள்கின்றனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறை வார்த்தை வாசிக்கப்படும் போது ஒரு குறிக்கோளை நமக்கு உணர்த்தி நிற்கின்றது. அதை நாம் உள்ளத்தில் வாங்க வேண்டும். ஏனெனில் வாங்கிய இறைவார்த்தை பலன் தராமல் திரும்பிப் போகாது இறைவார்த்தையிலும் நற்கருணையிலும் நாம் இறைவனைக் கண்டு கொள்கின்றோம். இது நமது வாழ்வையும் மாற்ற வேண்டும் எங்கெல்லாம் கஷ்டங்கள் துன்பங்கள் காயங்களோடு மக்கள் அவதிப்படுகின்றார்களோ அங்கெல்லாம் அவர்களில் நாம் இயேசுவைக் காண வேண்டும். எனவே திருப்பலியில் பங்கு கொள்ளும் நாம் இயேசுவின் சாட்சிகளாக என்றும் வாழ்ந்திட இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 2:14,22-33**
மரணம் இயேசுவை தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை.

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே! வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 1:17-21**
உங்களை விடுவிக்க கொடுக்கப்பட்ட விலை-மாசுமறுவற்ற ஆட்டுக் குட்டியைப் போன்ற இயேசுவின் உயர் மதிப்புள்ள இரத்தமாகும்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாளிதுவே இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 24:13-35**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உலக மக்கள் அனைவரும் அன்புடனும், மகிழ்வுடனும் நிம்மதியுடனும் என்று வாழ வழிகாட்டும் தூய திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அகிய அனைவருக்கும் உறுதியையும், உற்சாகத்தையும் உமது உயிருள்ள வார்த்தையையும் வழங்கி வழி நடத்தியருள வேண்டுமென்று...

ஆண்டவர் இயேசு உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார், உயிரோடு இருக்கிறார் என்ற அறிக்கையிட்ட திருத்தூதர்களைப் போன்று நாமும் வாழவும், ஒவ்வொரு திருப்பலியும் எம்மாவுஸ் இறைப்பிரசனத்தை அனுபவித்து வாழத் தேவையான அருள் கொடைகளை தந்தருள வேண்டுமென்று...


இறைவன் எம்முடன் இறைவார்த்தை வழியாகப் பேசும்போது மனமாற்றம் பெறுவோம், மகிழ்ச்சி அடைவோம், புதிய பார்வை பெறுவோம் என்பதை உணர்ந்தவர்களாக நாம் பெற்ற வாழ்வை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் பிறர் நலப் பணிகளில் தூய்மையுடன் பங்காற்றவும் வேண்டிய மனநிலையை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....

## “மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் (லூக் 18:1)”

இன்றைய சமகால நிகழ்வுகள் நம் ஒவ்வொருக்கும் நினைக்கவும் சுமக்கவும் முடியாத அளவிற்கு பெரும் துன்பங்களை ஏற்படுத்தி விட்டன. “அது என்னுடைய விசுவாசத்தை தகர்த்துவிட்டது” என்று சிலர் தமது உள்ளக் கிடக்கைகளை பகிர்ந்து கொள்கின்றனர். எனவே துன்பவேளையில் செபிப்பதன் அவசியம் பற்றி நாம் ஆழமாக சிந்திப்பது சாலச் சிறந்தது.

துன்பங்கள் ஏற்படும் காலம் தான் நாம் கடவுளின் பக்கம் திரும்பும் முக்கியமான காலம். சில வேளைகளில் நாம் “எமக்கு உதவி செய்யும்” அல்லது “என்னைக் காப்பாற்றும்” என்று தகறி அழுகின்றோம். அந்நேரத்தில் கடவுள் நமக்கு உதவ நிச்சயமாக அங்கு இருக்கின்றார். நாம் அவர் பக்கம் திரும்பி இணைப்பிரியா உறவு ஆறுதல், உதவி ஆகியவற்றை கேட்க வேண்டும் என விரும்புகிறார்.

நம்மில் பலருக்கு துன்ப துயர வேளை செபிப்பதற்கு மிகவும் கடினமான வேளையாகும். எதைக் கேட்பதென்று எமக்கு தெளிவாக தெரிவதில்லை. ஒரு புதுமைக்காக மன்றாடுகின்றோம். ஆனால் கடந்த காலத்தில் (நாம் நினைத்த மாதிரியான) புதுமைகளைப் கேட்டு அவை ஏமாற்றத்தில் முடிந்ததை அனுபவ வாயிலாக அறிந்திருக்கின்றோம். எமக்குத் தேவையான நேரத்தில் நாம் விரும்பிக் கேட்ட உதவியை பெற்றுக் கொள்ளாததால் சில வேளைகளில் கடவுள் மீது நம்பிக்கை இழந்து விடுவதும் உண்டு. உதாரணமாக பாட்டி நலம்பெற வேண்டுமென்று செபித்தேன். ஆனால் சுகம் அடையவில்லை. மருத்துவ பரிசோதனை சந்தேகப்படும்டி இருக்கக் கூடாது என செபித்தேன் ஆனால் அது நிறைவேறவில்லை எனவே மனம் தளர்ந்து போய் இருக்கலாம். செபம் என்பதும் இறைவனோடு பேசுவதும், இறைவன் நம்மோடு பேசுதை மனம் திறந்து



கேட்பதுமான இரு வழி நிகழ்வு. துன்ப நேரம் நாம் இறைவன் பாதத்தில் சரணடையும் நேரம் : “என்னருள் உனக்குப் போதும்” என்று கூறும் இறைவன் துணையோடு நாம் துன்பத்தின் ஊடாக சென்று வெளி வரும் போது அது மாபெரும் இறை அனுபவமாகும்.

## சிந்தனைக்கு

- ☆ நாம் நம் செயல்களைத் தீர்மானிக்கின்றோம் நம் செயல்கள் நம்மை யார் எனத் தீர்மானிக்கின்றன.
- ☆ பணக்காரனுக்கு பணத்தைக் காப்பது குறித்துக் கவலை. ஏழைக்கோ பணத்தைப் பார்ப்பது எப்படி என்ற கவலை
- ☆ உழைக்கக் கற்றுக் கொள்வீர் பிழைக்கக் கற்றுக் கொள்ளாதீர்
- ☆ நீங்கள் கடமையைக் செய்யும் போதே உங்கள் தகுதி தெரிந்துவிடும்
- ☆ நல்ல மனமே மதத்தின் பயன். மனம் கெட்டால் மதம் இல்லை
- ☆ கடவுள் நமக்கு நாக்கைக் கொடுத்திருப்பது இனிமையான சொற்களைக் கூறுவதற்கே.
- ☆ சிந்தனை இல்லாமல் எந்தவிதமான செயலும் உருவாவதில்லை.



# இலங்கையின் பு

## வாழ்த்துகின்றோம் வணங்குகி

**இலங்கை ஆயர் பேரவையானது இவ்வாண்டினை புனித ஜோ**
**செய்துள்ளது. இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்க**
**மக்களுக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காது. இத்தகைய**
**(21.04.2017) விழாவினை நினைவு கூறும் இம்மாதத்தில் ஓர**
**தெரிந்து கொள்வது சாலவும் சிறந்த**

## வாஸ் அடிகளாரின் பிறப்பு

இந்தியாவின் கோவா மாநிலத்தின் சல்செத்தே (Salcete) எனுமிடத்தில் அமைந்துள்ள சுவாரி (Zuari) நதியின் தெற்குக் கரையோரமாய் சன் கோலே (Sancoale) எனும் கிராமம் அமைந்துள்ளது. 17ம் நூ-ற்றாண்டின் நடுக்காற்றில் கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும், பாரம்பரிய, ஏழ்மையான பண்புகளைக் கொண்ட கொங்கொணி மொழி பேசும் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. இக்கிறிஸ்தவ குடும்பம் பக்தியிலும், நேர்மையிலும், பிறரன்பு பணிகளிலும் சிறந்து விளங்கியது. இதனால் இக்குடும்பத்தைச் சூழ்ந்து வாழ்ந்த ஏனைய குடும்பங்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தது. இது ஒரு பிராமணக் குடும்பமாக இருந்தாலும் “வாஸ்” (Vaas) என்ற போர்த்துக்கேய கிறிஸ்தவப் பெயரை தம் குடும்பப் பெயராக பெற்றிருந்தது. உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருந்த மத்திய வயதுடைய கிறிஸ்தோப்பர் வாஸ் என்பவரே இக்குடும்பத்தின் தலைவர். சாதாரண வசதியுடையவர். இவர் விவசாய தொழிலையும், சிக்கனத்தை கடைப்பிடிப்பவராகவும், ஆழ்ந்து சிந்திப்பவராகவும் இருந்தார். இவரின் மனைவியின் பெயர் மரிய டெ மிரண்டா, கிறிஸ்தோப்பரின் குடும்பத்தை போலவே, மரிய மிரண்டாவின் குடும்பமும் நன்மதிப்பான குடும்பப் பண்பும், கத்தோலிக்க மறை உணர்வு கொண்டதாகவும் விளங்கியது.

இத்தகைய நிலையில் இருவரும் திருணம் புரிந்து சந்தோஷமாக வாழ்ந்து வந்த நிலையில், இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது. குழந்தைகளுடன் சந்தோஷமாக தம் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த வேளையில் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்கின்ற குழந்தையாகவும், இந்திய, இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் தம் பெயரை பதிப்பவராகவும், தலைமுறை தோறும் எடுத்துக் காட்டான குருவாகவும், கீழைத்தேய விசுவாசத்தின் கொடையாகவும் விளங்கிப் போகின்ற “யோசேவ்வாஸ்” எனும் குழந்தையை குடும்பத்தின் மூன்றாவது குழந்தை-யாக 21 சித்திரை 1651ம் நாளன்று மரிய மிரண்டா பெற்றெடுத்தார் என்றாலும் யோசேவ்வாஸ் தன் தாயின் ஊராகிய பெணாலியம் எனும் சிற்றூரில் பிறந்தார். பிறந்து எட்டாம் நாள் பங்கு ஆயலமான திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது.

## வாஸ் அடிகளாரின் குருத்துவக் கல்வி

யோசேவ்வாஸ் அடிகள் இயேசு சபையினரால் நடாத்தப்பட்ட புனித பவுல் கல்லூரியில் தனது இலக்கணக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்தார். தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடாத்தப்பட்ட பிரசித்தி பெற்ற புனித தோமஸ் அக்குவைனஸ் உயர் கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இக்கல்வி பயின்ற காலத்தில் கல்லூரி படிப்புடன் இணைந்து, அதனுடன் இருந்த செபமாலை அன்னை ஆலயத்தில் ஏனைய குருமார்களுடன் தங்கியிருந்து பயிற்சி பெற்றார். இவ்வாறு கோயிலில் தங்கியிருந்து ஆறு வருட காலமும், சன்கோவிலும், பெனோணியிலும் வாழ்ந்தது போன்று அர்ப்பணத்துடனும் வாழ்ந்து பல பயனுள்ள விடயங்களை கற்று, நல்லதொரு குருவாக உருவாக்கம் பெறவேண்டும் எனப்தை இலக்காகக் கொண்டிருந்தார். படிப்பின் மேல் இவர் கொண்டிருந்த ஆர்வமோ அல்லது சகபாடிகளின் நட்போ சிறிதும் கூட இவரது செப, தவ, புண்ணிய வாழ்வைத் தளர்வடையச் செய்யவில்லை. ஆரம்ப காலத்திலிருந்த தம்மை மேன்மைப்படுத்தாத வாழ்வின் பழக்கம் மேலும் அவர் குருத்துவத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் போது ஆழமாக வேரூன்றியது. இவர் தமது இருபதாவது வயதில் குருத்துவ வாழ்வுக்கும், இறைபணிக்கும் தன்னை அர்ப்பணித்துக் குருத்துவத்துக்கு முன் வழங்கப்படும் பட்டங்களைப் பெற்றார். 1675ம் ஆண்டில் போர்த்துக்கேய சிஸ்ரேசியன் சபைக் குரு அன்ரோனியோ பிறாண்டா ஓ பேராயராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து வந்த ஆண்டில் புதிய ஆயரால் யோசேவ்வாஸ் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இப்புதியக்குரு தனது பேராசிரியர்களிடமிருந்து மிகச்சிறந்த நன்நடத்தை சாட்சிகளைப் பெற்றிருந்ததினால் கோவாவின் மிகப்பரந்த ஆன்மீக எல்லைக்குள் நற்செய்தி போதிப்பதற்கும், பாவமன்னிப்பு அருட்சாதனங்களை வழங்குவதற்கும் அனுமதி பெற்றுக் கொள்வதில் எவ்வித சிரமங்களும் இருக்கவில்லை. ஆனால் அவருக்கு எந்தவித குருத்துவ நிர்வாகப் பொறுப்பும் அளிக்கப்படாததால் அவர் தன்னுடைய சொந்த கிராமமான சன்கோலேயில் பங்குக் குருக்களுக்கு ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் உதவி வந்தார். இவரிடம் ஆழமான பக்தியும், பணியாற்றுவதில் கொண்டிருந்த ஆர்வமும் நன்கு வெளிப்பட்டதால் தலைநகரில் போதிப்பதற்கும் ஆன்ம வழிநடத்தலுக்கும் பணிக்கப்பட்டார். அந்நாட்களில் இரு முக்கிய நபர்களான டொன் ரொட்றிகோ டொ கோஸ்ரா, லூயிஸ் கொன்சால்வேஸ் கேட்டா ஆகியோர் கோவா மாநிலத்தில் தொடர்ச்சியாக ஆளுநராக பணியாற்றிய காலத்தில் தமது ஆன்மீக வழிகாட்டியாக சன்கோலேயின் யோசேவ்வாஸ் அடிகளாரை கொண்டிருந்தனர். எனினும் இந்தப் பணிகள் மட்டில் புதிய குரு எந்தவித திருப்தியும் கொண்டிருக்கவில்லை. எனவே தம் கிராமத்திலிருந்து உயர் கல்வியை அல்லது குருத்துவக் கல்வியை மேற்கொள்ளவிருந்தவர்களுக்கு இலத்தீன் மொழியைக் கற்பித்தார்.

இக்கல்வியை மேற்கொண்ட முதல் தொகுதி மாணவர்களில் அவருடைய மூத்த சகோதரி அஞ்சலாவின் மகன் Joseph Carvalho ஒருவர். இவர் வாஸ் அடிகளாரின் நட்பை பெற்றதனால் அவர் வாஸ் அடிகளாரை எல்லா நிலையிலும் பின்பற்றினார். முதலில் கன்னடத்திற்கும், தொடர்ச்சியாக குருத்துவத்திற்கும் ஒரற்றோரியன் சபைக்கும் இறுதியாக இலங்கை மண்ணில் தமது மாமனாருக்கு பக்க பலமாக இருந்து அங்கேயே பணிபுரிந்து மரணத்தை தழுவிக் கொள்ள முனைந்து, நின்றார். மற்றுமொரு முக்கிய நபர் Joseoh De Mences இவர்கள் இருவரும் தம் ஆசிரியரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, குருவாகி, ஒரற்றோரியன் சபையில் இணைந்து கன்னடத்திற்கும் இலங்கைக்கும் பணியாற்ற சென்றார். மெனெஸ்செஸ் அடிகள் 27 வருடங்கள் இலங்கையில் பணி செய்தார். இவ்வாறு யோசேவ்வாஸ் அடிகள் பணிபுரிந்தபோதும், அவருக்கு இந்தப் பணிகள் யாவும் திருப்தியளிக்கவில்லை. இந்நிலையில் 1678ல் கன்னடத்தில் நிகழ்ந்த பேராயர் பிராண்டே அவர்களின் மரணத்திற்குப் பின் அவரது ஆதரவாளர்களும், குருக்க-ளும் கன்னடத்தை விட்டு வெளியே சென்றனர். இதனால் கோவை திரு அவை மூன்று ஆண்டுகளாக எவ்வித செயற்பாடுகளையும் செய்யவில்லை. இதனை அறிந்த யோசேவ்வாஸ் அடிகள் கன்னட மக்கள் மீது பரிவு கொண்டு கன்னடா சென்று பணிபுரிய முன்வந்தார். இவ்வாறு இச்சிலை தம் தாழ்ச்சியினால் தீர்த்து வைப்பார் என்று பெரும் கனவிலும் எண்ணியிருக்மாட்டார்கள்.

## இலங்கை பயணத்திற்கான திட்டமும் அழைப்பும்

இலங்கை கத்தோலிக்கர்கள் எல்லா நிலையிலும் முழுமையாக கைவிடப்பட்டிருந்தார்கள். போர்த்துக்கேய மன்னன் இந்தியாவின் மறைப்பணித்தளங்களின் காவல்-களையும், அவற்றின் மட்டில் எல்லா அதிகாரங்களையும் கொண்டிருந்தான். எனினும் இந்தியாவிலிருந்த அவனது பிரதிநிதிகளான திருச்சபை சிவில் அதிகாரிகள் இலங்கை கத்தோலிக்கருக்கு உதவுவதற்காக எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்திய மறைமாவட்ட குருக்களில் பெருந்தொகையினர் கோவாவில் படித்தவர்கள். பயிற்றப்பட்டவர்கள் அறிவும் அனுபவமும் கொண்டவர்கள். பங்குகளில் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள். எனினும் வெளிநாடுகளுக்கு சென்று பணி செய்யும் வழக்கம் துறவற சபைகளுக்கு மட்டுமே உரித்தானது என்ற நிலையில் எண்ணியதால் இவர்கள் தங்கள் மறைமாவட்டத்தை விட்டு வெளியே செல்ல இணக்கம் சொல்லவில்லை. எனினும் இக்காலத்தில் பணிபுரிந்த துறவற சபைகள் இந்தியர்களை தம் சபைக்குள் இணைத்துக் கொள்வதில்லை எனும் கடுமையான போக்கு கொண்டிருந்தனர். அதேவேளை இப்பின்னணியில் ஒரு ஐரோப்பிய துறவி இலங்கையில் ஒல்லாந்தரின் கண்காணிப்பில் நுழைவது என்பது முடியாத விடயமாக இருந்தது.

இதுவே இந்தியத் திருச்சபையின் நிலையாகவும், இலங்கைக் கத்தோலிக்கரின் விதியாகவும் இருந்தது. இப்பின்னிணியில் தான் யோசேவ்வாஸ் அடிகளாருக்கு இலங்கையில் பணியாற்ற அழைப்பு வந்தது. காரணம் துன்பங்களை அனுபவித்த இலங்கை கத்தோலிக்கர் மட்டில் அக்கறையுடன் பணியாற்ற ஒரு குரு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இலங்கையில் பணி செய்வதிலும் பார்க்க வேறு எவ்வகையில் கடவுளுக்கு பணி ஆற்ற முடியும் என்பதை கருத்தில் கொண்டுள்ளார். இலங்கைக்கு செல்லும் விடயம் பற்றி யோசேவ்வாஸ் அடிகள் தனது சக குரு நண்பர்களின் ஆலோசனையை பெறுவதென்று தீர்மானித்தார். அவர்களுள் ஒரு சிலர் தன்னோடு சேர்ந்து இலங்கை திருச்சபைக்கு மீண்டும் உயிர் அளிப்பார் என உள் மனதில் எண்ணினார். ஆனால் தனது திட்டத்தைப்பற்றி எந்தக் குருக்களோடு கலந்துரை-யாடினாரோ அத்திட்டம் நடைமுறைக்கு ஒவ்வாததாக கருதினார்கள். எனினும் இலங்கையின் பணிபுரிவது பற்றிய ஆபத்தான நிலையையும் யோசேவ்வாஸ் அடிகள் மனதில் கொண்டிருந்தார். எனவே வேறு எந்த குருவின் ஆதரவும் அவருக்கு கிட்டவில்லை. எனினும் இது தொடர்பாக யோசேவ்வாஸ் அடிகள் தன் குருமுதல்வரிடம் கூறிய போது அவர் யோசேவ்வாஸ் அடிகளாரை கன்னடத்திற்கு செல்லும்படி பணித்தார். இந்நிலையில் தனது ஆன்மீக வழிகாட்டியிடம் யோசேவ்வாஸ் அடிகள் அறிவுரை கேட்டு, பின்னர் தன் மருமகனாகிய யோசேவ்வாசயே அவர்களுடன் பணியை கன்னடத்தில் ஆரம்பித்தார்.

### யாழ்ப்பாணத்தில் அடிகளாரின் பணி

1687ம் ஆண்டு யாழ்ப்பாணத்தை அடைந்த வாஸ் அடிகள் நடைபாதை வழியாகவே யாழ் மண்ணை அடைந்தார். பெரும் களைப்பும் சோர்வும் அவருக்கு இன்னல்களை கொடுத்தது. பசியினால் வாடினார். இவர்களை கவனிப்பதற்கு ஒருவர் கூட இல்லை என்றாலும் ஒரு விதவைப் பெண் இவர்கள் இருவரும் படும் துன்பத்தைக் கண்டு நாள்தோறும் கஞ்சி கொடுத்து இவர்களின் உடல்நிலையை தேற்றினாள். யோணும், வாஸ் அடிகளாரும் நோயினால் பீடிக்கப்பட்டனர். இந்த நோய் கொள்ளை நோயாக மாறும் சந்தர்ப்பமும் இருந்தது. நோயினால் பீடிக்கப்பட்ட வாஸ் அடிகள் முற்றிலும் அடையாளம் மாறி வேற்று நாட்டினர் என்று அறிந்து கொள்ள முடியாதவாறு இருந்தார். எனினும் இவர் ஏழைகள் மட்டில் காட்டிய கரிசனை, தற்போது இவருக்கு தேவைப்படும் வண்ணமாக இருந்தது. எனினும் இந்த நிலையில் கரிசனையை நாடும் ஒரு மனிதராகவே இருந்தார். வாஸ் அடிகளின் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள் அவரது பணிவாழ்வில் இறை பராமரிப்பின் வழிகாட்டலாகவே கொள்ளுதல் பொருத்தமாகும்.

வாஸ் அடிகள் முதலில் தமது விசுவாசத்தை வெளிப்படையாக காண்பிக்க முற்பட்டார். தமது கழுத்தில் பெரிய செபமாலை அணிந்து கொண்டு வீடுகளுக்கு செல்லும்போது வீட்டிலுள்ளவர்களின் செயற்பாடுகளை கவனித்தார். ஒல்லாந்தரின் மதத்தினர் அவரைக் கேலி செய்து நிந்திப்பர். கிறிஸ்தவர் அல்லாத மக்கள் எந்த விதத்திலும் இதை பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால் கத்தோலிக்கருக்கு, ஒல்லாந்தரின் இறுக்கமான கெடுபிடிகள் மத்தியிலும் பகிரங்கமாகச் செபமாலை அணிந்து நடமாடும் இவர் விசுவாசமுள்ள மனிதர் என்பதிலும் மேலாக ஒல்லாந்தரின் கெடுபிடிகள் மத்தியிலும் தம் மறையில்

# ளிதரே
# கின்றோம்.

**ாசப்வாஸ் ஆண்டாக பிரகடனம்
கப்படும் இப்புனிதர் இலங்கை
ப நிலையில் புனிதரின் பிறப்பு
ளவேனும் இப்புனிதரைப்பற்றி
ந்து.**

பெருமை கொள்ளும் ஒருவராகவே கணித்தனர். இவ்வாறு வாஸ் அடிகள் கத்தோலிக்கரை இனங்காண முற்பட்டார். வாஸ் அடிகளாரின் திட்டம் வெற்றியளித்தமைக்கு யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கருக்கும் பங்குண்டு. சில நாட்களாக யாழ்ப்பாணப் பகுதியில் சுற்றியலைந்து கத்தோலிக்கரையும், கத்தோலிக்கரல்லாதவரையும் இனம் காணும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தாம் கழுத்தில் அணிந்திருந்த செபமாலை காரணமாக தமக்கு இருக்கும், தாரள குணமும்காண்பித்த இல்லங்களை இனங்கண்டு அவ்வீட்டிற்கு அடிக்கடி சென்றார். இவ்வீட்டினர் செய்த உதவிகளுக்கு நன்றியாக சிலுவை அடையாளத்தை வரைந்தார். அதன் பின் சில கத்தோலிக்க அடையாள வார்த்தைகளை கூறினார். இதுபோல கத்தோலிக்க வீடுகளை அடையாளம் காண்பதற்காக அவர்களின் சிந்தனைகளை தூண்டினார். “ஒரு குருவானவரிடம் திருவருட்சாதனம் பெற்றுக் கொள்ள விருப்பமா?” என்ற கேள்வி ஒவ்வோர் மனதையும் ஆழமாக தூண்டியது. பிச்சைக்காரனின் இந்தக் கேள்வி மக்களுக்கு பல வினாக்களை கொணர்ந்தது. குறிப்பாக மக்கள் இந்த கேள்வியைக் கேட்ட பின் யார் சரி ஒரு குரு இந்தியாவிலிருந்து வந்துள்ளனரா? கத்தோலிக்கரை இனங்காண்பதற்காக இந்தப் பிச்சைக்காரனை அனுப்பியிருக்கலாம் என்று சிந்தித்தனர். இதன்பின் இந்தப் பிச்சைக்காரக் வருமளவும் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். காரணம் இந்தப் பிச்சைக்காரன் ஏனைய பிச்சைக்காரர்களைப் போல் அல்லாமல் மிகவும் அடக்கமானவனாகவும், அமைதியானவராகவும் காணப்பட்டான். அத்தோடு நன்கு கற்றவன் போன்று தென்பட்டான். எனவே சிலவேளை இந்தப் பிச்சைக்காரன் தான் குருவாக இருக்கமுடியுமா? என்று மக்கள் எண்ணினர்.

## சில்லாலையில் அடிகளாரின் பணி

மாறுவேடத்தில் இலங்கைக்கு ஒரு கத்தோலிக்க குரு வந்துள்ளார். சில்லாலை மக்கள் அக்குருவிற்குப் பாதுகாப்பு வழங்குவராயின் அவர் சில்லாலையில் தங்குவாரென்றும் செய்தி சின்ன உரோமை என அழைக்கப்பட்ட சில்லாலையின் முக்கிய கத்தோலிக்கர்களுக்கு அறிவிக்கப்பட்டது. சில்லாலை மக்களுக்கு இதைவிட வேறு மகிழ்ச்சியான செய்தி இருக்க முடியாது. எனவே உடனடியாக நம்பிக்கையான ஒரு பாதுகாப்பு குழு யோசேவ்வாஸ் அடிகளாரை மிகுந்த அவதானத்துடன் அழைத்து வருவதற்கு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டது. கலாபனை எனும் வனாந்தரத்தில் விசுவாசம் எனும் கானல் கிடைக்கப் பெறவும், சில்லாலை மிகப் பொருத்தமான இடமாக அமைந்தமைக்கும் முக்கிய காரணிகளும் உண்டு. முதலில் சில்லாலை முழுவதும் கத்தோலிக்கரைக் கொண்ட கிராமமாகும். விசுவாசம் தொடர்பான விடயங்களில் மக்களின் ஏகோபித்த முடிவைப் பெறுவதும் இலகுவாயிருந்தது. மேலும் இது யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கு பகுதியில் பத்துமைல் தூரத்தில் அமைந்துள்ளது. ஒல்லாந்த ஆட்சியாளரின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு கவர்ச்சியான எந்த விடயங்களும் அங்கு காணப்படவில்லை. இதனால் இவ்விடம் ஒல்லாந்த சீர்திருத்த மறைப்போதகர்களின் கவனத்திலிருந்து தப்பியது. மேலும் இக்கிராமத்து மக்கள் குருக்களின் உதவியின்றி தங்கள் விசுவாசத்தை காக்கவும், தங்கள் பிள்ளைகளுக்கு தாங்களே மறையறிவை அளிப்பதற்கும் தங்களை தயார்படுத்தியிருந்தார்கள்.

போர்த்துக்கேய ஆட்சிக்காலத்தில் இயேசுசபைக் குருக்களால் நிர்வாகிக்கப்பட்ட ஆலயங்களில் குருவானவர் ஒரு மறையாசிரியரை நியமித்து மறையறிவை அளித்ததுடன், அம்மறை ஆசிரியரே ஆலயத்தை பராமரிப்பதுடன் பாடசாலை ஆசிரியராகவும் கடமையாற்றினார். இந்நடைமுறை மக்கள் மத்தியில் விசுவாசத்தில் நிலைத்திருந்தது. காரணம் இங்கு தெரிந்தெடுப்போர் பிள்ளைகளுக்கு மறையறிவைக் கொடுக்கவும், பிறந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், இறந்துபோனவர்களுக்காக வழிபாடுகளை முன்னின்று நடத்தவும் தொடங்கியிருந்தனர். என்றாலும் வாஸ் அடிகள் மற்றவர்களில் இருந்து கற்றுக்கொள்வார். இந்நடைமுறையை தாமும் கற்றுகொண்டு கத்தோலிக்க கிராமங்களில் இம்முறையை பயன்படுத்தினார். இப்பணியை செய்வோரை “மூப்பு” என அழைத்தனர்.

## புத்தளத்தில் அடிகளாரின் பணி

புத்தளத்தில் வாஸ் அடிகள் தம் பணியினை அச்சமேதுமின்றி நிறைவாக மேற்கொண்டார். அடிகளாருக்கு ஒல்லாந்தரின் கெடுபிடிகளேதும் இருக்கவில்லை. புத்தளத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தராளமாக கத்தோலிக்கர் வசித்தனர். குருக்களோ, அருட்சாதன வசதிகளோ போதியளவு இல்லாவிட்டாலும் மதத்தின் பேரில் இழைக்கப்பட்ட துன்புறுத்தல்கள் இல்லாமல் வாழ்ந்தனர். இப்புத்தளப்பகுதி இயேசுசபைக் குருக்களால் மறையறிவிப்பு செய்யப்பட்ட பகுதியாகும். ஆரம்பத்தில் கைவிடப்பட்ட வளமற்ற ஆறு சிற்றூர்களைக் கொண்ட கற்பிட்டி, குடாநாடு, கொழும்பு இவை இயேசு சபையினரின் நிர்வாகத்தில் இருந்தது.

வாஸ் அடிகள் புத்தளப்பகுதியில் சுமார் 1000 கத்தோலிக்கர்களையும், அவர்களின் ஆலயமொன்றையும் கண்டார். கத்தோலிக்கர் தம் விசுவாச நிமித்தம் இங்கு துன்புறுத்தப்படவில்லை. எனினும் குருக்களின்மையால் அவர்களின் ஆன்மீக நிகழ்வு வறண்டு போயிருந்தது. மன்னார், யாழ் கத்தோலிக்கர்களின் நிலையைவிட புத்தளப் பகுதி கத்தோலிக்கரே மிகுந்த ஆன்மீக வரட்சியினால் வாடினர். ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக திருப்பலி, திருவருட்சாதன, மறைக்கல்வி ஏதுமில்லாமல் கத்தோலிக்கர் புறந்தள்ளப்பட்டனர். எனினும் அவர்கள் தம் விசுவாசத்தை இழந்து போகவில்லை. வாஸ் அடிகளின் வருகையும், பணியும் கத்தோலிக்கருடையே புதுவேகத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. வாஸ் அடிகளாருக்கு அருட்சாதனங்களை நிறைவேற்றுவதும், புதிய பிள்ளைகளை மறையில் சேர்ப்பதற்கும் இலகுவாக இருந்தது. பயமோ, இடைஞ்சலோ இன்றி சுமூகமாக பணியாற்றினார். பிரசங்கித்து, பேயோட்டி கிராமம் கிராமமாக சென்று மறைக்கல்வியை போதித்து, கிறிஸ்தவ கோட்பாடுகளை கற்பித்து, அருட்சாதனங்களை நிறைவேற்றி பணிசெய்தார். பழுதடைந்த ஆலயங்களை புனரமைத்து மறைவேதியர்களை நியமித்து குருக்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் வழிபாடுகளை நடாத்த ஆயத்தம் செய்து கற்பித்தல் பணியிலும் அவர்களை வழிநடத்தினார்.

## கைகொடுத்த கண்டி இராச்சியம்

வாஸ் அடிகள் விரும்பியிருந்தால் ஏழுகோரளைவிலிருந்து நீர்கொழும்பிற்கும், கொழும்பிற்கும் சென்றிருக்கலாம். இருப்பினும் ஒல்லாந்த ஆளுகைக்குட்பட்ட இடங்களில் மறைபணியாற்றுவது கண்டி இராச்சியத்தில் பணிபுரிவதைப் போன்று இலகுவானதில்லை. ஒல்லாந்த பகுதிகளில் குருக்கள் இராகசியமாக மாறுவேடந்தரித்தும் இரவு வேளைகளில் நடமாட முடிகிறது. குருக்கள் கைது செய்யப்படுமிடத்து மரணதண்டனை விதிக்கப்பட்டது. குருக்களை தாபரிக்கின்ற, அவர்களுக்கு தஞ்சம் கொடுக்கின்றவர்களுக்குக் கூட கடுமையான மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒல்லாந்த பகுதியிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. மறுபக்கத்தில் கண்டி இராசதானியிலோ எவ்வித இடையூறுமின்றி கத்தோலிக்கர் தம் மதத்தை பின்பற்றவும், கத்தோலிக்க குருக்கள் மறைபணி செய்யவும் வசதியிருந்தது. கத்தோலிக்க மதம் கண்டியரசனின் நன்மதிப்பையும், அனுசரனையையும் பெற்றிருந்தது.

ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கைத் தீவின் அநேக கத்தோலிக்கர் ஒல்லாந்த ஆட்சித்தளங்களான கொழும்பு, நீர்கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணப் பகுதிகளிலே செறிந்து வாழ்ந்தனர். இருப்பினும் 12 இந்த இடங்கள் கண்டி இராச்சியத்தின் எல்லைகளையடுத்து அமைக்கப்பட்டிருப்பதனால் அங்கிருந்து கொண்டு இலகுவாக இவ்விடயங்களை அடைய முடிந்தது. எனவே கண்டி இராச்சியத்தில் இருக்கும் குரு ஒருவர் மிகச் சுலபமாக ஒல்லாந்தர் பகுதிகளுக்குள் உள்ளிருந்தும் ஆபத்து வேளைகளில் கண்டி நிலப்பகுதிக்குள் மீண்டும் வந்துவிடுவதும் சாத்தியமாக இருந்தது. எனவே தங்கியிருப்பதற்கு குருக்கள் தேர்ந்தெடுக்கின்ற இடம் ஏழுகோறனைகள் தவிர்ந்த கண்டி இராச்சியப்பகுதியாகவே அதிலும் சிறப்பான தீவின் மத்திய நகரானகண்டி தலைநகராகவே அமைந்துவிட்டால் கூடுதல் நன்மை. எனவே கொழும்பு, நீர்கொழும்பு பகுதிகளுள் உள்ளிடுவதற்கு முன்பாக வாஸ் அடிகள் கண்டி நகரிற்கு சென்று அங்கிருந்து பயணத்தை தொடங்கினார்.

கண்டி இராச்சியத்திலிருந்து புத்தளப்பகுதிக்கு வந்திருந்த சில கத்தோலிக்க வியாபாரிகள் அப்பகுதியில் கத்தோலிக்க குரு ஒருவர் இருப்பதை கேள்வியுற்று அவரை அணுகி தம் ஆன்மீக தேவைகளை நிறைவு செய்து கொண்டனர். அவர்கள் அப்பகுதியை வசிக்கக்கூடிய பிற கத்தோலிக்கரைப் பற்றிய விபரங்களை குருக்களுக்கு வழங்கினர். இக்கத்தோலிக்கர்கள் போர்த்துக்கேய வம்சாவழியினராக கொழும்பிலிருந்து இடம்பெயர்ந்து வந்து சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் வாழ் இடங்களில் ஒல்லாந்தரின் சித்திரவதைக்கஞ்சி அங்கிருந்து தப்பி புத்தளப் பகுதிகளில் தஞ்சமடைந்தனர். கண்டியரசனும், கொழும்பு ஒல்லாந்தர்வசம் வீழ்ந்தாலும் போர்த்துக்கேய வம்சாவழியினர் விரும்பினால் கண்டி இராச்சியத்திற்கு வரலாம் என அறிவித்தான். ஏராளமானோர் குடும்பம் குடும்பமாக கண்டி இராச்சிய நிலப்பரப்பில் ஒதுக்கப்பட்டிருந்த பகுதிகளில் குடியமர்ந்தனர். அவர்களுக்கு நடமாடும் சுதந்திரமும் வியாபாரம் செய்யும் அனுமதியும் வழங்கப்பட்டதோடு பிற சங்க, ஆள்வரிகளிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டது. அதேபோல் நீர்கொழும்பிலிருந்து இடம்பெயர்ந்த கத்தோலிக்கரும் மந்தையோரும் கண்டி இராச்சிய எல்லைக்குள் குடியளித்தான். ருவான்வெல எனும் பாதுகாப்பான இடத்தில் தம் வீடுகளையமைத்து வாழ்வதற்கும் அரசன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தான். இவ்வாறு கண்டி இராச்சியம் வாஸ் அடிகளாருக்கு இலகுபணி செய்ய கைகொடுத்தது.

## கண்டி நகரில் அயராத ஆன்மீகப் பணி

கண்டியில் மக்களின் தேவைகளை அறிந்து கொண்டு தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் ஆன்மீகப் பணிகளை அடிகளார் செய்து வந்தார். அரச தடை உத்தரவு இருந்த போதிலும் கத்தோலிக்கர் யாரேனும் வருத்தத்திலோ உயிர் பிரியும் ஆபத்திலோ இருந்தால் அவர்களை சந்தித்தார். வாஸ் அடிகள் யாழில் இரகசியமாகவும் இரவிலும் செய்த அதேபணியை கண்டியில் பகிரங்கமாக செய்தார். மறையை போதிப்பதும் பொருத்தமான வழிகளில் விசுவாசிகளை நெறிப்படுத்தவும் முக்கிய தேவையாக இருந்தது.

இக்காலத்தில் கண்டியில் பெரும் வரட்சி நிலவியது. இங்கு இருக்கும் மக்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறு. மழையின்மையால் நெற்பயிர்ச் செய்கை தடைப்பட்டுப் போனது. மனிதரும், விலங்குகளும் இன்னலுக்குள்ளானார்கள். வழமையான மூடநம்பிக்கைகள் எதுவும் மழையை வருவிக்கவில்லை. வாஸ் அடிகளின் பரிசுத்த தனத்தை அறிந்த விமலதர்ம சூரிய மன்னன் தம் அரச சபையிலுள்ள கத்தோலிக்கர் மூலமாக மழைவேண்டி செபிக்க வாஸ் அடிகளை அழைத்தான். வாஸ் அடிகளும் மன்னனின் அழைப்பை ஏற்றார். “அரசருக்கு நம்பிக்கை இருக்குமாயின், அது இறைவனுக்கு மகிமையாயின் மழைபொழிவது உறுதி. ஏனெனில் இயற்கை அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டது” என அடிகள் கூறினார். அரசமாளிகையின் முன்னுள்ள முற்றத்தில் தாம் சிறையில் அமைந்திருப்பதைப் போன்று பீடத்தை அமைத்து அதில் ஒரு சிலுவையைப் நிறுத்தி மழைவேண்டி செபித்தார். இறையருளால் மழைபெய்தது. அரசனின் நல்லெண்ணத்தையும் பன்மடங்காக்கியது. முழந்தாளிட்டு செபித்த மக்கள் எழுந்திருப்பதற்கு முன்பாக அடைமழை பூமியை தொட்டது. இருப்பினும் வாஸ் அடிகள் இருந்த இடத்தில் மழை பெய்யவில்லை. அவரின் செபத்தையும் அது குழப்பவில்லை.

இந்நிகழ்ச்சி கண்டி சோதனையை வெல்ல இறைவனிடமிருந்து கிடைத்த ஒரு ஆச்சரியமான செயலாக இருந்தது. எல்லோர் கண் முன்னும் வாஸ் அடிகள் செபத்தில் ஆழ்ந்தார். இதன்பின் அரசனின் உத்தரவை பெற்று தீவு முழுவதிலும் ஒல்லாந்த பகுதிகளிலும் துணிச்சலோடு பணிசெய்ய வழிவகைகள் பிறந்தன. வாஸ் அடிகள் எதிர்பாராத சலுகைகளையும், வசதிகளையும் அரசன் வழங்கினான். எட்டத்திலிருந்த கத்தோலிக்கர் வாஸ் அடிகளாருக்கு கிடைத்த பெருமையையும், சலுகைகளையும் கண்டு தம் கத்தோலிக்க விசுவாசத்திற்கு திரும்பி வந்தார்கள். உறுதியடைந்தார்கள். நகரில் வாழ்ந்தோரிடையே மனமாற்றமும், மதமாற்றமும் நிகழ்ந்தன. இவையெல்லாம் புதுமையான விதத்திலே மழைவந்தது என்பதை காட்டுகிறது.

அன்றிலிருந்து விமலதர்மசூரியவின் நல்லெண்ணம் பெருகியது. ஆரம்பத்தில் வாஸ் அடிகளாருக்கு கடுங்காவல் விதித்திருந்த அரசன் பின்பு அதனை தளர்த்திக் கொண்டான். அடிகளிடம் கத்தோலிக்கர் போகவும், அவர் கத்தோலிக்கருக்கு பணிபுரியவும் அனுமதித்தான். வாஸ் அடிகள் நகரில் சுதந்திரமாக நடமாடி சேவை செய்ய அனுமதித்தான். டெபோ நெறோவின் சூழ்ச்சிகளையும், குற்றச்சாட்டுக்களையும் ஒதுக்கி வாஸ் அடிகளாருக்கு விடுதலையும் ஒத்தாசையும் வழங்கி தம் இராசதானியில் மாத்திரமல்ல ஒல்லாந்த பகுதிகளுக்கும் சென்று திரும்ப வசதி செய்து கொடுத்தான். தன் அரசின் முக்கியஸ்தர்களுக்காக வெளிநாட்டவருக்கோ வழங்காத சலுகையினை அரசன் அடிகளாருக்கு வழங்கினான்.

அரசவைக்கு அடிகளை வரவழைத்து அவரோடு தனிமையில் உரையாடுவதை அரசன் வழக்கமாக்கிக் கொண்டான். வாஸ் அடிகளார் மதிக்கப்படவும், மரியாதை செய்யப்படவும் அரசன் வழிவகுத்தான். அவருக்கு மாத்திரமே இவ்வாறான பிரத்தியேக மரியாதை கிடைத்தது. பிற கத்தோலிக்க குருக்களும்அரசனால் மதிக்கப்பட்டனர். இவ்வாறு கண்டி அரசன் வாஸ் அடிகளார் தன் இராசதானியில் பணிசெய்ய முழுமையான ஒத்துழைப்பை வழங்கினான். இதனால் ஏராளமானோர் கத்தோலிக்க மறையில் இணைந்து கொண்டனர். வாஸ் அடிகளார் துணிவுடன் அனைவருக்கும் நற்செய்தியை அறிவித்தார். இவ்வாறு வாஸ் அடிகள் ஒல்லாந்த பகுதிகளுக்கு தன் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு கண்டி நகருக்கு வெளியே வாழ்ந்த பெண்களையும், குழந்தைகளையும் தரிசிப்பதில் ஆர்வம் காட்டினார். இவ்வாறு கண்டி இராச்சியத்தில் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கத்தோலிக்கரை ஒன்றுகூட்டி சிற்றாலயம் அமைத்துக் கொண்டு அதில் வழிபாடுகளை செய்து மக்களின் ஆன்மீக காரியங்களை நிறைவேற்றினார். இவ்வாறாக கண்டி இராசதானியில் பல பணிகளை புரிந்த வாஸ் அடிகள் ஒல்லாந்த பகுதிகள் மட்டில் மிகுந்த கவனம் கொண்டிருந்து தன் மறைத்தூதுப் பயணங்களை ஆரம்பித்து தன் பணியை பரவலாக்கினார்.

தொடரும்

**(இக்கட்டுரையானது இறையியல் இறுதி ஆண்டில் என்னால் தொகுத்து வழங்கப்பட்ட ஒன்று)**

**அருட்சகோதரர் டிலோயிட்சன் பெர்னாண்டோ**

**கடவுள் நம்மிடம் அதிக அன்பாக இருக்கின்றார். இதனை ஒரு கதை மூலமாக அறிந்து கொள்வோமாக. லூக் 15ம் அதிகாரத்தை வாசித்து படத்திற்கு ஏற்ற வாக்கியங்களை எழுதி அனுப்புங்கள்.**








**புனித யோசேவ்வாஸ் ஆண்டையொட்டி மட்டக்குளி, புனித மரியாள் மறைப்பாடசாலை மாணவர்களின் சித்திரங்கள்**



ஆக்கம் : R. திவ்யா, தரம் - 2B



ஆக்கம் : தில்ஹியா, தரம் 2A



ஆக்கம் : மேரி எட்றினா, தரம் 10

# தெய்வமாய் நின்ற தாய்

## உன் தாய் தந்தையை மதித்து நட [மத் 19:19]



கடவுளைத் தேடி ஒரு இளைஞன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். பல குருக்கள், பல ஞானிகளை சந்தித்து கேட்டும், யாகங்களைச் செய்து விளக்கம் கேட்டும், பதில் தெளிவாக கிடைக்கவில்லை.

இறுதியாக, இமயமலை உச்சியில் ஒரு முக்காலமும் அறிந்த ஞானி ஒருவரை சந்தித்து விளக்கம் கேட்டார். ஐயா கடவுள் என்பவர் யார்? அவரை எப்படி கண்டு கொள்வது? குரு நீண்ட பெருமூச்சுவிட்டு, நீ ஆட்டை தோளில் வைத்துக் கொண்டு ஊரெல்லாம் அலைகின்றாய், கடவுளை எளிதாக கண்டு கொள்ளலாம். அவர் இடது கால் செருப்பை வலது காலிலும், வலது கால் செருப்பை இடது காலிலும் அணிந்திருப்பார். தேடிப்பார் என்று முடித்தார்.

குழப்பத்தோடு பல ஊர்களில் தேடியும் அப்படி செருப்பணிந்த நபரை அவனால் காண முடியவில்லை. இறுதியாக தளர்ந்துபோய் வீடு திரும்ப நினைத்து தன் சொந்த ஊர் வந்து சேர்ந்தான். இவன் வரும் செய்தியை அறிந்த அவனின் வயதான தாய் மகிழ்ந்து அவனைக் காண ஓடினாள். தாயைப் பார்த்ததும், அவன் தாயின் காலில் விழுந்து தொட்டு வணங்கினான். அப்போது அவள் இவனைப் பார்க்கும் அவசரத்தில், இடது கால் செருப்பை வலது காலிலும், வலது கால் செருப்பை இடது காலிலும் அணிந்திருந்தாள்.

தாயிடம் கடவுளின் அம்சத்தைக் கண்டான்.

சிந்தியுங்கள் விடுதலை பெற....

கடவுளை யாரும் நேரில் கண்டதில்லை. ஆனால் தினம்தோறும் நம் பெற்றோரை நேரில் காண்கின்றோம் கடவுளாய். நமக்கு உயிர் தந்தது நம் பெற்றோர். ஆனால் அந்த உயிராய் நம்மில் உறைபவர் இறைவன். உன்னை பெற்றவரை கை கூப்பி வணங்கு, தெய்வம் உனக்கு காட்சியளிக்கும்.

**பெற்றவர் உடன் இருக்கும் வரை நீ அவர்களின் செல்லக் குழந்தைதான்.**

## இயேசு தேவனே

தேன் பருகும்
வண்டும் நீரே
மலரும் மொட்டுக்கள்
நானே
மலரும் மணமும் நீரே
மெல்லிய இதழும் நானே

இயேசு தேவனே
இயேசு தேவனே
இயேசு தேவனே
இயேசு தேவனே

ஆற்றினில் பொழியும்
பணியும் நீரே
மலரும் பூக்களும் நானே
காற்றின் காரலிவும் அழகும்
நீரே
அசைந்தாடும்
கொடியும் நானே

இயேசு தேவனே
இயேசு தேவனே
இயேசு தேவனே
இயேசு தேவனே

**ஆக்கம் : J. ஜெசிந்தா, தரம் 6, வெளிமட பங்கு,**

## புனித யோசேவ்வாஸ்



**ஆக்கம். P. சரோஜா, தரம் 6, வெளிமட பங்கு,**

1687ல் ஆண்டவர் அனுப்பிய அப்போஸ்தலராக இலங்கைக்கு வந்தார் யோசேவ்வாஸ் அடிகள். இந்திய கோவா நகரிலிருந்து இலங்கையில் இன்னலுறும் கத்தோலிக்க விசுவாசிகளுக்குப் பணி செய்ய தம் முழு வாழ்வையும் அர்ப்பணித்து உழைத்தார். சிறிய காலம் யாழ்ப்பாணத்திலும், பின் கண்டியிலும் சிறப்பாக பணி செய்து கத்தோலிக்க மதத்தைப் பரப்பினார்.

கி.பி 1651ல் கோவை நகரில் பிறந்து 1676ல் குருத்துவப் பணிக்குத் திருநிலைப்படுத்தப்பட்டார். கி.பி 1711 தை மாதம் 16ம் திகதி இறைவனடி சேர்ந்தார். 1995ம் ஆண்டு தை மாதம் 26ம் திகதி திருத்தந்தை இரண்டாம் யோன் போல் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தார். அவர் யோசேவ்வாஸை திருநிலைப்படுத்தி வந்தனைக்குரியவராக உயர்த்துவதற்காகத்தான் இங்கு வருகை தந்தார். இன்று நாம் அவரை இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கின்றோம். நாம் பலவிதமான நட்சத்திரங்களைப் பற்றி அறிந்திருக்கின்றோம். சினிமா நட்சத்திரம், கிரிட்கெட் நட்சத்திரம். ஆம் நட்சத்திரங்கள் ஏராளம். ஆயினும் யோசேவ்வாஸ் ஓர் புதுமையான நட்சத்திரம் அவர் மறைபரப்பு நட்சத்திரம் 1687இல் ஒரு கூலியாள் போல் வேடம் பூண்டு இலங்கைக்கு வந்தார். ஒரு பிச்சைக்காரன் வேடத்தில் சேவை செய்தார். ஒரே ஒரு நெருங்கிய நண்பனான ஜோனோடு பல துன்பங்களை அனுபவித்தார்.



# நாளை பார்க்கலாமே!

இந்த வீட்டுப்பாடத்தை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே நாளை விடுமுறைதானே என்று எண்ணி அன்று படிக்கவில்லை கலா. டி. வி பார்க்க ஓடிவிட்டாள். அடுத்த நாள் வீட்டில் விருந்தினர்! படிக்க நேரம் கிடைக்கவில்லை. ஆசிரியையின் கேள்விக்கு விடையளிக்க முடியவில்லை. அவமானமாகப் போயிற்று.

ஏப்ரலில் தான் பருவ முறைத்தேர்வு. இப்போதென்ன அவசரம்? என்று கிரிக்கெட் விளையாட்டை வேடிக்கைப் பார்க்கப் போய்விட்டான் செல்வன். தேர்வின்போது மலை மலையாய் குவிந்து-விட்டது பாடம்.

தனியார் அலுவலகம் ஒன்றில் பணியாற்றும் வினோத்தும் அன்றைய வேலையை அன்றே முடிக்காமல் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தான். கோப்புக்கள் நிறைந்து விட்டன. மேலாளரிடம் வாங்கிக் கட்டிக்கொண்டான்.

நம்மில் பலரும் இப்படித்தான். நாளை பார்த்துக் கொள்ளலாமே என்று தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறோம். விளைவு?

குழந்தைகள் கதை ஒன்று நினைவிற்கு வருகிறது. ஒரு குளத்தில் மீன்களும், தவளைகளும் இருந்தன. அவற்றில் ஒரு தவளையும் ஒரு மீனும் நல்ல நண்பர்கள். குளத்தில் தண்ணீர் வற்றத் தொடங்கியது. பல மீன்கள் மீன் பிடிப்போர் வலையிலும் தூண்டிலிலும் சிக்கிக் கொண்டன. நமது மீன் மட்டும் தப்பித்து வந்தது. மகிழ்ச்சியாய்த் துள்ளித் துள்ளித் நீந்தி விளையாடியது. குளம் குட்டையாகிக் கொண்டே போயிற்று. குளத்திலிருந்து சென்ற நீரோடையில் தண்ணீர் இன்னும் ஓடிக்கொண்டிருந்தது.

தவளை மீனிடம் “ஓடையில் நீர் இருக்கும் போதே நீந்தி ஏரிக்குப் போய்விடலாம் வா” என்று அழைத்தது. ஆனால் மீனோ “நாளை பார்த்துக் கொள்ளலாமே. என்ன இனிமையாக இருக்கிறது நீந்துவதற்கு?” என்று சொல்லி வர மறுத்தது. ஓடையில் தண்ணீர் நின்று போயிற்று. குளம் வறண்டு விட்டது. தவளை தத்தித் தத்திக் குதித்து ஓடிவிட்டது.
ஆனால் மீன்...? அதற்கு நாளை வரவில்லை.

ஒரு வாசகம் எல்லோருக்கும் தெரியும். நேற்று போய்விட்டது நாளை இன்னும் வரவில்லை. உன் முன்னால் இருப்பது இன்று மட்டும்தான். ஆனால் நடைமுறையில் சாத்தியப்படவில்லையே! எடுக்கும் வேலையைத் தள்ளிப்போட்டுக் கொண்டு தானே போகிறோம்? வாய்ப்புக் கிடைக்கும்போது அதனைச் “சிக்கெனப் பிடித்துக்கொள். நழுவ விடாதே” என்று ஆலோசனை கூறுவது எளிது. ஆனால் அன்றாட வாழ்கையில் அதனைக் கடைப்பிடிக்க முடியவில்லையே?
ஏன்?

பல காரணங்கள். கவனத்தைத் திசை மாற்றும் கவர்ச்சிகள், தோல்வி பயம், வேலையை முடிக்க தேவையான அடிப்படை அறிவு, திறன் இல்லாமை, வேலைப்பளு, எடுத்துக்கொண்ட பணியில் ஆர்வமின்மை இவை சில காரணங்கள்.

கலாவும் செல்வனும் படிப்பதைத் தள்ளிப் போட்டதற்குக் காரணம் டி.வியும் விளையாட்டும்தான். கலாவையும் செல்வனையும் மட்டுமில்லை எல்லா மாணவ மாணவியரையும் இந்தக் கவர்ச்சிகள் இழுக்கின்றன. தொலைக்காட்சியில் இளம் பெண்களை ஈர்ப்பதற்கென்றே பல நிகழ்ச்சிகள். பாடமா படமா என்ற போட்டியில் படமே வெற்றி பெறுகிறது. இந்தக் கவர்ச்சியிலிருந்து விடுபட்டால் தோழிகளுடன் அரட்டை. மீதி நேரங்களில் கனவுலகச் சுற்றுலா. ஒரு சிலர் மட்டுமே புத்தகங்கள் வாசிப்பதில் மூழ்கி விடுகிறார்கள்.

இதே அட்டவணைதான் இளைஞர்களுக்கும். ஆனால் தொலைக்காட்சி பார்ப்பதற்குப் பதிலாக விளையாடுவது அல்லது விளையாட்டைப்பார்ப்பது.

### இவற்றிலிருந்து விடுபட இளையோர் என்ன செய்ய வேண்டும்?

முதலில் வழிகாட்டும் நெறிகளைத் தேர்ந்துக்கொண்டு ஓர் இலக்கை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு வாரத்தில் படிக்க வேண்டியவை எவை? முடிக்க வேண்டிய வேலை எது? என்று குறித்துக்கொண்டு அதன்படி நடக்க வேண்டும். இதற்கு மன உறுதியும் சுய கட்டுப்பாடும் அவசியம். பொழுதுபோக்கிற்கென்று தொலைக்காட்சி பார்க்க என்று நேரத்தை ஒதுக்கி கொள்வது நல்லது. அதோடு நல்ல நண்பர்களின் உதவியையும் நாட வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் கவனம் செலுத்துவது அவசியம்.

அடுத்து தோல்வி பயமும் பின்னுக்கு இழுக்கும் சக்தியாக இருக்கிறது. இந்தப் பாடத்தை ஒரு நாளில் படிக்க முடியுமா? என்னால் இந்த வேலையை ஒரு வாரத்தில் முடிக்க முடியுமா? முடிக்க முடியாவிட்டால் என்ன செய்வது? இப்படிக் குழம்பிக் கொண்டே வேலையைத் தொடங்காமல் இருக்கிறார்கள் பலர். இன்னும் நன்றாகப் படித்த பிறகு போட்டித் தேர்விற்கு அமர்வோம். அடுத்த ஆண்டு சரியான ஆயத்தம் செய்து கொண்டு எழுதுவோமே என்று தள்ளிப் போடுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

எந்தப்பாடத்தைப் படிக்கத் தொடங்கினாலும் அதனைப் புரிந்து கொள்ளத் தேவையான திறனும் அறிவும் இருக்கின்றனவா? என்று கணித்துக் கொள்ள வேண்டும். அதேபோல வேலைப்பளு மிகுதி என்றால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அதனைக் களைய முற்பட வேண்டும்.

இறுதியாக நாம் படிக்கும் பாடத்தில் எடுத்துக்கொண்ட பணியில் முழுமையான ஈடுபாடு வேண்டும் எனக்கு உயிரியல் பிடிக்காதே கணக்குப் பார்க்கும் வேலை எனக்கு வேண்டாமோ என்று இன்றையச் சூழலில் சொல்லி ஒதுக்கிவிட முடியாது. உயர்நிலைப் பள்ளிப் பாடங்களைப் படித்துத்தான் தீர வேண்டும். மேல்நிலைப் பாடங்கள் சிலவற்றை நீங்கள் தான் தேர்ந்தெடுப்பீர்கள். பட்ட வகுப்பிலும் அப்படித்தான். நீங்கள் தேர்ந்து கொண்டீர்களோ பெற்றோர் உங்கள் மேல் திணித்தார்களோ... வேறு வழியில்லை! எடுத்துக் கொண்ட பாடத்தின் மேல் ஆர்வத்தை நீங்களாகத் தான் வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

பாடத்தின் சிறப்புகள் அதனால் பின்பு கிடைக்கும் பயன்கள் எவை என்று அடையாளம் கண்டு கொள்ளத் தொடங்கினால் ஆர்வமும் ஈடுபாடும் தானே வரும். உலர்ந்த சருகு போல இருக்கும் பாடங்கள் கூட உயிர் பெற்று விடும். பார்க்கும் பணியிலும் அப்படித்தான்.


எனவே காலம் தாழ்த்துவதும் தள்ளிப் போடுவதும் உங்களைப் பின்னால் இழுக்கும் சக்திகள். அவற்றை வெற்றி கொள்ளுங்கள். நீங்கள் சோம்பேறி என்று உங்களை நீங்களே தாழ்வுபடுத்திக் கொள்ளாதீர்கள். யாரும் ஒன்றுமே செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்க முடியாது. ஏதாவது செய்து கொண்டிருப்போம். அது தேவையானதாக இருக்க வேண்டும். நாளை நமதுதான். ஆனால் அதற்கு முன்னர் இன்று உங்களுடையது.

## செபம் செய்வதற்கான பதினைந்து காரணங்கள்.



1. ஆண்டவரின் திருமுகத்தை நாடி அவரை மேலும் அறிந்து கொள்வதற்காக. (திருப்பாடல் 27:8)
2. உங்கள் பிரச்சினைகளிலிருந்து உங்கள் கண்களை அகற்றி ஆண்டவரை நோக்கும்படியாக (திருப்பாடல் 121:1)
3. இறைவனோடு பேச (1பேதுரு 3:12)
4. உங்கள் இதயச்சுமைகளை இறக்கி வைக்க (திருப்பாடல் 142:1-2)
5. உங்கள் விண்ணப்பங்களை இறைவனுக்கு தெரியப்படுத்த (மத்தேயு 21:22)
6. இறைவனது குரலைக் கேட்க (பழமொழி 8:34)
7. துன்பங்களிலிருந்து விடுதலை பெற (யாக்கோபு 5:13)
8. சோதனைகளை மேற்கொள்ள (மத்தேயு 26:41)
9. கவலைகளிலிருந்து மீட்கப்பட (திருப்பாடல் 107:19)
10. இறைவனது வெகுமதியைப் பெற்றுக்கொள்ள (மத்தேயு 6:6)
11. தீமைகளை எதிர்த்து நிற்க (எபேசியர் 6:13)
12. மகிழ்ச்சி அடைய (யோவான் 16:24)
13. இறைவனை நெருங்கி வர (எசாயா 6:13)
14. உள்ளத்து உணர்ச்சிகளில் குணமடைய (யாக்கோபு 5:13)
15. அமைதி பெற (பிலிப்பியர் 4:6-7)

## திருத்தந்தையின்...




### புனித வியாழன் புனித எண்ணெய் அர்ச்சிப்பு திருப்பலி



இப்புனித வியாழனன்று, காலையில் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால்கள், ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்களுடன், புனித எண்ணெய் மந்திரிக்கும் திருப்பலியை நிறைவேற்றினார். மூன்று பெரிய அழகான ஜாடிகளில் வைக்கப்பட்டு மந்திரிக்கப்பட்ட இந்தப் புனித எண்ணெய், நறுமணம் கலந்த ஒலிவ எண்ணெய்யாகும். இது, அருளடையாளங்களின்போது பயன்படுத்தப்படுகின்றது. இத்திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "நற்செய்தியின் மகிழ்வு" பற்றி மறையுரையாற்றினார். "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது, ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்" என்ற, இத்திருப்பலியின் லூக்கா நற்செய்திப் பகுதியைக் குறிப்பிட்டு, நற்செய்தி, அருள்பொழிவிலிருந்து பிறக்கின்றது என்று மறையுரையைத் தொடர்ந்து ஆற்றினார்.

நற்செய்தியின் மகிழ்வு என்பது, சிறப்பு மகிழ்வுகளாகும். மகிழ்வுகள் என பன்மையில் கூறும்போது, இவை பலவகையாக உள்ளன. ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு கலாச்சாரத்திலும் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதருக்கும், தூய ஆவியார் எவ்வாறு இம்மகிழ்வை வழங்குகிறார் என்பதைப் பொருத்து இவை உள்ளன. இந்த மகிழ்வுகள் புதிய திராட்சைதோற்பைகளில் ஊற்றப்படவேண்டியுள்ளன. நற்செய்தி, எப்பொழுதும் புதுமை குன்றாத, புளிப்பாக மாறாத, ஆனால், அபரிவிதமாக ஊற்றிக்கொண்டே இருக்கின்ற இந்தப் திராட்சைதோற்பைகளின் மூன்று உருவக அடையாளங்கள் பற்றி பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நற்செய்தியின் முதல் அடையாளம், கானா திருமண விருந்தில் இருந்த கல் தண்ணீர் தொட்டிகள், இரண்டாவது அடையாளம், சமாரியப் பெண் நண்பகலில் தனது தலையில் சுமந்து சென்ற மர அகப்பையுடன் இருந்த குடம், மூன்றாவது அடையாளம், நம் ஆண்டவரின் குத்தி ஊடுருவப்பட்ட ஆழம்காண இயலாத இதயப் பாத்திரம். கானா திருமண விருந்தின் தண்ணீர்த் தொட்டிகள், ஒருவகையில், நிறைவான பாத்திரமாகும். இது, நம் அன்னை மரியாவாகும். இவ்வன்னையின் முழுநிறைவான வாழ்வு, நாம் அச்சத்திலிருந்து விடுபட்டு மகிழ்வோடு பிறருக்குப் பணியாற்ற உதவுகிறது. இரண்டாவது அடையாளமான சமாரியப் பெண்ணின் தண்ணீர் குடம், முக்கியமான சூழல்கள் பற்றிப் பேசுகின்றது. உயிருள்ள தண்ணீராகிய நம் ஆண்டவர், தமது தாகத்தைத் தணிப்பதற்குத் தண்ணீர் மொள்ளுவதற்கு அவரிடம் பொருள்கள் இல்லை. எனவே சமாரியப் பெண் அதற்கு உதவுகிறார். ஆண்டவர், சமாரியப் பெண்ணின் ஆன்மா என்ற அந்தப் பாத்திரத்தை, இரக்கத்துடன் அசைத்ததன் வழியாக, அந்த நகர மக்கள் அனைவர் மீதும் தூய ஆவியார் பொழியப்பட்டார். மேலும், நம் ஆண்டவர் மற்றொரு புதிய பாத்திரத்தை அல்லது திராட்சைத் தோற்பையை, புனித அன்னை தெரேசாவாக அளித்திருக்கிறார். அன்னை தெரேசா, தனது புன்சிரிப்பு, ஏழைகளின் காயங்களைத் தொட்டது ஆகியவற்றின் வழியாக, எல்லாருக்கும் நற்செய்தியைக் கொணர்ந்தார்.

நற்செய்தியின் மூன்றாவது அடையாளமாக அமைந்திருக்கின்ற நம் ஆண்டவரின் குத்தி ஊடுருவப்பட்ட ஆழம் காண இயலாத இதயப் பாத்திரத்தின் வழியாக, மரியாதை, மதிப்பு, தாழ்மை, தாழ்மையான பாதை ஆகியவற்றின் வழியில் மட்டுமே,....

15 ம் பக்கம்

# இத்தாலி பலியானோ சிறையில் காலடிகளைக் கழுவிய திருத்தந்தை

இப்புனித வியாழனன்று காலையில் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், கர்தினால்கள், ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்களுடன், புனித எண்ணெய் அர்ச்சிக்கும் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாலை உள்ளூர் நேரம் 3 மணிக்கு வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லத்திலிருந்து புறப்பட்டு, உரோம் நகரிலிருந்து ஏறத்தாழ 45 மைல் தொலைவிலிருக்கும், பலஸ்திரினா மறைமாவட்டத்தின் பலியானோ எனுமிடத்திலுள்ள தடுப்புக்காவல் மையத்திற்கு உள்ளூர் நேரம் மாலை 4.15 மணிக்குச் சென்றார்.



அங்குள்ள சிறைக் கைதிகளுடன் இயேசுவின் இறுதி இரவு உணவு திருப்பலியை நிறைவேற்றுவதே திருத்தந்தையின் திட்டம். கடந்த ஆண்டுகளிலும் வத்திக்கானுக்கு வெளியே உள்ள பல்வேறு மையங்களில் புனித வியாழன் இரவுணவு திருப்பலியை நிறைவேற்றியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். 2013ம் ஆண்டு, தான் திருத்தந்தையாக பதவியேற்ற ஒன்பது நாட்களிலேயே சிறப்பித்த புனித வியாழன் திருப்பலியையும் உரோம் நகரின் இளையோர் சீர்திருத்தப் பள்ளியிலேயே நிறைவேற்றி, அங்குள்ள இளங்குற்றவாளிகள் 12 பேரின் காலடிகளைக் கழுவினார் திருத்தந்தை. 2014ம் ஆண்டு, நோயுற்றோர் மற்றும் முதியோரை பாராமரிக்கும் ஓர் இல்லத்திற்குச் சென்ற திருத்தந்தை, அங்குள்ளோருடன் காலடிகளைக் கழுவும் சடங்கை நிறைவேற்றினார். 2015ம் ஆண்டு, உரோம் நகரின் ரெபிபியா சிறைக்கைதிகளுடனும், கடந்த ஆண்டு, Castelnuovo di Porto எனுமிடத்தில் தங்கியுள்ள புலம்பெயர்ந்தோருடனும், இச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. இவ்வாண்டு, ஏறத்தாழ 70 சிறைக்கைதிகள் வாழும் பலியானோ சிறைக்குச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 3 பெண் கைதிகள், ஓர் இஸ்லாமியர், ஓர் அர்ஜென்டினா நாட்டவர், ஓர் அல்பேனியர் உட்பட 12 சிறைக்கைதிகளின் காலடிகளைக் கழுவினார். இந்த 12 பேரில் இருவர், ஆயுள் தண்டனைப் பெற்றக் கைதிகளாவர். இங்குள்ள கைதிகளுக்கு திருப்பலி நிறைவேற்றி, மறையுரையொன்றும் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# பலியானோ சிறையில் திருத்தந்தை வழங்கிய மறையுரை



புனித வியாழன் மாலை, பலியானோ சிறையில், ஆண்டவரின் இரவுணவு திருப்பலியை நிறைவேற்றியத் திருத்தந்தை, அங்கு வழங்கிய மறையுரை:

அன்பு சகோதர, சகோதரிகளே, "தாம் இவ்வுலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது" என்பதையும், தான் காட்டிக்கொடுக்கப்படப் போகிறோம் என்பதையும் உணர்ந்திருந்த இயேசு, தன் சீடர்களுடன் இரவுணவை அருந்தினார். தமக்குரியோர்மேல் அன்பு கொண்டிருந்த இயேசு, இறுதி வரையும் அன்பு செலுத்தினார். இறைவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பும், இறுதிவரை உள்ள அன்பு.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களின் காலடிகளைக் கழுவுதல், அக்காலத்தின் பழக்கமாக இருந்தது. இதனை, வீட்டிலிருந்த அடிமைகள் செய்தனர். இயேசு, சீடர்களின் தலைவராக இருந்தாலும், தன்னையே ஓர் அடிமையாக்கி, சீடர்களின் காலடிகளைக் கழுவினார். பேதுரு அவரைத் தடுத்தபோதும், பணிபுரியவே தான் இவ்வுலகிற்கு வந்தேன் என்பதை, இயேசு அவருக்கு நினைவுறுத்தினார்.

இன்று நான் இங்கு வந்தபோது, ஒரு சிலர் என்னைப்பார்த்து, "இதுதான் திருத்தந்தை. இவர்தான் திருஅவையின் தலைவர்" என்று சொன்னார்கள். ஆனால், நான் சொல்கிறேன், இயேசுதான் திருஅவையின் தலைவர். இதை, நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. இதுதான் முழு உண்மை.

அன்று இயேசு செய்ததைப்போலவே, இன்று, இத்திருவழிபாட்டில், நானும் உங்கள் காலடிகளைக் கழுவுகிறேன். நீங்கள் ஒருவர் மற்றவரது காலடிகளைக் கழுவுங்கள் என்று நான் சொன்னால், அது உங்களுக்கு வேடிக்கையாகத் தெரியும். ஆனால், அடுத்தவருக்கு நீங்களும் ஏதாவது ஒருவகையில் உதவி செய்யவேண்டும் என்பதே என் விருப்பம். இது, அடுத்தவர் காலடிகளைக் கழுவுவதற்கு இணையாகும். தங்களுக்குள் யார் பெரியவர் என்ற போட்டியில் சீடர்கள் ஈடுபட்டிருந்தபோது, இயேசு அவர்களிடம், "உங்களில் பெரியவர், மிகச் சிறியவராக, பணியாளராக இருக்கவேண்டும்" என்று கூறினார். தான் சொன்னதுபோலவே, இறைமகன் இயேசு, நம்மிடையே, மிகச் சிறியவராக, பணியாளராக வாழ்ந்தார். சீடர்களின் காலடிகளைக் கழுவியபின், இயேசு, அவர்களுக்கு அப்பத்தையும், இரசத்தையும், தன் உடலாக, இரத்தமாக வழங்கினார். இவ்வகையில், இறைவனின் அன்பு நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

# சிலுவைப்பாதையின் இறுதியில், திருத்தந்தை எழுப்பிய மன்றாட்டு



புனித வெள்ளியன்று மாலை 9 மணியளவில், உரோம் நகரின் மறைசாட்சிகள் நினைவிடமான, கொலோசெயம் திடலில் நடைபெற்ற சிலுவைப்பாதையின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுப்பிய மன்றாட்டு:

காட்டிக்கொடுக்கப்பட்டு, குறைந்த விலைக்கு விற்கப்பட்ட கிறிஸ்துவே! பாவிகளாலும், அதிகார வர்க்கத்தாலும் தீர்ப்பிடப்பட்ட கிறிஸ்துவே! கன்னத்தில் அறையப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, வேதனையுற்ற கிறிஸ்துவே! வாழ்வின் இறைவனாக இருந்தும், மண்ணில் புதைக்கப்பட்ட கிறிஸ்துவே! உம்மிடம் மீண்டும் ஒருமுறை வந்துள்ளோம் உம்மைக் காணும் தகுதியற்றவர்களாய், அவமானத்தால், எங்கள் கண்களைத் தாழ்த்தியபடி உம்மிடம் வந்துள்ளோம். எங்களைச் சுற்றி நிகழும் அழிவுகளை, அக்கிரமங்களை, மிகச்சாதாரண நிகழ்வுகளாக ஏற்றுக்கொள்வதால் உண்டாகும் அவமானம் இது.

மாசற்ற குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் இரத்தம் சிந்தப்படுவதால், நிறம், இனம், சமுதாய நிலை என்ற காரணங்களால் மனிதர்கள் பாகுபடுத்தப்படுவதால் உண்டாகும் அவமானம் இது.

யூதாஸைப்போல, பேதுருவைப் போல உம்மைக் காட்டிக்கொடுப்பதால், மறுதலிப்பதால் உண்டாகும் அவமானம் இது. அநீதியைக் கண்டும், மௌனம் காப்பதால், உண்டாகும் அவமானம் இது.

ஆயர்களாக, அருள்பணியாளர்களாக, துறவியராக, உமது திருஅவை என்ற உடலைக் காயப்படுத்துவதால், உண்டாகும் அவமானம் இது.

இத்தனை அவமானங்கள் மத்தியில், உமது அளவுகடந்த இரக்கத்தின்மீது நம்பிக்கை கொண்டு வந்துள்ளோம். எங்கள் பெயர்கள் உமது இதயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன எங்களை, உமது கண்ணின் விழியாய் காக்கின்றீர் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளோம். கடினப்பட்ட எங்கள் இதயம், உமது சிலுவையால், மீண்டும் மென்மையாகும் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளோம். உமது சிலுவையைச் சுமக்க, ஆண்களும், பெண்களும், இன்றும், துணிவுடன் முன்வருகின்றனர் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளோம். பாலைநிலத்தில் ஒலிக்கும் குரலாக விளங்க, உமது திருஅவை முயற்சி...

XIX ம் பக்கம்

# புனித சியன்னா நகர கத்தரின்
## கன்னியர் மறைவல்லுனர் [கி.பி 1347 – 1380]



**பிறப்பு :** இவர் இத்தாலியில் உள்ள சியன்னா என்னும் ஊரில் சியாகோமோ டி பெனின்கசாவுக்கும், லாப்பா பிய கென்டியுவுக்கும் 25 பிள்ளைகளில் கடைக்குட்டியாக தோன்றினார். இவரின் பெற்றோரின் அரண்மனை வீடு இன்றும் காட்சியளிக்கின்றது.

**துறவற வாழ்வு :** இவருக்கு 5 அல்லது 6 வயது இருக்கும் போது முதல் காட்சி கிடைத்தது. அக்காட்சியில் இயேசு தன்னை ஆசீர்வதித்தார் எனவும், தன்னைப் பார்த்து சிரித்தார் எனவும், இக்காட்சியின் முடிவிலே பரவச நிலை அடைந்தார் எனவும் கூறியுள்ளார். இவ்வாறு ஏழு வயதில் கற்பு வார்த்தைப் பாட்டினை அளித்தார். 12 வயது நடக்கும்பொழுது இவரின் மூத்த சகோதரியின் இறப்புக்கு பின்னர் அவரின் கணவரை மணக்க இவரைப் பெற்றோர் கட்டாயப்படுத்தினர். அப்போது தன் அழகைக் குறைக்க தன் நீண்ட கூந்தலை வெட்டினார். புனித தோமினிக் கத்தரீனுக்கு கனவில் தோன்றி அவரைத் தேற்றினார். எனவே தொமினிக் சபையில் சேர்ந்தார்.

**ஆன்மீகத் திருமணம் :** 1366ஆம் ஆண்டில் தன் அறையில் தனிமையில் ஜெபித்துக் கொண்டிருந்த-போது, இயேசு தன்னை ஆன்மீக முறையில் மணந்து கொண்டதாக இவர் நம்பினார். இக்காட்சியில் இயேசுவும் அன்னை மரியும், வான் வீட்டார் பலரும் காட்சியளித்தனர். அன்னை மரி கத்தரீன் கையைப் பற்றிக் கொள்ள இயேசு அவரது விரலில் ஓர் மோதிரம் அணிவித்தார். "துணிவு கொள், அலகையின் சோதனைகளை செல்ல உனக்கு வரம் அருளுகின்றேன்" என்று கூறினார் ஆண்டவர். இந்த மோதிரம் கத்தரீன் கண்களைத் தவிர மற்றவரது கண்களுக்குப் புலப்படவில்லை.

**பொது சேவைக்கு அழைப்பு :** இயேசு தன்னை மறைந்த வாழ்வினை தவிர்த்துப் பொது சேவையில் ஈடுபட அழைத்தாக உணர்ந்து ஆன்மீக குருவிடம் கூறினார். எனவே நோயுற்றோருக்கு உதவினார். இவரின் தொண்டு சிலரைக் கவர்ந்ததால் மேலும் சிலரும் இவரோடு இணைந்தனர். இதனால் 1374ஆம் ஆண்டு தொமினிக்கன் சபை தலைவர்களால் அழைக்கப்பட்டார். பிளாரன்ஸ் நகரில் தப்பறை கொள்கைகளுக்காக விசாரிக்கப்பட்டார். பின் குற்றமற்றவராக அறிவிக்கப்பட்டார். பின் வடக்கு மற்றும் மத்திய இத்தாலியில் பயணம் செய்து பொது சேவை வழியாகக் கடவுளை அன்பு செய்ய மக்களை ஊக்கப்படுத்தினார்.

### இயேசுவின் ஐந்து திருக்காயங்கள்

கி.பி 1375ஆம் ஆண்டு மாசி திங்களில் கத்தரீன் பீசா நகர் சென்றடைந்தார். அங்கேயிருந்த ஆலயத்தில் திருப்பலியில் பங்கேற்றார். திவ்ய நற்கருணை உட்கொண்டபின் இறை இயேசுவுடன் இணைந்திருந்த வேளையில், பாடுபட்ட சுரூபத்தை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அதனின்று 5 இரத்த நிறக்கதிர்கள் புறப்பட்டுக் கத்தரீனின் கைகள், கால்கள், இதயத்தைத் துளைத்தன. வேதனை பொறுக்க முடியாமல் அவர் மயங்கிக் கீழே விழுந்தார். வாழ்நாள் முழுவதும் இவை ஆறாத புண்களாக அளவிட முடியாத வேதனை அளித்தன. ஐந்து காயங்களும் மற்றவர்களின் கண்களுக்குத் கத்தரின் இறந்த பிறகே தென்பட்டன.

### திருத்தந்தை நாடுகளில் அமைதி

இத்தாலியில் பெருங்குடியினர் மத்தியில் அமைதி பிறக்க அரும்பாடுபட்டார். இவருக்கும் திருத்தந்தை பதினோறாம் கிரகோரிக்கும் மிக நீண்ட கடிதத் தொடர்பு இருந்தது. அதில் திருத்தந்தை நாடுகளின் மேலாளர்களையும் குருக்களையும் கண்டித்து வழிநடத்த அறிவுறுத்தினார். ஆனி மாதம் 1376இல் இவர் தாமாகவே முன்வந்து திருத்தந்தை நாடுகளில் அமைதி கொணர முயன்றார். அது பயன் அளிக்காததால் பதினோறாம் கிரகோரியை மீண்டும் அவிஞ்ஞோனிலிருந்து உரோமைக்கு 1377ஆம் ஆண்டு தை மாதத்தில் திரும்பி வர செய்தார். பின் திருத்தந்தை ஆறாம் அர்பனுக்கு துணையாக ரோம் நகரில் சாகும் வரை இருந்தார்.

**இறப்பு :** இவர் பசியற்ற நோயினால் (ANOREXIA MIRABILIS) அவதிப்பட்டார். இவரின் ஆன்ம குரு ரேமண்ட இவரை சரியான உணவு உண்ண அறிவுறுத்தியபோது தன்னால் முடியவில்லை என்பார். காரணம் உணவு உண்டால் கடுமையான வயிற்று வலி அவரை வதைப்பதாக கூறுவார். எனவே உணவு குறைவாகவே உண்டார். பதிலாக தினசரி நற்கருணை உண்டார். சித்திரை 21இல் அவரது உடலில் ஏற்பட்ட வலிப்பு நோய் காரணமாக எட்டு நாட்கள் தாங்க முடியாத வேதனைப்பட்டு, தமது 33ஆம் வயதில் சித்திரை 24ஆம் திகதி 1380இல் இறந்தார். மினெர்வா மேல் புனித மரியா கோவிலின் அருகில் உள்ள கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். அங்கே பல புதுமைகள் நடந்துள்ளன. எனவே இவரது உடல் கோயிலுக்குள் அடக்கம் செய்யப்பட்டது. இவரின் தலை, உடலிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு சியன்னா நகரில் உள்ள தொமினிக்கன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை ஆறாம் பவுல் இவரை மறை வல்லுனராக 1970இல் அறிவித்தார். அவிலாவின் புனித தெரேசாவுக்கு அடுத்தபடியாக இப்பட்டத்தை பெறுவது இதுவே முதன் முறை.

நன்றி
அமைதியின் அரசி சித்திரை 2014

# நம்பிக்கை



மனிதன் காற்றை சுவாசிப்பதால் மட்டும் வாழ்ந்து விடுவதில்லை. நம்பிக்கையை சுவாசிப்பதால் தான் வாழ்கிறான். பகல் புலர்ந்தது முதல், இரவு படுக்கப்போகும் வரை நடக்கும் அத்தனை நிகழ்வுகளும் நம்பிக்கையின் அடிப்படையில் தான்.

பால் கொண்டுவரும் பால்காரர், காய்கறிவிற்பவர், வாகனம் ஓட்டுபவர்கள், ஹோட்டல் சமயக்காரர்கள் இப்படியாக நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொருவரும் எனக்கு தீமை செய்யவில்லை, நன்மையைத் தான் செய்கிறார்கள் என்று நமபும்போதுதான், நாம் மகிழச்சியாக நிம்மதியாக வாழ்கிறோம். ஆகவே ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் நம்பிக்கை தான் அடிப்படை.

இயேசுவின் உயிர்ப்புக்கு பின் முக்கியமானவராக கருதப்படும் புனித தோமா, இவர் சந்தேகப் பேர்வழி என கூறப்படுகின்றார். தோமா உயிர்த்த இயேசுவை தம் ஊனக்கண்களால் காண ஆசைப்பட்டதுதான் அவரை சந்தேகப் பேர்வழி என்று கூறப்படுகின்றது காரணம்

### ஐயுறுவது பயனுள்ளது?

திருத்தூதர்களிலே சற்று வித்தியாச-மானவர் தோமா. கிறிஸ்தவ விசுவா-சத்தில் ஒரு மாறுபட்ட பரிமாணம்.

உயிர்த்த இயேசு சீடர்களுக்குத் தோன்றினார். அப்போது தோமா அங்கு இல்லை "அவருடைய கைகளிலே ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கைகளை இட்டாலன்றி நான் நம்ப மாட்டேன்" (யோவன் 20:25) எனக் கூறினார். இதனால் புனித தோமாவை சந்தேகப் பேர்வழி என்று கூறுவதுண்டு, தோமா மட்டமாகக் கருதப்படக்கூடாது அந்த சந்தேகத்தில் அவருடைய எளிய உள்ளத்தையும், உண்மையை அறியத் துடிக்கும், ஆர்வத்தையும் காணக் கூடியதாக இருக்கின்றது. தோமா ஐயமுற்றது இயேசுவை அல்ல மாறாக உயிர்த்த இயேசுவை பற்றி அவருடைய தோழர்கள் கொடுத்த தகவலைத்தான். தனது சொந்த அனுபவத்தில் தான் இறைநம்பிக்கையை கட்டி எழுப்ப விரும்பினார். இயேசுவின் மீது தோமாவுக்கு அவரில் அன்பு இருந்தது. "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம் (யோவ 11:16) என்று வீர முழக்கம் செய்தார் தோமா.

உயிர்த்த இயேசு தோமாவின் ஐயப்பாட்டினை நீக்க மீண்டும் சீடர்களுக்கு தோன்றினார். தோமாவை அழைத்து "இதோ என் கைகள், இங்கே உன் விரலை விடு" என்று கூறினார். இயேசுவின் உயிர்ப்பை நம்பமறுத்த தோமா இயேசுவின் மகிமையான காயங்களைக் கண்டு அவரை இயேசுவிடம் சரணடைய வைத்து தோமாவில் மாற்றத்தை ஏற்படுத்தியது. நம்பாத தோமாவை நம்ப வைத்தது. அவரும் "நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்" என்றார். நற்செய்தியில் தோமாவைத் தவிர வேறு எவருமே இயேசுவைக் கடவுள் என்று நேரடியாக அழைத்ததில்லை. தோமா நம்பிக்கைக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டு, நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்ற தோமாவின் இறை நம்பிக்கைக்கு இயேசு இவ்வாறு மொழிகிறார் "காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர் (யோவா 20:29)".

சிந்தனைக்கு ஒரு குட்டிக்கதை

கை அறுவைச் சிகிச்சையில் தேர்ச்சி பெற்ற மருத்துவர் ஒருவர் ஒவ்வொரு அறுவைச் சிகிச்சையின் போதும், "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று சொல்வாராம், அதற்கு காரணம், வியட்நாம் போரின்போது இராணுவ வீரர் ஒருவருடைய கையில் பாய்ந்திருந்த துப்பாக்கித் தோட்டாவை அகற்றும்படி அழைக்கப்பட்டிருந்தார். அந்த அறுவைச் சிகிச்சை அவரது இதயத்தை அழுமாகக் தொட, போர் முடிந்ததும், கை அறுவைச் சிகிச்சையில் சிறப்புத் தேர்ச்சியும், பயிற்சியும் பெற்றார். துப்பாக்கி குண்டுகளினாலோ, வேறு கூர்மையான ஆயுதங்களினாலே கைகளின் சதையும், எலும்பையும் துளைக்கின்ற காயங்களையும், அதனால் ஏற்படுகின்றன வேதனைகளையும் நன்கு உணர்ந்திருந்தார். அதனால் இயேசுவின் திருக்கைகள் சிலுவையில் ஆணியால் அறையப்பட்ட பொழுது அவர் அனுபவித்த வேதனையை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு பதை

## வெள்ளவத்தை மற்றும் மயூரா பிளேஸ் ஆலயங்களின் முதல் தடவையாக நடைபெற்ற திறந்தவெளி சிலுவைப்பாதை








வண அருட்பணி நா.மனோகுமாரன் (பங்குத்தந்தை) அடிகளார், அருட்பணி சசிக மனோஜ் ரொற்றிகோ (உதவி பங்குத்தந்தை) அடிகளார், அருட்பணி ஜுட் கிரிஷாந்த, அருட்பணி லின்டன், அருட்பணி பிரிட்டோ (OMI ),அருட்பணி ட்ரவோ மாட்டின், அருட்பணி ஜோசப் ஆகிய அடிகளார்களால் இச்சிலுவைப்பாதை வழிநடத்தப்பட்டது. புனித லோரன்ஸ் தேவாலய வரலாற்றில் முதல் முறையாக மயூராபிளேஸ் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் இனிதே நிறைவு பெற்றது. **தகவல் மற்றும் படங்கள் -மைக்கேல் பெர்னாண்டோ புள்ளே**

## செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலயத்தின் புனித வார வழிபாடுகளில் இருந்து....







புனிதவாரத்தில், செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெற்ற திருவழிபாட்டின் மிக முக்கியமான மூன்று நாட்களுக்குரிய உன்னத வழிபாட்டுகளில் ஒன்றான புனித வியாழன் திருப்பலியின்போது பங்குத்தந்தை பாதங்கள் கழுவும் சடங்கினை நிறைவேற்றுவதையும், அடுத்த நாள் பெரியவெள்ளி அன்று நடைபெற்ற திறந்தவெளி பொதுச் சிலுவைப்பாதையை அருட்தந்தை கிளேரியன் பர்னாந்து அடிகளாரால் வழிநடத்தப்பட்டதையும், அன்றைய தினம் நடைபெற்ற பிற்பகல் 3.00 மணி வழிபாட்டில் எமது முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி பிரகாஷ் பானாந்து, தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி ஆனந்தன் பர்னாந்து புள்ளே மற்றும் அருட்பணி கிளேரியன் அடிகளார்கள் இணைந்து நடத்துவதையும் கல்லறை ஆண்டவரின் திருச்சுரூபம் மக்களால் எடுத்துச் செல்லப்படுவதையும், இந்நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களையும் படத்தில் காணலாம் : **தகவல் மற்றும் படங்கள் டிக்சன் பர்னாந்து**

## இரத்தினப்புரி மறைமாவட்டத்தில் தவக்கால நிகழ்வுகளில் இருந்து




அன்று பந்தியில் இயேசு பன்னிரு ஆண் சீடர்களின் பாதங்களை கழுவினார், இன்று பந்தியில் அமர்ந்த பாதங்கள் மூவிரண்டு ஆண் சீடர்களையும், மூவிரண்டு பெண் சீடர்களினதும் பாதங்களை கழுவி தமது பணிவையும் தாழ்ச்சியையும் அன்பையும் வெளிப்படுத்தினார். இந்த நிகழ்வு கடந்த 2017.04.13 பெரிய வியாழன் அன்று இரத்தினப்புரி பேராலய பங்கிற்கும் சொந்தமான கரபிஞ்ச தோட்டத்து புனித சதா சகாய அன்னையின் ஆலயத்தில் நடைபெற்றது. இயேசு காட்டிய அன்பையும், பணிவையும் பேராலய உதவிப் பங்குத்தந்தை அருட்பணி சம்பத் விஜேரட்ண அடிகளார் மேற்கொண்டார்

**தகவல்: மேரி இருதயநாதன், பேராலயம், இரத்தினப்புரி**




**இரத்தினப்புரி மறைமாவட்டத்தில் மலையக மக்களின் மனமாற்றத்தைக் கொண்டுவரும் தவக்கால திறந்தவெளி சிலுவைப்பாதை**

XIX தியானம்

செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கு தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு எமது பங்கில் இயங்கிவரும் இறை இரக்க சபையினர் தமது 25வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரு நாள் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்திருந்தனர். இக்கருத்தரங்கு கடந்த வாரம் 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் காலை 9.30 மணிக்கு தொடங்கப்பட்டது. அன்றைய நிகழ்வை பங்குத் தந்தை அருட்பணி. ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளாரும், அவருடன் இணைந்து அருட்பணி. கிளேரியன் அடிகளாரும் மற்றும் அருட்சகோதரர்கள் ஜெயகாந்தன், பொனி அவர்களும் முன்னெடுத்துச் சென்றனர். இறுதியில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறையாசீருடன் அன்றை நிகழ்வு இனிதே நிறைவுற்றது. **தகவல் : டிக்சன் பர்னாந்து**




## 01 உயிர்த்த இயேசு...

வரலாற்றின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும், உலகம் என்ற பாலை நிலத்தில் வழிதவறிச் செல்லும் சகோதர, சகோதரிகளை, உயிர்த்த ஆயன் தேடி வருகிறார். தீமையின் பாரத்தால் நசுக்கப்பட்டிருக்கும் நம்மை, தன் தோள்களில் சுமந்து செல்கிறார். சமுதாயத்தின் விளிம்பு, தனிமை ஆகிய சிக்கலான பாதைகளில் காணாமல் போனவர்களை, உயிர்த்த ஆயன், தேடிச் செல்கிறார். இறைவனோடு மீண்டும் நட்புறவு கொள்வதற்கு, ஆயன் அழைத்துச் செல்கிறார்.

மனிதத்தன்மையற்ற கடுமையானத் தொழில், மனித வர்த்தகம், ஒதுக்கப்படுதல், சுரண்டப்படுதல், தீயப் பழக்கங்களுக்கு அடிமையாதல் என்ற, பழைய, மற்றும், புதிய அடிமைத்தனங்களுக்கு உள்ளாகும் மக்களின் சுமைகளை, அவர் சுமந்து செல்கிறார். இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள்ளும், வெளி உலகிலும், தங்கள் மாசற்ற நிலையை இழந்து தவிக்கும் குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் அனைவரின் சுமைகளையும் அவர் சுமந்து செல்கிறார். ஆயுதம் தாங்கிய மோதல்கள், அடிப்படைவாதிகளின் தாக்குதல்கள், பட்டினி, அடக்குமுறை அரசுகள் என்ற பல கொடுமைகளுக்கு உள்ளாகி, சொந்த நாட்டைவிட்டு வெளியேறும் மக்களுடன் உயிர்த்த ஆயன் துணையாகச் செல்கிறார்.

சிக்கல்கள் நிறைந்த இன்றைய உலகில், நீதிக்காக, அமைதிக்காக உழைப்போரை, உயிர்த்த இறைவன் வழி நடத்துவாராக! பரவிவரும் மோதல்களையும், பெருகிவரும் ஆயுத விற்பனையையும், அரசுத்தலைவர்கள், தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான மன உறுதியை, இறைவன் வழங்குவாராக! உயிர்ப்புப் பெருவிழாவை ஒரே நாளில் கொண்டாடுகிறோம். நாம் அனைவரும் இணைந்து: ”ஆண்டவர் உரைத்ததுபோலவே, உயிர்த்துவிட்டார்” என்ற செய்தியை ஒரே குரலில் உலகெங்கும் அறிக்கையிடுகிறோம். பாவம், மரணம் என்ற இருளை ஒழித்த இயேசு, நாம் வாழும் காலத்தில் அமைதியை அளிப்பாராக!

அனைவருக்கும், உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## 01 பாத்திமா அன்னை

பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்ததைக் கண்ணுற்ற மூவரில், அருளாளர்களான, பிரான்செஸ்கோ மார்த்தோ, மற்றும் அவரது தங்கை, ஜெசிந்தா மார்த்தோ ஆகிய இருவரின் பரிந்துரைகளால் நிகழ்ந்துள்ள புதுமைகளை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்விருவரையும் புனிதர்களாக உயர்த்தும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்ததன் 100ம் ஆண்டைச் சிறப்பிக்க, மேமாதம் 12, 13 தேதிகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அத்திருத்தலத்திற்குச் செல்லவிருக்கும் வேளையில், இவ்விருவரையும் புனிதர்கள் என அறிவிப்பார்.

கப்பூச்சியன் துறவு சபையைச் சேர்ந்த அருளாளர், ஆஞ்செலோ அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்த புதுமையையும், பிரேசில் நாட்டில் 1645ம் ஆண்டிலும் (30 பேர்), மெக்சிகோவில் 1529ம் ஆண்டிலும் (3 பேர்) மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டவர்களின் வீரத்துவ பண்புகளையும் ஏற்றுக்கொண்ட திருத்தந்தை, இவர்கள் அனைவரையும் புனிதர்களாக உயர்த்தும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கினார்.

## 01 ஒரு சிறந்த குருவை.....

இந்த இறைவார்த்தைகள் எசாயா இறைவாக்கினர் நூலிலிருந்து எடுக்கப்பட்ட நற்செய்தி ஆகும். “அபிஷேகம் என்பது ஒரு குறிப்பிட்ட பணிக்காக எல்லா உலக மாயைகளில் இருந்தும் விடுபட்டு கடவுளால் தன் பணியை நிறைவேற்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர். அபிஷேகம் செய்யப்பட்ட இயேசு கிறிஸ்து, கூறுவது என்னவெனில் கடவுள் தம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற என்னைத் தேர்ந்து கொண்டார். இம்மீட்பு செய்தியை முதன் முதல் அறிவித்தவர் ஆண்டவரே திருப்பாடல் 45:7 கூறுவதுபோல், “நீதியே உமது விருப்பம் அநீதி உமக்கு வெறுப்பு எனவே கடவுள், உமக்கே உரிய கடவுள், மகிழ்ச்சியின் நெய்யால் உமக்குத் திருப்பொழிவு செய்து, உம் அரசத் தோழரினும் மேலாய் உம்மை உயர்த்தினார்” அபிஷேகம் செய்யப்பட்டவராக இயேசுவின் பணி வாழ்வில் பிறரையும் இவ் எண்ணையினால் அபிஷேகித்து கடவுளுடைய பிள்ளையாக்கிக் கொண்டார். கிறிஸ்தவர்களாகிய நாங்கள் திருமுழுக்கு, உறுதிபூசுதல், நோயிற்பூசுதல் அருட்சாதனத்தின் மூலம் இந்த புனிதமான தைலத்தால் அபிஷேகிக்கப்படுகின்றோம். ஆயர்கள், குருக்களாகிய நாங்கள், குருத்துவ திருநிலைப்படுத்தலின்போது எமது கைகளிலும், தலையிலும் இப்புனித தைலம் பூசப்பட்டு கடவுளுக்கு உரியவர்களாக எம்மையே அர்ப்பணிக்கின்றோம். இன்று இந்த சடங்கானது எமக்கு வலியுறுத்துவது கிறிஸ்துவினுடைய அபிஷேகத்தை இதையே திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் இவ்வாறு தமது சுற்றுமடலில் கூறுகின்றார். “இது ஒரு அருட்சாதன முத்திரையாகும். இத்தைலம் எமக்காக கொடுக்கப்பட்ட கடவுளுடைய படைப்பாகும். கிறிஸ்து கடவுளால், அபிஷேகம் செய்யப்பட்ட ஒரு அரசராகவும், குருவாகவும் இருக்கின்றார். இவ்வாறே நாமும் எமது குருத்துவத்தின் மூலம் அபிஷேகிக்கப்படுகின்றோம். இயேசுவினுடைய இந்த அபிஷேகத்தை இன்று ஒரு தனிச்சிறப்பான நினைவு நிகழ்வாக சிறப்பிக்கும் நாம் இயேசு தன் குருத்துவப் பணியில் நிறைவைக் காணும் நாளாகக் கருதப்படுகின்றது. பாஸ்கா திருவிருந்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு அவரது இறப்பில் முடிவடைகின்றது. அவர் தன்னையே முழுமையாக இறைத்தந்தைக்கும், மக்களுக்கும் கையளிக்கின்றார். அவரது தியாகச் செயல்கள் மூலம் இறைத்தந்தை எம்மை தம் மந்தைகளாக தேர்ந்துக்கொண்டார். திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் கூறுவது யாதெனில், இவ்வபிஷேகத்தின் ஊடாக கடவுளுடைய இரக்கத்தை எடுத்துக்கூற எமக்கு அழைப்பு விடுகின்றது. இது எங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையாகும். எங்களுடைய குருத்துவப் பணி வாழ்வின் மூலம் இறைவனின் இரக்கத்தை நாம் சேவைப் புரியும் மக்களுக்கு தெளிவாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எடுத்துக்காட்டுவோம்.

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது முதலாவது கிறிஸ்மா திருப்பலியை சிறப்பிக்கும்போது தனது மறையுரையில் இவ்வாறு கூறுகின்றார் “ஒரு சிறந்த குருவை இனங்காண்பது அவருடைய மந்தைகளின் சாட்சிய வாழ்வில், நாம் பறைசாற்றும் நற்செய்தியானது அவர்களுடைய நாளாந்த வாழ்வைத் தொட வேண்டும். கிறிஸ்து ஒடுக்கப்பட்ட மக்களைத் தேடிப் போனார். கைவிடப்பட்டோரை அரவணைத்து வாழ்வு கொடுத்தார், எல்லோரையும் அன்பு செய்தார். நாமும் எம் வாழ்வின் மூலம் இறைவனுடைய இரக்கத்தை அவர்களுக்கு கையளிப்போம். இதன் மூலம் அவர்களும் அன்பு செய்யவும், சேவைப் புரியவும் தூண்டப்படுவார்கள். இன்று குருக்கள் குறைவான அபிஷேகம் செய்யப்பட்டவர்களாக தம்மை காட்டிக்கொடுக்கின்றார்கள், குருக்கள் தங்கள் அபிஷேகத்தை அடிக்கடி உணராமல் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றார்கள். தங்களை வேறுபடுத்திக்காட்டுகின்றார்கள். தங்களுடைய வாழ்க்கையை துயரமாக எண்ணுகின்றார்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர்கள் உங்கள் மந்தைகளை மேய்க்கும் கடமையை உண்மையாக்கிக் கொள்ளுங்கள், ஆயன் மந்தைகளுக்காகவும், மீன்களைப் பிடிக்கும் மனிதராகவும் இருக்க வேண்டும்.இயேசு தம் மக்களுக்குக் கூறுகின்றார் “நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்” (யோவான் 10:11) “நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்” (யோவான் 10:15)

ஒரு குரு இடைநிலை உறவுகொண்டவர், அவர் மற்றவர்களுக்காக வாழ்பவர் சர்வ அதிகாரம் உடையவர் அல்ல, ஆள்பவர் அல்ல, நீதிபதியும் அல்ல, பிறருக்கு ஊறு விளைவிக்கக் கூடிய பண்புடைய சமய பயன்பாட்டுக்கு உரியவரும் அல்ல, தம் மந்தைகளை இரக்கமற்ற நிலையில் கவனிக்காமல் இருக்க முடியாது “உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மேல் அன்பு கொண்டிருந்த அவர் அவர்கள் மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார்” யோவான் 13:1, இயேசு இறுதி இராவுணவின்போது தன் சீடர்களின் பாதங்களை கழுவி, எவ்வாறு பிறரை அன்பு செய்ய வேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தார்.

“அவர்களுடைய காலடிகளைக் கழுவியபின் இயேசு தம் மேலுடையை அணிந்துகொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்து அவர்களிடம் கூறியது ”நான் உங்களுக்குச் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா? நீங்கள் என்னைப் ”போதகர்” என்றும் ”ஆண்டவர்” என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்” யோவான் 13:12-15.

பேராயர் அவர்கள் தம் சகோதர குருக்களுக்கு கூறும் அறிவுரையானது, நாங்கள் எங்களுடைய மந்தைகளுக்கு முன்மாதரிகையான வாழ்வு வாழ்ந்து காட்ட வேண்டும் நாங்கள் கடவுளுடைய சாயலாக இருந்து, சேவைப்புரிய அழைக்கப்பட்டுள்ளோம் சில சந்தர்ப்பங்களில் நாம் பிறரை மதிக்காமல், பொறுப்பில்லாமல் நடாத்தி இருக்கின்றோம். மற்றவர்களை நாம் எமது வார்த்தைகளால் துன்பப்படுத்தி இருக்கின்றோம். விசேடமாக இளம் குருக்கள், இவ்வாறான சூழ்நிலையில் இயேசு எவ்வாறு தன் வேதனையை தாங்கிக் கொண்டார் என்பதை கற்றுக்கொள்ள வேண்டும்.

“திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார் அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்” (மத் 9:36)

“இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், ”நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” என்றார் (மாற்கு 1:41)

“இயேசு தம் சீடரை வரவழைத்து, ”நான் இம்மக்கள் கூட்டத்தின்மீது பரிவு கொள்கிறேன். ஏற்கெனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவும் இல்லை இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடவும் நான் விரும்பவில்லை அனுப்பினால் வழியில் தளர்ச்சி அடைந்துவிடலாம்” என்று கூறினார்” (மத் 15:32)

இயேசு பரிவு கொண்டு அவர்களுடைய விழிகளைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றினார்கள். (மத் 20:34)

“அருகில் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர், ”இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு” என்றார்.” (லூக் 7:14

அப்போது இயேசு கண்ணீர் விட்டு அழுதார். (யோவான் 11:35) நாங்கள் இயேசுவைப் பின்பற்றும் சீடர்கள். இத்திருத்தைலம் எங்கள் மீது பூசப்படும்போது அவரது இரக்கத்தை நாம் கொடையாகப் பெறறுள்ளோம். நாமும் அவ்விரக்கத்தை மக்களோடு பகிர்ந்துகொள்வோம்.

இறையாசீர் உரித்தாகுக.

பேராயர் அதிமேதகு
மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்

## 12 புனித வியாழன்...

ஏழைகளுக்கு மகிழ்வோடு நற்செய்தி அறிவிக்கும் முடியும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம். அன்பு அருள்பணியாளர்களே, இந்த மூன்று திராட்சைத்-தோற்பைகளை நாம் தியானித்து, அவற்றிலிருந்து நாம் பருகும்வேளை, அன்னை மரியாவிடம் சுடர்விட்ட அந்த நிறைவை, நற்செய்தி, நம்மில் கண்டடைவதாக. இவ்வாறு இப்புனித வியாழன் எண்ணெய் மந்திரிக்கும் திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

குருத்துவம் என்ற அருளடையாளத்தை இயேசு ஏற்படுத்தியதை இப்புனித வியாழனன்று நினைவுகூர்கிறோம். எனவே, திருஅவையின் அனைத்து அருள்பணியாளர்களுக்காக சிறப்பாகச் செபிப்போம். கடினமான சூழல்களில் பல அருள்பணியாளர்கள் நற்செய்தி அறிவித்து வருகின்றனர். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்றார் இயேசு. இயேசுவின் இப்புதிய கட்டளையை எவ்வாறு நாம் வாழ்வாக்கி வருகிறோம் எனச் சிந்திப்போம்.


# 100வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



*“ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே உள்ளத்தை இன்புறுத்துகிறது. மகிழ்வையும் அக்களிப்பையும் நீடிய ஆயுளையும் வழங்குகின்றது”*
*(சீராக் 1:12)*

## திருமதி. தனமணி பர்னாந்து

**அவர்களது 100வது பிறந்த நன்நாளிலே**
(23, ஏப்ரல் 2017)

எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு மென்மேலும் உடல், உள, ஆன்மீக ஆரோக்கியத்தையும், மனமகிழ்வோடு, நிறை ஆசீரையும் அளித்துப் பாதுகாத்திட வேண்டுமென்று குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து மனமாற இறைவனை பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கின்றோம்.

*“நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன். என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்”*
*(திபா 91:16)*

**No. 54, St. Mary's Lane Mattakkuliya**

## வீட்டு வேலைக்கு பெண் பணியாளர் தேவை

நீர்கொழும்பில் ஒரு சிறிய குடும்பத்துக்கு வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய 50 - 55 அளவு வயதுடைய ஒரு பெண் தேவை.
தொடர்பு கொள்ளவும் : 0719900863

# சிறுநீரக ஆரோக்கியம்

## பாதுகாக்க வேண்டுமானால் இதை அவசியம் செய்யுங்கள்.



நம் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால், உடலின் அனைத்துப் பாகங்களும் நன்றாக வேலை செய்ய வேண்டும். அதில் சில குறிப்பிட்ட முக்கியமான உறுப்புக்களில் ஒன்றான சிறுநீரகத்தில் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் அது நமது உடலின் ஒட்டுமொத்த உறுப்புக்களையும் பாதிக்கச் செய்கிறது.

எனவே அந்த வகையில் சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு, அன்றாடம் நமது வாழ்க்கை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களில் சில மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தை அதிகரிக்க என்ன செய்யலாம்? சிறுநீரகத்தின் சிறப்பான செயல்பாட்டுக்குப் பேக்கிங் சோடா பெரிதும் உதவுகிறது. எனவே ஒரு கப் தண்ணீரில் சிறிதளவு பேக்கிங் சோடாவை கலந்து, குடித்து வந்தால், நமது உடலில் உள்ள சிறுநீரகத்தின் ஆரோக்கியம் மேம்படும்.

நாம் எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உடற்பயிற்சி இன்றியமையாத ஒன்றாகும். எனவே சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தை அதிகரிக்க சில உடற்பயிற்சியை அன்றாடம் செய்து வருவது மிகவும் சிறந்தது. நமது உடலை அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியம். அதிலும் குறிப்பாக, 30 வயதுக்கு மேல் ஒவ்வோர் ஆண்டும் நமது சிறுநீரகங்களைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நமது உடம்பில் ஓடும் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை எப்போதும் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சர்க்கரை நோய் ஏற்பட்டால், சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் எளிதாகத் தொற்றிக் கொள்ளும். புகை பிடிக்கும் பழக்கம் இருந்தால், அவர்களுக்கு சிறுநீரக தொற்றுகள் எளிதில் தொற்றிக் கொள்ளும். எனவே அதிகமாக புகைபிடிக்கும் பழக்கத்தைத் தவிர்த்து விடுவது மிகவும் நல்லது.

ஆரோக்கியமான சிறுநீரகத்தின் செயற்பாட்டுக்கு, நீர்ச்சத்து மிகவும் அவசியம். எனவே தினமும் நீர்ச்சத்துக்கள் அதிகம் உள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## வீட்டில் சில வைத்தியங்கள்

- 30 விநாடிகள் இரு காது துவாரங்களையும் விரல்களால் அடைத்துக் கொண்டால் விக்கல் நின்று போகும்
- ஒரு தேக்கரண்டி சர்க்கரையை வாயில் போட்டு சுவைத்தாலும் விக்கல் நின்று போகும்.
- அடிக்கடி கொட்டாவி வந்தால், நான்கு அல்லது ஐந்து தடவை நன்கு மூச்சை இழுத்து விடுங்கள். கொட்டாவி போய்விடும்.
- 2 தேக்கரண்டி சீரகத்தை நீரில் போட்டு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்த நீரை கொதிக்க வைத்து, வடிகட்டி, அதில் ஒரு தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு பிழிந்து, இரண்டு வாரம் தினமும் காலையில் குடித்து வர விரைவில் உடல் எடை குறையும்.
- சிறிது தயிரில் ஒரு தேக்கரண்டி சீரகப் பொடி சேர்த்து கலந்து அல்லது அரை தேக்கரண்டி சீரகப் பொடியை நீரில் சேர்த்து, அதோடு தேன் கலந்து தினமும் குடித்து வருவதன் மூலம் உடலில் உள்ள கொழுப்புகளைக் கரைத்து உடல் எடையைக் குறைக்கலாம்.
- சீரகம் உடலில் கெட்ட கொழுப்புக்கள் சேர்வதைத் தடுத்து, அதிகப்படியான கலோரிகளை எரிக்கும். ஏனெனில் இதில் உடலின் மெட்டபாலிசத்தை அதிகரிக்கும் ஊட்டச்சத்துக்களும், ஆன்டி ஆக்ஸிடன்டுகளும் ஏராளமாக உள்ளன. இதனால் இவற்றை அன்றாட உணவில் எடுத்து வந்தால், கொழுப்புகளால் அதிகரித்த தொப்பையையும் குறைக்கலாம்.
- செரிமானத்தை சீர்படுத்தி, வாய்வு தொல்லையை நீக்கும் ஆற்றல் சீரகத்திற்கு உண்டு.
- கசகசாவை பாலில் ஊற வைத்து அரைத்து அத்துடன் பாசிப்பருப்பு மாலை கலந்து தலையில் தேய்த்து வர முடி உதிர்தல் நிற்கும்.
- கற்றாழை சாறில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்தால் முடி உதிர்தல் நின்று நன்கு வளரும். அத்துடன் உடலும் குளிர்ச்சியாகும்.
- செம்பருத்திப் பூவுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்தால் முடி உதிராது அத்துடன் கூந்தல் கருமையாகவும் மாறும்.
- முட்டை வெள்ளைக் கருவை தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சியக்காய் கொண்டு குளித்தால் தலை முடி உதிர்வது சுத்தமாக நின்றுவிடும்.
- வாரம் ஒரு முறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோன்று தொடர்ந்து மூன்று மாத காலம் குளித்துப் பார்க்கவும். முடி கொட்டுவது நின்றுவிடும். அதுமட்டும் அல்ல முடக்கத்தான் கீரைக்கு நரை விழுவதைத் தடுக்கும் ஆற்றலும் உண்டு.

# மூட்டு வாதம் (Arthritis)



இன்றைய சூழலில் நாம் அனைவரும் வாழ்க்கை நடைமுறையையும், உணவு வகை மற்றும் உணவுப் பழக்கத்தை அடியோடு மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறோம். அல்லது கொண்டோம். இதன் காரணமாக பலரும் முப்பது வயது கடந்தவுடன் மூட்டு வலி என்று முணுமுணுக்கத் தொடங்கிவிடுகிறோம். உடனே இதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனைப் பின்பற்றாமல், நிவாரணத்தை மட்டும் பெற்றுக்கொண்டு வாழ்க்கையைத் தொடர்கின்றோம். இது தவறு என்கிறார் டாக்டர் V. கிருஷ்ணமூர்த்தி. இவர் சென்னையில் சர்வதேச தரமுடன் இயங்கி வரும் சென்னை மீனாட்சி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் ரூமாட்டாலஜிஸ்ட் நிபுணராக பணியாற்றி வருகிறார். இவரை சந்தித்து இத்துறை குறித்தும், இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன சிகிச்சைகள் குறித்தும் கேட்டோம்.

### ஆர்த்தரைடீஸ் என்று சொல்வது எதைக் குறிக்கிறது?

இன்றைய சூழலில் மருத்துவத்துறையில் உள்ளவர்களுக்கே ஆர்த்தரைடீஸ் என்றால் அது ஒரு வகையான மூட்டு வலி என்று தான் உணர்ந்து கொள்கிறார்கள். ஆர்த்தரைடீஸ் என்பது தமிழில் மூட்டு வாதம் என்று சொல்லலாம். இரண்டு எலும்புகள் இணையக்கூடிய பகுதியை மூட்டு என்கிறோம். அதில் அழற்சி ஏற்பட்டு வலி வீக்கம் போன்றவை ஏற்பட்டால் அதற்கு ஆர்த்தரைடீஸ் என்று பெயர். இதற்கு முன்னர் இதனை ரூமாய்ட்டிஸம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ரூமாய்ட்டிஸம் என்பது பொதுவாகவும், ஆர்த்தரைடீஸ் என்பது மருத்துவ ரீதியாகவும் குறிப்பிடப்படுகின்றன.

மூட்டுகளில் வலி ஏற்பட்டால் நம்மால் நடக்க இயலாது. சௌகரியமாக உட்கார இயலாது. உணவை கைகளால் பிசைந்து சாப்பிட இயலாது. நம்முடைய ஒவ்வொரு அசைவிற்கும் மூட்டுகளின் உதவி தேவை. இத்தகைய வலி வந்தால், அவர்களை இந்தப் பாதிப்பு முடக்கி வைத்துவிடும். இன்றும் மூட்டுகளில் வலி வந்தால் யாரும் ரூமாட்டலாஜிஸ்ட்டை சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் கூட தோன்றுவதில்லை. அதனால் முதலில் இத்தகைய மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதனை முன்னுறுத்தியே ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் 12ம் திகதியை உலக ஆர்த்தரைடீஸ் தினம் என்ற பெயரில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த பிரிவு கடந்த பதினைந்து ஆண்டுகளாக தெற்காசியா முழுவதும் சிறப்பாக இயங்கி வருகிறது.

### இது யாரை அதிகளவில் பாதிக்கிறது?

அனைத்து வயதினருக்கும் வரக்கூடும். ஆண் பெண் என இருபாலர்களுக்கும் வரக்கூடும். ஏனெனில் மூட்டு வலிகளில் மொத்தம் 150 வகையான உட்பிரிவுகள் உள்ளன. இவை குழந்தைகள், சிறார்கள், ஆண்கள், பெண்கள், முதியவர்கள் என ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஒவ்வொரு வகையான மூட்டு வாதத்தால் பாதிக்கப்படலாம்.

### இந்த நோய் வருவதற்கான காரணம் என்ன?

இதற்கு இது தான் காரணம் என்று குறிப்பிட்டுக் கூற முடியாது. பல காரணங்களால் இவை ஏற்படுகின்றன. இருந்தாலும் மரபியல் காரணங்களால் இவை வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. பின்னர் மரபியல் ரீதியாக இவை வருவதற்கான சாத்தியக்கூறு இருந்தும் ஒரு சிலருக்கு வராமலும் இருக்கக்கூடும். ஆனால் இவர்களுக்கு எப்போதாவது வைரஸ் காய்ச்சல் ஏற்பட்ட பின்னர் இத்தகைய பாதிப்பு வரக்கூடும். SLA என்ற ஒரு வகையான ஆர்த்தரைடீஸ் சுற்றுப் புறச் சூழல் பாதிப்பினால் வருகிறது. அதேபோல் நீரிழிவு நோயாளிகளுக்கு நோயெதிர்ப்பு சக்தி குறைவதால் செப்டிக் ஆர்த்தரைடீஸ் என்ற மூட்டு வாதம் வரும்.

### இதற்கான சிகிச்சை குறித்து....?

மூட்டில் வலியுடன் கூடிய வீக்கம் இருந்தால், அவர்கள் உடனடியாக சிகிச்சை பெறவேண்டும். ஒரு சிலருக்கு வீக்கத்துடன் அப்பகுதியில் சிவந்துவிடும். பின்னர் அப்பகுதியில் கையை வைத்தால் சூடாக இருக்கும். இவர்களும் உடனடியாக சிகிச்சை பெறவேண்டும். மருந்துகள் மூலமாக சிகிச்சை பெறலாம்.

### ரூமாட்டாய்ட் ஆர்த்தரைடீஸ் குறித்து...?

பதினான்கு முதல் நாற்பத்தைந்து வயதிற்குள் இருக்கும் பெண்களுக்கு அதிகமாக வரக்கூடியது. சிலருக்கு பதினாறு வயதிற்குள் வரக்கூடிய மூட்டு வாதத்திற்கு ஜுவனைல் ஆர்த்தரைடீஸ் என்கிறோம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின்கை விரல்கள், கால்விரல்கள், முழங்கை, மூட்டு, கணுக்கால் ஆகிய இடங்களில் உள்ள ஜாயிண்ட்டுகளில் வலியும், வீக்கமும் ஏற்படும். இவர்களுக்கு காலையில் எழுந்தவுடன் கை கால்கள் விறைப்புத்தன்மை இருக்கும். இவர்கள் சிறிய அளவிலான பயிற்சிகள் செய்தவுடன் அவை இயல்பாகிவிடும். அதன் பிறகு இதற்குரிய மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொண்டால் இவை சீராகும். இதனை அலட்சியப்படுத்தினால் நாளடைவில் எலும்புகளின் இயக்கத்தில் சுணக்கம் ஏற்பட்டு, எலும்புகள் அரிக்கப்பட்டு, தேயத் தொடங்கி, அவலட்சணமாக மாறிவிடுகிறார்கள். இதனை முன்கூட்டியே அறிந்து சிகிச்சை எடுத்தால் குணமடையாலாம். ஒரு சிலர் முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வந்தால் அவர்களுக்கு நோயை முழுமையாக குணப்படுத்த முடியவில்லை என்றாலும், நோயை முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வர இயலும்.

### ஆஸ்டியோ ஆர்த்தரைடீஸ் குறித்து...?

மூட்டு தேய்மானம் அடைவது தான் ஆஸ்டியோ ஆர்த்தரைடீஸ் என்கிறோம். கால் மூட்டுகளில் இரண்டு எலும்புகளுக்கிடையே பாதுகாப்பிற்காக இருக்கும் கார்ட்டிலேஜ் எனப்படும் குருத்தெலும்பு தேய்வதாலோ அல்லது பாதிப்படைவதலோ தான் இவ்வகையான பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு சிலருக்கு தற்போது நாற்பது வயதிலேயே வந்துவிடுகிறது. எலும்புகளின் அமைப்புகளில் சீரற்ற தன்மை, உடல் எடை, உடற்பயிற்சியின்மை, அதிகப்படியான உடற்பயிற்சி போன்ற காரணங்களால் இவை ஏற்படுகின்றன. தொடக்க நிலையில் இருந்தால் மருந்து மற்றும் மாத்திரைகளால் குணப்படுத்த முடியும். பாதிப்பு அதிகமாகி மூட்டு வலுவிழந்திருந்தால் எலும்பு மருத்துவ நிபுணர் ஒருவரை அணுகி மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம். மேலும் சந்தேகங்கள் இருந்தால் 0091 11 12938900 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

நன்றி : தமிழ் டைம்ஸ்

# கிறிஸ்துவின் உயிர்ப்பு திருவிழிப்பு திருவழிபாடு



கிறிஸ்துவின் உயிர்ப்பு திருவிழிப்பு திருவழிபாட்டை ஏப்ரல் 15, இச்சனிக்கிழமை உள்ளூர் நேரம் இரவு 8.30 மணியளவில் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒளி வழிபாடு, இறைவார்த்தை வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்ட இத்திருவழிபாட்டில், முதலில் ஒளி வழிபாட்டில், புதுத்தீயை மந்திரித்தார் திருத்தந்தை. பின்னர், பாஸ்கா திரி ஏற்றி, அத்திரியுடன் பசிலிக்காவுக்குள் பவனியுடன் வந்தார் திருத்தந்தை. பின்னர், பாஸ்கா புகழுரை பாடப்பட்டது. பின்னர் இறைவார்த்தை வழிபாட்டோடு திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. இதில், திருத்தந்தை வழங்கிய மறையுரையில், எங்கெல்லாம் கல்லறையும், சாவும் உறுதியாக நிலைபெற்றுள்ளதோ, அங்கெல்லாம், ஆண்டவர் உயிர் வாழ்கிறார் என்ற செய்தியைப் பறைசாற்றச் செல்வோம். தங்கள் நம்பிக்கை, கனவு, மாண்பு அனைத்தையும் புதைத்துவிட்ட மனிதர்களில், கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழ விழைகிறார். இந்த நம்பிக்கை வழியில் நம்மை அழைத்துச் செல்லும் தூய ஆவியாருக்கு, நாம் அனுமதி தர மறுத்தால், நாம் கிறிஸ்தவர்கள் அல்ல. இந்தப் புதிய உதயத்தால், வியப்புற்று மகிழ்வதற்கு நம்மையே கையளிப்போம். அவரது அன்பும், கனிவும் நம்மை வழிநடத்த அனுமதிப்போம் என்று உரைத்தார்.

இத்திருப்பலியின், திருமுழுக்கு வழிபாட்டில், இரண்டு இத்தாலியச் சிறார், சீனாவைச் சேர்ந்த Jiana Chiara Xu, மலேசியாவைச் சேர்ந்த Wong Wee Vern, இன்னும். மால்ட்டா, அல்பேனியா, அமெரிக்க ஐக்கிய நாடு, செக் குடியரசு, இஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 11 பேருக்குத் திருமுழுக்கு அளித்து, உறுதிபூசுதல் அருளடையாளங்களையும் வழங்கினார். ஏறக்குறைய மூன்று மணி நேரம் நடைபெற்ற இத்திருவிழிப்பு வழிபாட்டின் இறுதியில் எல்லாருக்கும் தனது ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏப்ரல் 16, ஞாயிறன்று, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தனது 90வது பிறந்த நாளைச் சிறப்பித்தார். திருத்தந்தை அவர்களை வாழ்த்தி அவருக்காகச் செபிப்போம். 2013ம் ஆண்டில் பாப்பிறை தலைமைப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து, அகிலத் திருஅவையையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய எளிமையும், தாழ்மையும் கொண்டவர் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். திருஅவையின் 600..

15ம் பக்கம்




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

**"இந்த புனித வாரத்தில் இயேசுவை நோக்கி நம் பார்வையைத் திருப்பி, நமக்காக இயேசு மேற்கொண்ட தியாகத்தின் மறையுண்மையை, மேலும் சிறப்பாக புரிந்துகொள்வதற்குத் தேவையான அருளை வேண்டுவோம்"**

**"நாம் நம் வழக்கமான பாதைகளை உடைத்துச் செல்வது நமக்கு நல்லது, ஏனென்றால், மிகுந்த கனிவும், தம்மையே வழங்குவதில் கொடைவள்ளலுமான இறைவனின் இதயத்திற்கு இது ஏற்புடையது"**

**"இயேசுவின் திருச்சிலுவையே! கடவுள் மீதும், நன்மைத்தனத்தின் மீதும், ஒளியின் மீதும், நாங்கள் கொள்ளவேண்டிய பேரார்வத்தைத் தூண்டியருளும்"**

**"கிறிஸ்துவின் சிலுவையே, இரவின் இருளைவிட, புலரும் ஞாயிறு சக்திமிக்கது என்பதையும், இறைவனின் நிரந்தர அன்பு எப்போதும் வெல்கிறது என்பதையும் எங்களுக்குச் சொல்லித் தாரும்"**

**மகிழ்வையும், நம்பிக்கையையும் நீங்கள் அனைவருக்கும் எடுத்துச் செல்வீர்களா!"**

# உயிர்ப்பு விழா திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை



உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறு காலை 10 மணிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் தலைமையேற்று நடத்திய திருப்பலியில் வழங்கிய மறையுரையின் சுருக்கம்:

அன்பு சகோதர, சகோதரிகளே, "இயேசு உயிர்த்துவிட்டார்" என்ற செய்தியை இன்று திருஅவை சப்தமிட்டு கூறுகிறது, பாடுகிறது. ஏன்? பேதுரு, யோவான், பெண்கள் அனைவரும் வேதனையால் மூடப்பட்ட உள்ளங்களுடன் கல்லறைக்குச் சென்றனர். அவர்களைப் பொருத்தவரை, இறந்தவர் மீண்டும் உயிர் பெற்றெழுவது இயலாத ஒன்று. இத்தகைய மனநிலையே தோல்வி. தோல்வி, நம்மை கல்லறைக்கு அழைத்துச் செல்லும்.

கல்லறைக்குச் சென்றவர்களிடம், வானதூதர், "அவர் இங்கில்லை, உயிர்த்துவிட்டார்" என்று கூறினார். இச்செய்தியைத் தொடர்ந்து, குழப்பங்கள் எழுந்தன. தங்கள் தலைவருக்கு நடந்ததுபோல் தங்களுக்கும் நிகழும் என்று அஞ்சிய சீடர்கள், மேலறையில் தங்களையே மூடி வைத்துக்கொண்டனர். மூடியிருந்த சீடர்களின் உள்ளங்களைத் திறக்க, உயிர்த்த இயேசு அவர்கள் முன் பலமுறை தோன்றினார்.

திருஅவையும் தோல்விகளைச் சந்தித்துள்ளது. அந்நேரங்களில், நாம் அச்சத்தால் நம் உள்ளங்களை மூடி வைத்துள்ளோம். நம்மிடம் இன்று, "இயேசு உயிர்த்துவிட்டார்" என்று, திருஅவை சொல்கிறது. இது கற்பனை அல்ல, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வெறும் விழா நிகழ்ச்சியும் அல்ல.

கட்டுவோரால் தூக்கி எறியப்பட்ட கல், மூலைக்கல்லாக மாறியதை, கிறிஸ்துவின் உயிர்ப்பில் நாம் கொண்டாடுகிறோம். தூக்கியெறியும் கலாச்சாரத்திற்குப் பழகிவிட்ட நாம், பலவற்றைத் தூக்கியெறிகிறோம். துன்பமும், கொடுமையும் சூழ்ந்த இவ்வுலகில், சிறு, சிறு கற்களாக இருக்கும் நாம் அனைவருமே மதிப்பு பெற்றவர்கள். யாரையும் தூக்கி எறிய இயலாது. நம்மைச் சுற்றி நிகழும் அனைத்து துயரங்களையும் நம்மால் புரிந்துகொள்ள இயலாவிட்டாலும், "கிறிஸ்து உயிர்த்துவிட்டார்" என்பதை, நம்பிக்கையோடு எடுத்துச் சொல்வோம்.

# அருள்பணி Jacques Hamelஐ அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பம்



இஸ்லாமிய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களால் 2016ம் ஆண்டு ஆடி 26ம் திகதி கொல்லப்பட்ட அருள்பணி Jacques Hamel அவர்களை, அருளாளராக உயர்த்த தேவையான ஆய்வுப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று, பிரெஞ்சு நாட்டுப் பேராயர் ஒருவர் கூறியுள்ளார். பிரெஞ்சு நாட்டின் Rouen உயர் மறைமாவட்டத்தின் பேராயர், Dominique Lebrun அவர்கள், சித்திரை 13, புனித வியாழனன்று காலை, Notre Dame பேராலயத்தில், புனித எண்ணெய் அர்ச்சிக்கும் திருப்பலியை நிறைவேற்றிய வேளையில், கூடியிருந்த அருள்பணியாளர்கள், தியாக்கோன்கள் மற்றும் மக்களிடம் இந்த அறிக்கையை வெளியிட்டார். 2016ம் ஆண்டு ஆடி 26ம் திகதி, 85 வயது நிறைந்த அருள்பணியாளர் Jacques Hamel அவர்கள், Saint-Étienne-du-Rouvray என்ற கோவிலில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த வேளையில், இஸ்லாமிய தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த இரு இளையோரால் கழுத்து அறுபட்டு கொல்லப்பட்டார். ஒருவரது மரணத்திற்குப் பிறகு ஐந்தாண்டுகள் காத்திருந்து பின்னரே அவரது புனிதர்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விதிமுறையிலிருந்து விலகி, அருள்பணி Jacques Hamel அவர்களை புனிதராக உயர்த்தும் வழிமுறைகளை மேற்கொள்ள, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2016ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அனுமதி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கொல்லப்பட்ட அ. சகோ. ராணி மேரியின் வாழ்வுமுறை ஏற்பு

இந்தியாவில், 22 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்ட அருள்சகோதரி, இறையடியார் ராணி மேரி வட்டாலில் அவர்களை, அருளாளராக உயர்த்துவதற்கு, அவருடைய வீரத்துவமான வாழ்வு குறித்த விவரங்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ அவர்கள் திருத்தந்தையைச் சந்தித்து, புனிதர் மற்றும், அருளாளர் நிலைகளுக்கு உயர்த்துவதற்கென, சிலரின் வாழ்வு முறைகளை பரிந்துரைத்தவேளையில், அருள்சகோதரி, இறையடியார் ராணி மேரி அவர்களை, மறைசாட்சியாக, அருளாளர் நிலைக்கு உயர்த்துவதற்கு ஒப்புதல் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் அருள்சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருள்சகோதரி, இறையடியார் ராணி மேரி அவர்கள், 1995ம் ஆண்டு மாசி 25ம் திகதி, பேருந்தில் இன்டோர் நகருக்குப் பயணம் செய்துகொண்டிருந்தபோது, 41 வயது மதிக்கத்தக்க சமந்தார் சிங் என்பவரால், குறைந்தது ஐம்பது முறைகள் கத்தியால் குத்தப்பட்டு இறந்தார். மத்திய பிரதேச மாநிலத்தில், இன்டோர் மறைமாவட்டத்தில், ஏழைகள் மத்தியில், அருள்சகோதரி, இறையடியார் ராணி மேரி அவர்கள் ஆற்றிவந்த பணிகளால் எரிச்சலடைந்த சில பண்ணையார்களின் தூண்டுதலால், இவர் கொலைசெய்யப்பட்டார். இச்சகோதரியின் குடும்பத்தினர், கொலையாளியான சமந்தார் சிங் அவர்களை மன்னித்து, அவரை அடிக்கடி சிறையில் சென்று சந்தித்துப் பேசியதன் பயனாக, தற்போது, சமந்தார் சிங் மனம் மாறி, அருள்சகோதரி இறையடியார் ராணி மேரி அவர்களின் பக்தராக மாறியுள்ளார்.

1954ம் ஆண்டு தை 29ம் திகதி கேரளாவின் கொச்சி நகருக்கு அருகிலுள்ள Pulluvazhy என்ற ஊரில் பிறந்த அருள்சகோதரி ராணி மேரி அவர்கள், Kidangoorல், பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையில், 1972ம் ஆண்டில் சேர்ந்து, 1974ம் ஆண்டில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார். 1975ம் ஆண்டில் வட இந்தியாவில் Bijnorல் தனது மறைப்பணியைத் தொடங்கிய இச்சகோதரி, 1992ம் ஆண்டில், Udainagarல் பணியாற்றச் சென்றார். 1995ம் ஆண்டு மாசி 25ம் திகதி, தனது 54வது வயதில், கொல்லப்பட்டார்.

'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

**வாழ்விற்கு புதிய வழிமுறைகள்**

அதிகாரம் 01



## 11. உண்மையான சமயம் இதயத்தைச் சார்ந்தது

"நீங்கள் தர்மம் செய்யும் போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்"

**மத் 6:1** மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

**மத் 6:2** நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

**மத் 6:3** நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.

**மத் 6:4** அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

## 12. செபத்தைப் பற்றி கற்பித்தல்

**மத் 6:7** மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

**மத் 6:8** நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.

**மத் 6:9** ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!

**மத் 6:10** உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக!

**மத் 6:11** இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.

**மத் 6:12** எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்.

**மத் 6:13** எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.")

**மத் 6:2** மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.

**மத் 6:2** மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

விளக்கம் : இயேசு சீடர்களுக்குத் தமக்கே உரித்தான முறையில் வேண்டக் கற்றுக் கொடுக்கிறார். அது பழைய ஏற்பாட்டு முறையிலிருந்து வேறுபட்டது. அவர் போதிப்பது எல்லா மனிதர்களும் கடவுளுடைய அன்புக் குழந்தைகள், எனவே கடவுளை அழைக்கும் போது சிறு பிள்ளைகள் தங்கள் தந்தையரைப் பாசத்தோடு அழைக்கும் சொல்லையே பயன்படுத்தக் கற்றுக்கொடுக்கின்றார். அதாவது, அப்பா அல்லது தந்தாய். இவ்வேண்டலில் முதற்பகுதி கடவுளின் மகிமை பற்றியும், இரண்டாம் பகுதி மனிதர்களின் தேவைப் பற்றியும் சொல்கிறது..

## XVII கிறிஸ்துவின்...

வருட வரலாற்றில், பாப்பிறை தலைமைப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த முதல் திருத்தந்தை இவர். இவரின் 90வது பிறந்த நாள், இத்திங்களன்று எளிமையான முறையில் சிறப்பிக்கப்படுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறன்று, இத்தாலியின் அசிசி நகரில் கட்டப்பட்டுள்ள புதிய திருத்தலத்திற்குத் தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். இப்புதிய திருத்தலம், அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை திருஅவைக்கு நினைவுபடுத்துகின்றது. இப்புனிதர் உலகமயமானப் பொருள்களைக் களைந்துவிட்டு, நற்செய்தியின் விழுமியங்களை அணிந்துகொள்ள வேண்டுமென்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றார். நம்மையே களைந்து, ஏழைகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். தேவையில் இருப்போருக்கு உதவி, ஏழைகளோடு வாழ்வதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என அச்செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 12 சிலுவைப்பாதையின்..

செய்யும் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளோம். குற்றமேதுமற்ற இறைமகனே! இயேசுவே! உமது சிலுவை முன் மண்டியிட்டு கிடக்கிறோம். உமது விலாவிலிருந்து வடிந்த இரத்தமும், நீரும், எங்கள் பாவக்கறைகளைக் கழுவட்டும். வன்முறையால், போரால், அக்கறையின்மையால் துன்புறும் எங்கள் சகோதர, சகோதரிகளை நினைவுகூர்ந்தருளும். எங்களை சுயநலத்தில் கட்டிப்போட்டிருக்கும் தளைகளை உடைத்தருளும். கிறிஸ்துவே, உமது சிலுவையை ஏற்பதில் நாங்கள் வெட்கப்படாமலிருக்க கற்றுத்தாரும். சிலுவையைக் கொண்டு நாங்கள் மற்றவரை அடக்காமலிருக்கவும், அதனை மரியாதையுடன் வணங்கவும் கற்றுத்தாரும். ஆமென்.

திருத்தந்தையின் தலைமையில் நடைபெற்ற இச்சிலுவைப்பாதையில், 20,000த்திற்கும் மேலானோர் பங்கேற்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 14 இரத்தினப்புரி மறைமாவட்டம்

மலையக மக்களுக்காக விசேட ஒழுங்கு செய்யப்பட்டு வருடந்தோறும் நடாத்துவதற்கென மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்திசிறி பெரேரா ஆண்டகையினால் பிரகனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வருடமும் கடந்த 2017.03.18 சனிக்கிழமை அன்று பங்குத்தந்தை அருட்பணி ரொமேஷ் அடிகளாரின் தலைமையில் களபொட தோட்ட கத்தோலிக்க கல்லறைத் தோட்டத்திலே நடைபெற்றது. கடந்த வருடத்தை விட இவ்வருடம் ஏராளமான மக்கள் பங்குபற்றியது அவர்கள் இறை இயேசுவில் கொண்ட பக்தியையும் வெளிப்படுத்தியது.

பலாங்கொடை, இரத்தினப்புரி, தொலஸ்வலை, கேகாலை, ஆகிய பங்கிலிருந்து பல தோட்டங்க -ளிலிருந்தும் ஏராளமான மக்களும் கொழும்பு வத்தளை பிரதேசங்களிலிருந்து தமிழ் பேசும் மக்களும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பங்குத்தந்தையின் ஒழுங்கிற்கேற்ப சிலுவை மரத்தை - ஆண்களும், பெண்களும் தோலில் சுமந்து சென்ற காட்சி "மரணத்தை வென்ற மாவீரன் "ஆண்டவர் இயேசுவின் மீது கொண்டுள்ள பயபக்தி, பற்று, பாசத்தை வெளிப்படுத்தியது.

அருட்தந்தையர்களின் பங்களிப்பு சிறப்பாக வழங்கப்பட்டிருந்தது குறிப்பாக மறைமாவட்ட மறைக் -கல்வி நிலையத்தின் இயக்குனர் அருட்பணி என்டன் மொரிஸ் அடிகளார், இரத்தினப்புரி பேராலய உதவி பங்குத்தந்தை அருட்பணி சம்பத் விஜேரட்ண அடிகளார், அருட்பணி, அனுஷ்க அடிகளார், பாலர் சபை இயக்குனர் அருட்பணி கேப்ரியல் அடிகளார், பலாங்கொடை அருட்பணி என்றீசன் ஜோய் அடிகளார் அனைத்து அருட்தந்தையர்களும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் மக்களின் மனமாற்றத்தைக் கொண்டுவரும் முறையில் தத்தமது மறையுரைகளை ஆற்றினர்.

இறுதியாக இயேசு சிலுவையில் கூறிய ஏழுவார்த்தைளை தியானித்தபோது இறைமக்கள் கண்ணீர் சிந்தி, கதறி அழுது புலம்பி செபித்து அவர்கள் இயேசுவில் கொண்டுள்ள அன்பு விசுவாசம் வெளிப்படுத்தினர்.

இன்றைய நாட்களலே பலவகையான சபைகள் நேற்றும் இன்றும் நாளையும் பூக்கும் காளான்களை ருசிப்பார்க்கும் அலைந்து திரியும் நம் கத்தோலிக்க மக்கள் தாம் செய்வது இன்னதென்று அறியாமல் அலைமோதும் மக்கள் கூட்டத்திலே அனைத்து மக்களும் மனம் மாறாவிட்டாலும், ஒரு சிலராவது மனம் மாறி தங்களது அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு இறை விசுவாசத்திலே தங்கி வாழ வேண்டும் என்பதே! எனவே எம்மக்கள் தங்களது இறை இயேசுவில் கொண்டுள்ள அன்பை, பக்தியை பாசத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மன்றாடுவோமாக

**நீங்கள் வாழ்க்கையில் முறையாக கடைப்பிடிக்க வேண்டிய மூன்று செயல்கள்...**

**அத்தியாவசியமான மூன்று :-**
நேர்மை, தூய்மை, உண்மை

**பாராட்டப்பட வேண்டிய மூன்று:-**
அறிவு, அழகு, இன்னிசை

**விருத்தி செய்யப்படவேண்டிய மூன்று:-**
சுறுசுறுப்பு, அனுதாபம் தன்னிறைவு

**மரியாதை செய்யப்பட வேண்டியவ மூன்று:-** முதுமை, சமயம், சட்டம்

**முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய மூன்று:-**
காலம், ஆரோக்கியம், செல்வம்

**அடக்கி ஆள வேண்டிய மூன்று:-**
நா, கோபம், செய்கை

**தவிர்க்கப்பட வேண்டிய மூன்று:-**
சோம்பல், பொய், வசை

**உயர்விக்கப்பட வேண்டிய மூன்று:-**
சத்தியம், கடவுள், அழகு

இவை அனைத்தையும் கடைப்பிடித்தாலே போதும் நம் வாழ்வில் துன்பங்கள் நீங்கி நல்ல வளமுடன் வாழ முடியும்.

# வழித்துணையாய் வந்தவர்.



வானத்தில் வெண்மேகங்கள் கூட்டங்கூட்டமாக எங்கோ யாத்திரை செல்வதுபோல் தவழ்ந்து சென்றன. சூரியனும் தன் வெப்பக் கதிர்களை அன்று குறைத்துக் கொண்டதாகத் தோன்றியது. அந்த வசந்தகால ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் மெலிதாக குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்ததால் எருசலேம் நகரத்திலிருந்து வெளியூர்களுக்கு சென்று கொண்டிருந்த பயணிகளுக்கு பிரயாணம் சுகமாக இருந்தது.

வடமேற்கு திசையில் இறங்கிச் சென்ற மலைப்பாதையில் அந்த இரண்டு பயணிகளும் தங்கள் முன்னே தெரிந்த சற்று கரடுமுரடானப் பாதையில் கவனமாக அடிமேல் அடிவைத்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மனதில் இருந்த குழப்பமான சிந்தனை, அவர்களின் முகத்தில் தெரிந்தது. மூன்று நாட்களுக்கு முன் பாஸ்கா விழா காலத்தில் ஓய்வுநாளுக்கு முந்தைய நாளான வெள்ளிக்கிழமையன்று நகரத்தின் கோட்டை மதிலுக்கு வெளியே கல்வாரிக் குன்றில் நாசரேத்து போதகருக்கு நிகழ்த்தப்பட்ட மரண தண்டனையும், அங்கே கறைபடிந்த கழுமரத்தில் உடல் சிதைந்து உயிரிழந்து தொங்கிய அந்த சடலத்திற்கு அவசரமாக நடந்த சவஅடக்கமும், அந்த இரண்டு பயணிகளின் உரையாடலின் முக்கிய கருத்தாத இருந்தது.

**‘அந்தப் போதகர் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம்? யூதேயா தேசத்திற்கும், இஸ்ராயேல் மக்களுக்கும் உரோமை சாம்ராஜ்ஜியத்தின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று தந்து, தாவீது அரசரின் ஆட்சியை இந்த மண்ணில் மீண்டும் நிறுவிட தோன்றியிருக்கும் தலைவர் இவர் என்றல்லாவா நினைத்திருந்தோம்? உண்மையே பேசி, நன்மையே செய்த அந்த போதகரும் இறந்து போனாரே’** என்று அந்த பயணிகளில் ஒருவராக கிளயோப்பா வருத்தத்தோடு சொன்னார். அவருடைய தோழர், தன் தலையில் போர்த்தியிருந்த துணியை சரி செய்துகொண்டு, **‘உண்மைதான், நண்பரே! அவர் செய்த பல அற்புத செயல்களைக் கண்டு, அவர் ஒரு தெய்வப்பிறவி என்று நாம் நினைத்தது பொய்யாகிப் போனது... நாம் ஏமாந்துவிட்டோமோ?’** என்று தனது மனதிலிருந்த சந்தேகத்தை வெளிப்படுத்தினார். “ஒன்றும் புரியவில்லை, அய்யா! ஒரே குழப்பமாக இருக்கிறது... ” என்று பதில் சொன்ன கிளயோப்பா, தன் கைநழுவி கீழே விழுந்த ஊன்றுகோலை எடுப்பதற்காக குனிந்தார். அவ்வப்போது தங்களுக்குப் பின்னால் ஒரு ஆள் வேகமாக வருவதைக் கண்டார். அந்த பயணியும் இவர்களோடு சேர்ந்து கொள்வதற்காக வருவதுபோல் தெரிந்தது.

**‘ஷலோம்’** என்று அவர்களுக்கு வாழ்த்து கூறிய அந்த புதிய ஆள், நட்போடு புன்முறுவல் பூத்தார். இரு நண்பர்களும் புதிய மனிதருக்கு சமாதான வாழ்த்து கூறினார்கள். அவர்களோடு நடக்கத் தொடங்கிய அந்த மனிதர் **‘நானும் உங்களோடு வரலாமா?’** என்று வினவினார். அதற்கு கிளயோப்பா, **‘எம்மாவு கிராமத்திற்கு போய்க் கொண்டிருக்கின்றோம். உமக்கு சிரமம் இல்லையென்றால் நீரும் எம்மோடு வரலாம்’** என்று கூறினார். சிறிது தூரம் மௌனமாக அவர்கள் மூவரும் நடந்தார்கள். அந்த மௌனத்தைக் கலைக்கும் விதமாக கிளயோப்பாவின் தோழர், **‘இவ்வளவு விரைவாக இதுபோன்ற முடிவு வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை...’** என்றார். “**ஆமாம்... நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் வேறொன்று நினைக்கிறது போலும்...’** என்று கிளயோப்பா பதிலுரைத்தார். இப்போது அந்த புதிய பயணி, **‘நீங்கள் எதை குறித்து இவ்வளவு கவலையோடு பேசிக் கொள்கிறீர்கள்?’** என்று கேட்டார். கிளயோப்பா சட்டென நின்றார். அந்த புதிய பயணியை ஆச்சரியத்தோடு பார்த்து, **‘நீர் எந்த ஊரில் இருக்கின்றீர்? எருசலேம் பட்டணத்தில் வசிக்கின்ற எல்லோரும் கடந்த இரண்டு நாட்களாக ஒரே ஒரு விஷயத்தை பற்றித்தானே பேசிக்கொண்டு இக்கிறார்கள். நாசரேத்தூர் இளம் போதகர் இயேசுவுக்கு மரண தண்டனை கொடுத்து அவரை கொன்றுவிட்டார்களே... உமக்கு எதுவுமே தெரியாதா?’** என்று கேட்டார். அந்த புதிய மனிதர் முகத்தில் சலனமின்றி மற்ற இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

தலைமை குருவின் சேவகர்களும், மூப்பரும் இரகசியமாக சதிசெய்து மூன்று நாட்களுக்கு முன் இரவு நேரத்தில் இயேசுவை சிறைபிடித்தது, விசாரணை என்ற பெயரில் அன்று இரவு முழுவதும் அவரை அடித்து அவமானப்படுத்தி கொடுமை செய்தது, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆளுநரின் விசாரணைக்கு பிறகு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, அதன் பின்னர் அன்று பகல் பொழுதில் கொல்கொத்தா குன்றில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு மரணமடைந்தது. இப்படி கடந்து மூன்று நாட்களில் நடந்த சம்பவங்களை உணர்ச்சி பொங்க விவரித்த கிளயோப்பாவின் நண்பர், **‘இன்று விடியற்காலையில் கல்லறைக்குச் சென்ற சில பெண்கள், அங்கே இயேசுவின் சடலத்தை காணவில்லை என்றும், அதை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள் என்றும் கல்லறையில் வானதூதர்கள் இருந்தார்கள் என்றும் சொன்னார்கள்... மேலும் இயேசு உயிரோடிருக்கின்றார் என்றும் சொல்கிறார்கள்.... இறந்து போனவர் எப்படி மீண்டும் உயிரோடு வரமுடியும், அய்யா?’** என்று கேட்டார்.

கிளயோப்பா தொடர்ந்து பேசினார் : **‘அவர்தான் மெசியா என்று நம்பிக்கை வைத்து அவரைப் பின்தொடர்ந்து வந்தோம்... ஆனால் இப்போது? இயேசுவைக் காணவில்லை... எல்லாம் வெறுமையாகிவிட்டது...’** பாதையின் ஓரமாக நின்றபடி பேசிய கிளயோப்பா, தூரத்தில் எங்கோ நோக்கியவாறு நீண்ட பெருமூச்சுவிட்டார். பின்னர் மேற்கொண்டு நடக்க ஆரம்பித்தார். மலைப்பாதை சற்று வளைந்து கீழறங்கிய அந்த இடத்திற்கு அவர்கள் வந்தபோது, அந்த புதியவர், **‘நண்பர்களே! மெசியாவைக் குறித்து ஆகமநூல்களில் இறைவாக்கினர் உரைத்தவற்றை நீங்கள் வாசித்ததில்லையா?’** என்று கேட்டார். வர்கள் உதட்டைப் பிதுக்கி, தங்களுக்கு தெரியாது என்பது போல தலையை அசைத்தார்கள்.

இப்போது அந்த புதிய பயணி, மறைநூலில் மெசியாவை குறித்து கூறப்பட்ட பல்வேறு முன்னறிவிப்புகளை எடுத்துக்காட்டி அவற்றின் பொருளை நிதானமாக விளக்கிக் கூறினார். தான் மாட்சிமை அடைவதற்கு முன், மெசியா துன்பங்களை அனுபவிக்கவேண்டும் என்பதை இறைவாக்கினர் எசாயாவும் இன்னும் பல இறைவாக்கினர்களும் எழுதியுள்ளதை சுட்டிக் காட்டினார். மேலும் இயேசு தனது சீடர்களோடு இருந்த காலத்தில் **‘நான் துன்புற்று உயர்த்தப்படுவேன், இறந்த பின்னர் மூன்றாம் நாளில் உயிர்த்து எழுவேன்’** என்று பலமுறை அவர்களுக்கு கூறியதையும் எடுத்துச் சொல்லி, மெசியாவைக் குறித்து மறைநூலில் சொல்லப்பட்டவை எல்லாம் எவ்வாறு இயேசுவில் முழுமையாக நிறைவேறியுள்ளன என்று விளக்கினார்.

கிளயோப்பாவும் அவருடைய நண்பரும் அந்த புதிய மனிதர் சொன்னதையெல்லாம் திகைப்போடும் ஆச்சரியத்தோடும் கேட்டுக்கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள். புதிய பயணி சுட்டிக் காட்டிய மறைநூல் மேற்கோள்களெல்லாம் அவர்கள் பலமுறை வாசித்தவைதான்... ஆனாலும் இதுவரை புரியாத புதிய அர்த்தங்கள் அவர்களுக்குப் புரிந்தன... பல சந்தேகங்களுக்கு விடைகள் கிடைத்தன... சிக்கலான முடிச்சுகளாக இருந்த குழப்பங்கள் தெளிவாயின... அவர்கள் மனதில் இருந்த சஞ்சலம் இருள் விலகி, நம்பிக்கை ஒளி உதித்தது... எம்மாவு போகும் பாதையில் தாங்கள் வெகுதூரம் வந்துவிட்டோம் என்பதே அவர்களுக்கு தெரியவில்லை....

கதிரவன் தனது கிரணங்களை சுருக்கிக் கொண்டு மேற்கு திசையில் மலைகளின் வளைவுகளில் இறங்கிக் கொண்டிருந்தான். மாலைநேரக்காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. அவர்கள் மூவரும் பாதையின் ஓரமாக இருந்த ஒரு மண்டபத்தை அடைந்தபோதுதான், தாங்கள் எம்மாவு கிராமத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம் என்பதை கிளயோப்பா உணர்ந்தார். அதனை குறிப்பால் கண்டுகொண்ட புதிய பயணி, அந்த பயணத்தில் அவர்களோடு கூட தன்னையும் சேர்த்துக் கொண்டதற்காக நன்றி கூறிவிட்டு, பாதையில் முன்னேறி நடக்கத் தொடங்கினார். ஆயினும் கிளயோப்பாவுக்கும், அவருடைய நண்பருக்கும் அவரை விட்டு பிரிய மனமில்லை. தங்கள் மனதில் நம்பிக்கையை விதைத்து, மறைநூல் வசனங்களின் உட்பொருளை புரிந்திடச் செய்த அந்த பயணியை தங்கள் வீட்டிற்கு கூட்டிச் செல்ல நினைத்தார்கள். கிளயோப்பா, **‘அய்யா, மலை நேரமாயிற்று... இன்னும் கொஞ்ச நேரத்தில் இருள் சூழ்ந்துவிடும்... இன்றிரவு எங்களோடு தங்கும்... தயைகூர்ந்து எங்கள் வீட்டிற்கு வாரும்’** என்று அழைத்தார். அவரும் அதற்கு சம்மதித்து, அவர்களோடு வந்தார்.

அன்று இரவு உணவுக்காக பந்தியமர்ந்தபோது, கிளயோப்பா ஒரு அப்பத்தை அந்த புதிய பயணியிடம் கொடுத்து, இறைவாழ்த்து மொழிந்திட கேட்டுக் கொண்டார். அவ்வாறே அவர் அப்பத்தைக் கையிலெடுத்து உயர்த்திப் பிடித்து, **‘தந்தையே, அனைத்துலகின் ஆண்டவரே, இந்த மண்ணிலிருந்து எங்களுக்கு உணவு அருள்பவர் நீரே! உம்மைப் போற்றுகின்றோம்!’** என்று கூறி, அப்பத்தை பிட்டு அவர்கள் இருவருக்கும் கொடுத்தார். அப்போதுதான் கிளயோப்பா அந்த பயணியின் கண்களை நேருக்கு நேரே பார்த்தார். அந்த கணத்தில் அவர்கள் சட்டென தங்கள் முன் அமர்ந்திருப்பவர் யார் என்று புரிந்துகொண்டார்கள்... ஆஹா! ஆண்டவரும் போதகருமான இயேசு அல்லவா?... அவர்களை நோக்கி புன்னகை புரிந்து கொண்டிருந்த இயேசுவை அவர்கள் வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவர் அந்த இடத்திலிருந்து மறைந்துவிட்டார்!.

கிளயோப்பாவும் அவருடைய நண்பரும் செய்வதறியாது வாயடைத்துப் போய், ஒருவரையொருவர் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். உள்ளத்தில் உவகையும், உடலிலே புது வலிமையும் பொங்கிட, கைகளை உயர்த்தியடி துள்ளி குதித்த கிளயோப்பா, உற்சாகத்தோடு கூவினார்; **‘உண்மைதான்... உண்மைதான்... அந்த பெண்கள் சொன்னது சரிதான்... இயேசு உயிரோடிருக்கிறார்...! அவர் உயிர்த்துவிட்டார்...!!’** **அவர்கள் இருவரும் வேகமாக வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். இரண்டு பேருடைய மனதிலும் ஒரே எண்ணமே மேலோங்கி நின்றது. ‘உயிர்த்த இயேசுவைக் கண்டோம்’** என்ற செய்தியை மற்ற சீடர்களுக்கு உடனே சொல்லவேண்டும்... சூழ்ந்திருந்த இருளையும், கடினமான பாதையையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆண்டவர் இயேசுவோடு தாங்கள் பயணம் செய்த அதே சாலையில் ஓட்டமும் நடையுமாக எருசலேம் நகரத்திற்கு விரைந்து போனார்கள். கிளயோப்பாவின் தோழர் உற்சாகம் பொங்க, **‘வழியிலே அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும் போது நமது உள்ளம் பற்றி எரிவது போல நாம் உணர்ந்தோம் அல்லவா?’** என்று கூறினார்.

எருசலேம் நகரத்தில் நுழைந்தவுடன் அவர்கள் இருவரும் சீடர்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு ஓடிவந்தார்கள். மூச்சிரைக்க மாடிப்படிகளில் ஏறிவந்து, மேலறையின் கதவை உடைத்துவிடுவது போல தட்டினார்கள். கதவைத் திறந்த பேதுருவை தள்ளிக்கொண்டு, உள்ளே நுழைந்தார்கள். தன்னை கட்டுப்படுத்த முடியாமல் கிளயோப்பா கூச்சலிட்டார். **‘அவர் உயிரோடிருக்கிறார்...! நமது ஆண்டவர் இயேசு உயிரோடிருக்கிறார்...! எங்களோடு பந்தியமர்ந்து அப்பத்தை பிட்டு எங்களுக்கு அவர் தந்தபோது, நாங்கள் அவரைக் கண்டுகொண்டோம்...!’**

அறையில் கூடியிருந்த சீடர்களில் ஒருவர் கைகளை உயர்த்தியபடி உரத்த குரலில் இறைப்புகழ் கூற, அனைவரும் ஒன்றிணைந்து பாடினார்கள்.

**‘ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே...! இன்று அக்களிப்போம்... அகமகிழ்வோம்..!**

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ)
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும்,
- பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்




## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.


| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %


## தொடர்புகொள்ளுங்கள்


இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com

